YOGA'S AND PLANET ASSISTANCE FOR FOREIGN VISIT

வெளிநாடு செல்லும் யோகங்களும், கோள் அமைப்புகளும்

A THESIS

Submitted by

S. MATHIYALAGAN
(Reg. No.D 15 AS 510)

in partial fulfillment for the award of the degree

of

DOCTOR OF PHILOSOPHY



DEPARTMENT OF ASTRO SCIENCE

FACULTY OF ARTS AND SCIENCE

BHARATH INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH

CHENNAI 600 073.

JANUARY 2020

BONAFIDE CERTIFICATE

Certified that this thesis titled entitled "**YOGA'S AND PLANET ASSISTANCE FOR FOREIGN VISIT**" is the bonafide work of **Mr. S. MATHIYALAGAN, (REGISTER No.D15AS510)** who carried out the research under my supervision.

Certified further, that to the best of my knowledge the work reported and in the publications by the scholar does not form part of any other thesis or dissertation, on the basis of which a degree or award was conferred on an earlier occasion of thesis of any other candidate.

SUPERVISOR

Signature of the Supervisor with official Seal

JOINT-SUPERVISOR
(if any)

Signature of the Supervisor with official Seal

DECLARATION

I declare that this synopsis entitled "**YOGA'S AND PLANET ASSISTANCE FOR FOREIGN VISIT**" is an original and bonafide work done by my own in the partial fulfillment of the requirement for the award of the degree of **Doctor of Philosophy** and submitted to the **Department of Astrology, Faculty of Arts and Science**, Bharath Institute of Higher Education and Research, was carried out under the supervision of of **Dr. K. NATARAJ, B.A., M.Sc., Ph.D.,** Visiting Professor, Department of Astrology, Faculty of Arts and Science, Bharath Institute of Higher Education and Research, is entirely original and has not been submitted for any degree or diploma earlier.

I further declare that this thesis does not form of any other thesis or dissertations on the basis of which a degree was awarded or conferred on earlier occasion on me or any other candidate.

PLACE: Chennai (S. MATHIYALAGAN)

DATE: **(REGISTER No.D 15 AS 510)**

BONAFIDE CERTIFICATE

Certified that this thesis titled entitled "**YOGA'S AND PLANET ASSISTANCE FOR FOREIGN VISIT**" is the bonafide work of **Mr. S. MATHIYALAGAN, (REGISTER No.D15AS510)** who carried out the research under my supervision.

Certified further, that to the best of my knowledge the work reported and in the publications by the scholar does not form part of any other thesis or dissertation, on the basis of which a degree or award was conferred on an earlier occasion of thesis of any other candidate.

SUPERVISOR

Signature of the Supervisor with official Seal

JOINT-SUPERVISOR
(if any)

Signature of the Supervisor with official Seal

ACKNOWLEGEMENT

I would like to thank the Honorable **Founder Dr. S. Jagatratchagan** and **Chancellor Dr. J. Sundeep Aanand** and Honorable Managing Director **Dr. E. Swetha Sundeep Anand,** respected **Vice-Chancellor Dr. V. Kanagasabai** for giving me an opportunity to pursue research program in Bharath University. I express my gratitude to **Pro – Vice chancellor Dr. K.P. Thooyamani** and **Dean Engineering Dr. J. Hameed Hussain** for providing constant support to submit this thesis in time.

I would like to thank **Dr. M. Sundararajan,** Dean – R & D to fecilitate to submit the synopsis of my research work successfully. I wish to place on record my deep sense of gratitude and heart-felt thanks to **Dr. M. Prem Jeyakumar**, Controller of examinations for giving valuable suggestions.

It is great pleasure to express my deep sense of gratitude to my Supervisor **Dr. K. Nataraj,** Visiting Professor, Department of Astrology, Faculty of Arts and Science, Bharath Institute of Higher Education and Research, for her valuable suggestion and guidance and encouragement at every stage of work.

A special thanks to my family. Words cannot express how grateful I am to my parents for the sacrifice that you've made on behalf. I would like to express appreciation to my beloved wife M. Bharathi, and my friends for their untiring efforts and constant support in presenting this study successfully.

Name of the Scholar

S. MATHIYALAGAN

நன்றியுரை

'வெளிநாடு செல்லும் யோகங்களும், கோள் அமைப்புகளும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்ய எனக்கு அனுமதி வழங்கிய சென்னை பாரத் பல்கலைக்கழக மேதகு நிறுவனர் அவர்களுக்கும், மேதகு வேந்தர் அவர்களுக்கும், இணை வேந்தர் அவர்களுக்கும். இணை துணை வேந்தர் அவர்களுக்கும், பதிவாளர் அவர்களுக்கும். தேர்வுத்துறை தலைவர் அவர்களுக்கும், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை புலமுதல்வர் அவர்களுக்கும், சோதிட அறிவியல்துறைத் தலைவர் திருமதி முனைவர் பேரா. தி. மகாலட்சுமி, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி., அவர்களுக்கும் எனத நன்றிகள் உரித்தாகும்.

எனது முனைவர் பட்ட சோதிட ஆய்வுக்கு வழிகாட்டியாக விளங்கிய முனைவர் திரு. கே. நட்ராஜ், டி.ஏ., பி.ஏ., எம்.எஸ்ஸி., பிஎச்.டி., (சோதிடம்) அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சோதிடவியலின் அடிப்படைகளை எனக்குக் கற்றுக் கொடுத்த எமது தந்தையார் பிரபல சோதிடர் காலம் சென்ற ஜி. சுப்பையா அவர்களுக்கும், என்னுடைய சோதிடவியல் அறிவுக்கு ஒரு நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்த என்னுடைய பேரா. முனைவர் தி. விமலன் அவர்களுக்கும், என்னுடைய இளமுனைவர் பட்ட ஆராய்ச்சிக்கு என்னை வழிநடத்திய பேரா. முனைவர் பாடூர் ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள். அவர்களுக்கும் இந்த ஆய்வை சமர்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆய்வுக்கான சாதகங்களை எனக்கு கொடுத்துதவிய வெளிநாட்டில் வாழும் எனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், சாதகக் குறிப்புகள் கொடுத்து உதவிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஆய்வுக்கு உதவியாக இருந்த எனது துணைவியார் திருமதி பாரதி எனது மகன், மகள், எனது நண்பர்கள் மற்றும் என் உறவினர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஆய்வேட்டை சிறந்த முறையில் தயாரித்து வழங்கிய சென்னை கம்ப்யூட்டர் ஆப்செட் அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

கு. சோ.	: குடும்ப சோதிடம்
அ. சோ.	: அடிப்படை சோதிடவியல்
சோ. இ.	: சோதிட இயல்
சா. ப. வ.	: சாதகப் பலன்களை வரையறுத்தல்
ந. கா. சோ. வ.	: நவீன கால சோதிட வளர்ச்சி
உ. கா.	: உத்திரகாலாம்ருதம்
பி. சா.	: பிருகத் சாதகம்
உ. கா. மூ. ஊ.	: உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும்
தொ. மு. சா. ப.	: தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு
வா. இரா. சோ. கோ.	: வால்மீகி இராமாயணத்தில்சோதிடவியலின் கோட்பாடுகள்
ப. சோ.	: பலித சோதிஷம்
சோ. வி. வா.	: சோதிட வித்யா வாரிதி
ப.	: பக்கம்
பக்.	: பக்கங்கள்
ஆ. இ.	: ஆண்டு இல்லை
மேலது	: மேலே சுட்டியது
இல	: இலக்கினம்
இரா	: இராசி
சூ	: சூரியன்
ச	: சந்திரன்
செ	: செவ்வாய்
பு	: புதன்
கு	: குரு
சு	: சுக்கிரன்
ரா	: இராகு
கே	: கேது

பொருளடக்கம்

YOGA'S AND PLANET ASSISTANCE FOR FOREIGN VISIT

வெளிநாடு செல்லும் யோகங்களும், கோள் அமைப்புகளும்

A THESIS

Submitted by

S. MATHIYALAGAN
(Reg. No.D 15 AS 510)

in partial fulfillment for the award of the degree

of

DOCTOR OF PHILOSOPHY



DEPARTMENT OF ASTRO SCIENCE

FACULTY OF ARTS AND SCIENCE

BHARATH INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH

CHENNAI 600 073.

JANUARY 2020

முடிவுரை

'வெளிநாட்டுக்குச் செல்லும் யோகங்களும், கோள் அமைப்புகளும்' என்ற தலைப்பில் செய்யப்பட்ட இந்த ஆய்வில் இயல்கள் தோறும் பெறப்பட்ட முடிவுகள் இங்கு தொகுத்து தரப்படுகின்றன. வெளிநாட்டுக்குச் செல்லும் யோகத்தைத் தரச்கூடிய காரகக் கோள்களாக கூறப்படும் இராகு, சனி மற்றும் சந்திரன் ஆகியவற்றின் தாக்கம் வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் ஆய்வு செய்யப்பட்டது. இதற்குச் சாதகப் பகுப்பாய்வு என்னும் நூலில் கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 05 யூக விதிகளின்படி வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்கள் உள்ளனவா என்று ஆராயப்பட்டது.

அதன் முடிவில் வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் இராகு, சனி மற்றும் சந்திரனின் தாக்கம் உள்ளது என ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 300 சாதகங்களிலிருந்தும் புலப்படுகிறது.

அவற்றில் சனியின் தாக்கம் அதிகமாகவும், இரண்டாவதாக இராகுவின் தாக்கமும், மூன்றாவதாக சந்திரனின் தாக்கமும் இருப்பது தெரிய வருகிறது.

இராகுவின் தொடர்பு இலக்கின பாவகத்தில் 10.35 விழுக்காடாகவும், இராகுவின் தொடர்பு ஒன்பதாம் பாவகத்தில் 09.65 விழுக்காடாகவும், இராகுவின் தொடர்பு பன்னிரண்டாம் பாவகத்தில்

06.35 விழுக்காடாகவும் இருப்பது இணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 1 மூலம் (பக்கம் 155) புலப்படுகிறது.

சனியின் தொடர்பு இலக்கின பாவகத்தில் 08.00 விழுக்காடாகவும், சனியின் தொடர்பு ஒன்பதாம் பாவகத்தில் 22.00 விழுக்காடாகவும், சனியின் தொடர்பு பன்னிரண்டாம் பாவகத்தில் 14.00 விழுக்காடாகவும் இருப்பது இணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 2 மூலம் (பக்கம் 155) புலப்படுகிறது.

சந்திரனின் தொடர்பு இலக்கின பாவகத்தில் 08.65 விழுக்காடாகவும், சந்திரனின் தொடர்பு ஒன்பதாம் பாவகத்தில் 14.00 விழுக்காடாகவும், சந்திரனின் தொடர்பு பன்னிரண்டாம் பாவகத்தில் 07.00 விழுக்காடாகவும் இருப்பது இணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 3 மூலம் (பக்கம் 156) புலப்படுகிறது.

இராகு சம்பந்தப்பட்ட வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்கள் இடபஇராசியில் 27ம், விருச்சிகஇராசியில் 20ம் ஆக மொத்தம் 47 சாதகங்கள் (**15.70**சதவீதம்) இருப்பது இணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 4 மூலம் (பக்கம் 148) புலப்படுகிறது.

சனி சம்பந்தப்பட்ட வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்கள் மகரஇராசியில் 32ம், கும்பஇராசியில் 26ம் ஆக மொத்தம் 58 சாதகங்கள் (**19.30**சதவீதம்) இருப்பது இணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 4 மூலம் (பக்கம் 156) புலப்படுகிறது.

சந்திரன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்கள் கடகஇராசியில் 27 சாதகங்கள் (**09.00**சதவீதம்)

இருப்பது இணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 4 மூலம் (பக்கம் 156) புலப்படுகிறது.

விதி எண்.1.ன்படி 1 – 9 - 12ஆம் இடங்களில் இராகு, சனி, சந்திரன் அமர்வதால் வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் பெற்றவர்கள் 100க்கு 40.00 விழுக்காடு இருப்பதால் இவர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கான யோகம் பெற்றவர்கள் என்னும் முடிவுக்கு வர முடிகிறது.

விதி எண்.2.ன்படி 1 – 9 - 12ஆம் அதிபதிகள் மாறி அமர்ந்ததால் வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் பெற்றவர்கள் இலக்கினாதிபதி, பாக்கியாதிபதி, வெளி நாட்டுக்கு, தூர தேசங்களுக்கு செல்லும் ஸ்தானாதிபதியால் வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் பெற்றவர்கள் ஆன்மரீதியாக உந்தப்பட்டு வெளிநாட்டுக்கு சென்றவர்கள் ஆகும். [118]

இடபம், கடகம், விருச்சிகம், மகரம், கும்பம் ஆகிய இலக்கினங்களில் பிறந்தவர்கள் வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் படைத்தவர்கள் ஆவர். இவற்றில் இலக்கினமோ, சந்திரனோ இருக்கலாம். இலக்கினமாக அமையப் பெற்றவர்களில் கடகம், மகரம், கும்பம் இராசிக்காரர்கள் தங்களுடைய முழு ஈடுபாட்டுடன் வெளிநாட்டுக்குச் செல்லும் யோகம் பெற்றவர்கள்.

---

[118] தி. விமலன் - தொழில் சாாந்த சாதகப் பகுப்பாய்வு - பக். 1

விதி எண்.2ன்படி 1 – 9 - 12ஆம் அதிபதிகள் தங்களுக்குள் மாறி அமர்வதால் வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் பெற்றவர்கள் 100க்கு 33.00 விழுக்காடு இருப்பதால் இவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான யோகம் பெற்றவர்கள் என்னும் முடிவுக்கு வர முடிகிறது.

விதி எண்.3.ன்படி 9 – 12ஆம் அதிபதிகள் தசா, புத்திக் காலங்களில் வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் பெற்றவர்கள் 100க்கு 16.66 விழுக்காடு இருப்பதால் இவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான யோகம் பெற்றவர்கள் என்னும் முடிவுக்கு வர முடிகிறது.

விதி எண்.4.ன்படி இராகு, சனி, சந்திரன் தசா புத்திக் காலங்களில் வெளிநாட்டுக்குக்கு செல்லும் யோகம் பெற்றவர்கள் 100க்கு 09.67 விழுக்காடு இருப்பதால் இவர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கான யோகம் பெற்றவர்கள் என்னும் முடிவுக்கு வர முடிகிறது.

விதி எண்.5.ன்படி இலக்கினத்துக்கு 9 – 12ஆமிடம் சரராசியாகவோ, ஜலராசியாகவோ, காற்றுராசியாகவோ அமைவதால் வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் பெற்றவர்கள் 100க்கு 00.67 விழுக்காடு இருப்பதால் இவர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கான யோகம் பெற்றவர்கள் என்னும் முடிவுக்கு வர முடிகிறது.

வெளிநாடு செல்லும் யோகம் பெறுவதற்கான யூக விதிகளின்படி சாதகர்களின் சாதகங்கள் விதி 01இல் 120ம் (40.00%) விதி எண். 02இல் 99ம் (33.00%). விதி 03இல் 50ம் (16.66%), விதி எண். 04இல் 29ம் (09.66%), விதி 05இல் 02ம் (00.67%) ஆக மொத்தம் 300 சாதகங்களில் (**100 விழுக்காடு**) இருப்பது பின்னிணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 5 மூலம் (பக்கம் 157) புலப்படுகிறது.

300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் இராகுவுக்கும், சனிக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தொடர்பு **100.00** விழுக்காடு (இராகு இலக்கின பாவகத் தொடர்பு 10.35% + இராகு ஒன்பதாம் பாவகத் தொடர்பு 09.65% + இராகுவின் பன்னிரண்டாம் பாவகத் தொடர்பு 06.35% + சனி இலக்கின பாவகத் தொடர்பு 08.00% + சனி ஒன்பதாம் பாவகத் தொடர்பு 22.00% + சனி பன்னிரண்டாம் பாவகத் தொடர்பு 14.00% + சந்திரன் இலக்கின பாவகத் தொடர்பு 08.65% + சந்திரன் ஒன்பதாம் பாவகத் தொடர்பு 14.00% + சந்திரன் பன்னிரண்டாம் பாவகத் தொடர்பு 07.00% = **100%**) இருப்பது பின்னிணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 6 மூலம் (பக்கம் 157) புலப்படுகிறது.

300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் இராகு சம்பந்தப்பட்ட சாதகர் 26.45 விழுக்காடு ((இராகு இலக்கின பாவகத் தொடர்பு 10.35% + இராகு ஒன்பதாம் பாவகத் தொடர்பு 09.65% + இராகுவின் பன்னிரண்டாம் பாவகத் தொடர்பு 06.35% = 26.35%) இருப்பது பின்னிணைப்பில் காணப்படும் வரைபடம் (Chart) 6 மூலம் (பக்கம் 157) புலப்படுகிறது.

300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் சனி சம்பந்தப்பட்ட சாதகர் 44.00 விழுக்காடு (சனி இலக்கின பாவகத் தொடர்பு 08.00% + சனி ஒன்பதாம் பாவகத் தொடர்பு 22.00% + சனியின் பன்னிரண்டாம் பாவகத் தொடர்பு 14.00% = 44.00%) இருப்பது பின்னிணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 6 மூலம் (பக்கம் 157) புலப்படுகிறது.

300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் சந்திரன் சம்பந்தப்பட்ட சாதகர் 29.65 விழுக்காடு (சந்திரன் இலக்கின பாவகத் தொடர்பு 08.65% + சந்திரன் ஒன்பதாம் பாவகத் தொடர்பு 14.00% + சந்திரன் பன்னிரண்டாம் பாவகத் தொடர்பு 07.00% = 29.65%) இருப்பது பின்னிணைப்பில் காணப்படும் வரைபடம் (சார்ட்) 6 மூலம் (பக்கம் 157) புலப்படுகிறது.

300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் கண்டறிந்தவை :

1. இராகு, சனி, சந்திரன் 1 – 9 – 12ஆம் அதிபதிகள், பாவகங்கள் சம்பந்தம் பெற்ற வெளிநாட்டுக்கு சென்றவர்கள் 219 சாதகங்களில் (73.00%) இருக்கிறது.

2. 9 – 12ஆம் அதிபதிகளின் தசா, புத்திக் காலங்களில் வெளிநாட்டுக்கு சென்றவர்கள் 79 சாதகங்களில் (26.35%) இருக்கிறது.

3. இலக்கினத்திற்கு 9 – 12ஆம் பாவங்கள், சரராசி, நீர்ராசி, காற்றுராசி ஆகியவற்றின் தொடர்பால் வெளிநாட்டுக்கு சென்றவர்கள் 02 சாதகங்களில் (00.65%) இருக்கிறது.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் யூகவிதிகளான விதிகளான 5 விதிகளின்படி 100க்கு 100.00 விழுக்காடு சாதகர்கள் வெளிநாட்டுக்கு சென்றவர்களாக இருப்பதால், வெளிநாட்டுக்கு செல்வதற்கு 1-9-12ஆம் பாவாதிபதிகளும், அவர்களின் தசா, புத்திக் காலங்களும், இராகு, சனி, சந்திரன் கோள்களின் தசா, புத்திக் காலங்களும், சரராசி, நீர்ராசி, காற்றுராசி பாவங்களும் மிகவும் ஏற்றவை என்னும் முடிவுக்கு வர முடிகிறது.

இராகு, சனி, சந்திரன், இலக்கின, ஒன்பதாம் மற்றும் பன்னிரண்டாம் பாவகங்கள் சம்பந்தம் 300 சாதகங்களில் (100.00%) இருப்பதை அறிய முடிகிறது இது ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தலைப்பை உறுதி செய்கிறது.

மேற்கண்ட ஆய்வு முடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 300 வெளிநாட்டுக்குச் சென்றவர்களின் சாதகங்களிலிருந்து பெறப்பட்டது ஆகும். இதுவே ஒரு முடிவான முடிவல்ல. இந்த ஆய்வு முடிவுகளை மேலும் பலர் ஆய்வு செய்ய இந்த ஆய்வு ஒரு அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. வெளிநாட்டுக்குச் செல்வதற்கான யோகத்தைத் தரக்கூடியவையாக பாவங்கள் 1 – 9 – 12உம், காரகக் கோள்களான இராகு, சனி மற்றும் சந்திரன் ஆகியவற்றின் தாக்கம் முழுமையாகவும் இருக்கும். மேலும் அதிக அளவிலான சாதகங்களைக் கொண்டு மேலாய்வு செய்தல் இந்த ஆய்வுக்கு சிறப்பு தரும்.

முன்னுரை

சோதிட அறிமுகம்

ஓம் ஜெனனி ஜென்ம சௌக்யானாம் வர்த்தனி குலஸம்பதாம் பதவி பூர்வ புண்யானாம் லிக்யதே ஜென்ம பத்ரிகா.

பெற்ற தாய், மானுடப் பிறப்பு, அதில் ஏற்படும் சுகங்கள், பிறந்த நற்குலம், அமையும் செல்வங்கள், வகிக்கும் பதவி, சென்ற பிறவிகளின் புண்ணியச் செயல்கள் ஆகியவற்றை அறியும் வகையில் சாதகம் எழுதப்படுகின்றது என்பதே இதன் பொருள்.

இந்திய கலாச்சாரத்தின் அடித்தளமாக வேதங்களை வழிவகுத்தார் பிரம்மதேவன். அந்த வேதங்களைக் கற்றுக் கொள்ள ஆறு வேதாங்கங்கள் உருவாக்கப்பட்டது. அதில் எல்லோரையும் நல்வழிக்கு அழைத்துச் செல்லும் ஜோதி வடிவமாக சோதிட சாத்திரம் உருவாக்கப்பட்டது. இப்படி கிடைக்கப்பட்ட சோதிட சாத்திரம் பதினெட்டு முனிவர்களால் மெய்ப்படுத்தப்பட்டு மனிதகுல மேம்பாட்டிற்காக அருளப்பட்டது.

ஒருவரது சாதகக்குறிப்பை வைத்துக் கொண்டுதான் அவரது வாழ்நாள் முழுவதும் ஏற்படும் நல்வினை, தீவினைகள் மற்றும் அன்றாட நிகழ்வுகள் பற்றி அறிய இயலும். இந்தியச் சோதிடத்தை கட்டமைத்துக் கொடுத்தவர் வராகமிகிரர். பிருகத்சாதகம், பிருகத்யாத்திரை, பிருகத் விவாகப் பொருத்தம், பிருகத் ஸம்ஹிதை, பஞ்ச சித்தாந்திகா, இலகு சாதகம் என்பன வராகமிகரர் எழுதிய நூல்கள், வராகமிகிரரின் நூல்களுக்கு ஸ்ரீபதி பட்டாச்சாரியார் என்பவர் விளக்கவுரை எழுதியுள்ளார். ஸ்ரீபதி பத்ததி என்று இதுவே அழைக்கப்படுகிறது. இவருடைய கணித முறைதான் இந்துமுறைச் சோதிடக் கணிதத்தில் பின்பற்றப்படுகிறது.

ஸ்ரீபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ள மரபு இந்து முறையானது நிராயன பாவக மத்திய ஸ்புட முறையாகும். தமிழ்ச் சோதிட நூல்களும், வடமொழியில் இருந்த எழுந்த சாதக அலங்காரம் போன்ற நூல்களும் இக்கணித முறையினைத்தான் பின்பற்றி பலன் கூறுகின்றன.

பாவகப் பலன் அறியும் முறை

எந்தப் பாவத்திற்கு பலன் அறிய வேண்டுமோ அந்த பாவத்திற்குரிய கோள் மற்றும் பாவகம், காரகக்கோள் ஆகியவை ஆட்சி, உச்சம், கேந்திரம், திரிகோணம் பெற்று இருந்தாலும் இவற்றை நற்கோள்கள் பார்த்தாலும், இவற்றுடன் கூடினாலும் நற்பலன்கள் ஏற்படும். இப்பாவத்து அதிபதியும், காரகக்கோளும் இணைந்து மேற்படி பாவத்தில் இருந்தாலும், இலக்கினத்தில் இருந்தாலும். இப்பாவத்திலேயே இருந்தாலும் நற்பலன் ஏற்படும்.

அதேபோல் எந்தப் பாவத்திற்குரிய பலன் அறிய வேண்டுமோ அந்தப் பாவத்திற்குரிய கோள் மற்றும் பாவம், காரகக்கோள் ஆகியவை பகை, நீச்சம், மூடம் பெற்றாலும், 6 – 8 – 12 பாவங்களில் நின்றாலும், தீயக்கோள்கள் இவற்றைப் பகைப்பார்வை பார்த்தாலும் தீயபலன் ஏற்படும்.

அடிப்படை விதிகள்

பாவம் பற்றிய அறிமுகம் முடிந்ததும் சோதிடப் பலனை அறிவதற்கு முன் ஒவ்வொருவரும் தெரிந்த கொள்ள வேண்டிய அடிப்படை விதிகளைக் கூறுகிறார். திக்பலம், ஸ்தானபலம், காலபலம், சுபர், அசுபர், ஆட்சி, உச்சம். நட்பு, சமம், பகை போன்றவற்றை விளக்கி சட்வர்க்க அமைப்பு பிரிக்கும் துவாதசாம்சம், முப்பதாகப் பிரிக்கும் திரிசாம்சம், ஒன்பதாகப் பிரிக்கும் நவாம்சம், தசாபுத்திப்பலன், கோட்சாரப்பலன் போன்றவை

பற்றி விளக்குகிறார். இன்று பலர் பலன் பார்க்கும்போது நவாம்ச சக்கரத்தைக் கூட பார்ப்பதில்லை. ஆனால் இவற்றையெல்லாம் பார்த்து பின்னரே பலனை முடிவு செய்தல் வேண்டும்.

1. ஆய்வுப் பொருள் விளக்கம்

இந்த 21ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு இளைஞன் மற்றும் யுவதிக்கும் தன் வாழ்வில் ஒரு முறையாவது வெளிநாட்டிற்குச் சென்று வர வேண்டும் என்ற அவா இருந்து வருகிறது. வெளிநாட்டிற்குச் மேல் படிப்புக்காகவும், ஆய்வப் படிப்புக்காகவும், ஆய்வுப் பணிகளுக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும், திருமணம் முடிந்து கணவன் பின்னால் தனது வாழ்க்கையை தொடரவும் வெளிநாடு செல்லும் யுவதிகளும், சுற்றுலா மற்றம் அரசு வெளிவிவகாரங்கள் சார்பாக வெளிநாடு செல்பவர்களும் தற்போது அதிக அளவில் பெருகி விட்டார்கள். அவர்களது சாதகங்களை ஆய்வு செய்து வெளிநாடு செல்லும் யோகம் யாருக்கு அமையும் என்று ஆராய்ந்து அதுபற்றி வெளியுலகத்திற்கு தெரிவிப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

1.1 சோதிடம் - விளக்கம்

சோதி என்றால் ஒளி என்ற பொருள். ஒளிரும் கோளான சூரியனிடமிருந்தும், நட்சத்திரங்களிடமிருந்தும் வெளிப்படும் ஒளி அலைகள் பிற கோள்களின் மீது பட்டு பிரதிபலிக்கும் பொழுது அந்த கோள்களின் தன்மையையும் கலந்து பிரதிபலிக்கின்றன. இந்த ஒளி அலைகள் பூமியில் உயிரினங்களிடம் ஏற்படுத்தும் மாற்றங்களைப் பற்றி அறிந்த கொள்ள வானியல் கலையான சோதிடக்கலை நமக்கு உதவுகிறது.

விண்ணுலகிலிருந்த வரும் மின் காந்தக்கதிர் அலைகள் மனித உடலிலுள்ள நீர், இரத்தம். நுண்ணுயிரிகள், வேதியியல் பொருட்களின் தன்மையை மாற்றும் தன்மை வாய்ந்தவை என்ற

அறிவியலார்கள் கூறுகின்றனர். ஒரு குறிப்பட்ட நேரத்திற்கு, அந்த நேரத்தில் நிகழும் பிறப்பு அல்லது செயலுக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். சாதகங்களைக் கொண்டு நோய்களை ஆராய்ந்து. சிகிச்சையளித்து நோயாளிகளை குணப்படுத்தி வெற்றி பெற்றதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இருளில் நிற்பவர்களுக்கு ஒளி காட்டும் கலையாக சோதிடக்கலை விளங்குகிறது.

சோதிடக்கலையின் பிரிவுகளாவன

சோதிடவியல் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதாகும். அவை கணித ஸ்கந்தம், சாதக ஸ்கந்தம், சம்ஹிதாஸ்கந்தம் எனப்படும்.

சோதிட பிரிவுகள்

1.கணிதஸ்கந்தம்

2.சாதகஸ்கந்தம்

3.சம்ஹிதாஸ்கந்தம்

1.கணிதஸ்கந்தம்

1. <u>கணித ஸ்கந்தம்</u> - கணித ஸ்கந்தம் அ) சித்தாந்தம் ஆ) தந்திரம் இ) கரணம் ஆகிய மூன்று உட்பிரிவுகளையும், ஈ) சிருஷ்டி உ) யுகம் ஊ) இஷ்டசக ஆண்டுகள் போன்றவற்றையும் அடிப்படையாகக் கொண்டு கணித ஸ்கந்தம் செயல்படுகிறது. கோளங்கள் பற்றியும் விவரிக்கிறது.

இது சோதிடத்தோற்றம், உயிர்களின் தோற்றம் (சிருஷ்டி), யுக கணிதம், ஆண்டுகளின் அமைப்பு போன்ற அடிப்படைச் செய்திகளைத் தருகிறது.

இதனை மேலும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

கணிதஸ்கந்தம்

1	1	1
சித்தாந்தம்	தந்திரம்	கரணம்
(சிருஷ்டி	யுகம்)	(இஷ்டசகஆண்டுகள்)

1.சித்தாந்தம் - சூரிய சித்தாந்தம்

2.தந்தரம் - ஆரியபட்டீயம்

3.கரணம் - கரணகுதூகலம்

2. சாதக ஸ்கந்தம்

சாதகர் பிறந்த காலத்தில் காணப்பட்ட கோள்களின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பலன் கூறும் ஓரை முறையும், பலன் கூறப்படும் காலகட்டத்தில் உள்ள கோள்களின் கோச்சார அடிப்படையிலான தாஜிகம் முறையையும் உள்ளடக்கியது. சாதகம். பிரசன்னம், சகுனம், நிமித்தம், முகூர்த்தம் பற்றி விவரிக்கிறது.

1.ஓரை – 1. ப்ருகத்பராசர ஓரை 2. சும்பு ஓரை 3. பிரகாசிகா ஓரை

2.தாஜிகம் - 1. யவனதாஜிகம் 2. நீலகண்டதாஜிகம் 3. தாஜீகமுக்தாவளி

3. ஸம்ஹித ஸ்கந்தம்

முகூர்த்தம், வாஸ்து, வருஷபணி மற்றும் ஆரூடம் ஆகிய நான்கு பகுதிகளை உள்ளடக்கியது. சகுனம், வானிலை, மழை மற்றும் விலங்குகள் பற்றியும் விவரிக்கிறது.

முகூர்த்தம்

வேதங்கள், மனு மற்றும் யாக்ஞ வல்கியர் போன்றவர்களால் இயற்றப்பட்ட ஸ்ருதிகளில் சொல்லியுள்ள, தினந்தோறும் செய்ய

வேண்டிய கடமைகளுக்கும். விசேசமாக செய்ய வேண்டிய செயல்களுக்கும் நல்ல நேரத்தைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளைப் பற்றிக் கூறுவது ‘முகூர்த்தம்’ ஆகும். முகூர்த்தம் - காலவிதானம்

வாஸ்து

கோவில்கள், அரண்மனைகள், வீடுகள், சத்திரம், மடம் போன்றவைகள் கட்டவும், குளம், கிணறு போன்றவைத் தோண்ட நல்ல நேரம், காலம் மற்றும் அவை அமைய வேண்டிய இட அமைப்பைப் பற்றிக் கூறுவது ‘வாஸ்து’ ஆகும். வாஸ்து – சனத்குமாரவாஸ்து

வருஷப் பணி

மாதம் மும்மாரி பொழியுமா? உலகில் நடக்கவுள்ளது நன்மை தருமா? தீமை தருமா? என வானிலை முன்னறிவிப்பைத் தருவது ஆண்டுப் பணியாகும்.

வருஷபணி - வருஷபணிசக்கரம்

ஆரூடம்

ஆருடம் என்பதற்கு ஏறியிருத்தல் என்ற பொருள். ஒருவர் மனதில் நினைக்கும் காரியம் நடக்குமா? நடக்காதா? என கேட்கும் போது கோள்களின் அப்போதைய நிலைகள் மற்றும் பஞ்சபட்சி ஆகியவற்றின் அடிப்படையில் பலன் கூறும் முறைக்கு ஆருடம் என்று பெயர்.

ஆரூடம் - 1. ஜினேந்திரமாலை 2. பஞ்சபட்சி 3. சரநூல்

தமிழ் இலக்கியங்களில் கோள்கள் குறித்த செய்திகள் காணக்கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக கம்பஇராமாயணம்

வெள்ளிக்கோளினை உசனன் என வர்ணிக்கின்றது. அதாவது உசலில் வியற்காலையில் தோன்றும் கோள் உசனன் என்கிறது. அதுபோல் வெள்ளியை பிரகாசமாக ஒளிரும் கோள் என்ற பொருள்படும்படி ஒள்ளியோன் எனவும் குறிப்பிடுகிறது.

இந்தியாவில் தொன்மையான சமயங்களில் ஒன்றான இந்து சமயத்திலிருந்து சோதிட சாத்திரம் உருவாகின்றது. இந்து சமயத்தின் அடிப்படையான நான்கு வேதங்களிலும் சோதிட சாத்திரம் இருந்துள்ளது. ரிக், யஜுர், அதர்வண வேதங்களில் உள்ள சோதிட சாத்திரமே இந்திய சோதிட வரலாற்றின் தொடக்கம் ஆகும்.

சோதிடம் என்பது ஒருவரின் வாழ்க்கையைப்பற்றி விளக்கமாக முன்னதாக கூறும் ஒரு சாத்திரம் ஆகும். கணிதசாத்திரம், இதன் அடிப்படையாகும். இராசி மண்டலத்திற்கு உட்பட்டு இருக்கும் கோள்கள் யாவும் அவைகளின் அசைவுகளின் காரணமாக இருக்கக்கூடிய இடத்திற்கும், அவற்றின் சக்திக்கும் தகுந்தவாறு உயிரினங்களின் உயிர் வாழ்கைக்கைக்கு அந்தந்த கோள்களுக்குக் குறிப்பிட்டுள்ள காரகத்துவத்திற்கும், பாவத்திற்கும் சில சக்திகளை பிறக்கும் சமயம் கொடுக்கின்றது. இவைகள் யாவற்றையும் மற்றும் ஒவ்வொரு அம்சங்களையும் கணிதம் மூலமாக நன்கு ஆராய்வதுதான் சாதகக்கணிதம் ஆகும்.

மனிதன் தன் பரம்பரை மற்றும் வளரும் சூழ்நிலைகளால் கட்டுப்படுவதாக சொல்வதுண்டு. அனால் சோதிட சாத்திரம் பிறக்கும் போதுள்ள கோள் நிலைகளால் கட்டுப்படுத்தப்படுவதாக கூறுகிறது. இந்தக் கோள்களே நமது வாழ்வின் அடிப்படை சக்திகள். இவற்றோடு நட்சத்திரங்கள். இராசிகள், பாவங்கள் போன்ற அனைத்தும் தொடர்பு பெறுகின்றன.

ஒருவருடைய சாதகத்தில் 2 மற்றும் 4 ஆம் வீடுகளைப் பொருத்தே அவர்களது கல்வி நிலை ஏற்படுகிறது. 10ஆம் வீட்டை வைத்துத்தான் அவருடைய தொழில் நிர்ணயம் செய்யப்படுகிறது. தனஸ்தானம் எனப்படும் 2 ஆம் வீட்டதிபதி இலாபஸ்தானம் எனப்படும் 11ஆம் வீட்டதிபதி இவர்கள் பலம் பெற்று இருந்தாலும் செய்யும் தொழிலில் முன்னேற்றமடைந்து செல்வந்தராக இருக்கும் யோகம் ஏற்படுகிறது.

சகுனத்தின் அடிப்படையில் ஆரம்பமான எதிர்கால பலன்கூறும் முறை கால முன்னேற்றத்தின் அடிப்படையில் வானசாத்திரம் முதலில் வளர்ச்சி பெற்று பின்னர் அது சோதிடவியலாக உருமாறியது. இந்த உருமாற்றம் மெசபடோமியா, பாபிலோனியா, சால்தியா, கிரேக்கம், எகிப்து, சீனா, அரேபியா போன்ற நாடுகளில் வானசாத்திர வளர்ச்சியும் அத்துடனான சோதிட சாத்திர வளர்ச்சியும் காணப்படுகிறது.

சோதிடவியலின் அடிப்படை உண்மைகள் முற்காலம், தற்கால வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ள கோட்பாடுகளேயாகும். இக்கோட்பாடகளின்படி முற்றுப்பெற்ற சோதிடப் பலன்கள் கூறப்படுகிறது.

1.2 ஆய்வுத் தலைப்பு

ஆய்வுக்கு ‘வெளிநாடு செல்லும் யோகங்களும், கோள் அமைப்புகளும்’ என்ற தலைப்பை தேர்வு செய்துள்ளேன்.

மேடம் முதல் மீனம் வரையிலான 12 இலக்கினங்களிலும் பிறந்த வெளிநாட்டில் வசிப்பவர்களின் சாதகங்களை ஆய்வு செய்தால் அவற்றில் 1, 9, 12ம் பாவகங்களில் இராகு, சனி, சந்திரனின் தாக்கம் நிச்சயமாக இருக்கும் என பின்வரும் 05 விதிகளின் மூலம் உறுதி செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

அவ்வாறே ஆய்வு செய்யப்பட்டு எனது ஆய்வுத் தலைப்பு உறுதி செய்யப்படுகிறது. இவற்றில் மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய சரராசிகளையும், கடகம், விருச்சிகம், மீனம் முதலிய நீர்ராசிகளையும், மிதுனம், துலாம், கும்பம் ஆகிய காற்றுராசிகளையும் இலக்கினங்களாகக் கொண்டு பிறந்தவர்களின் சாதகங்கள் வெளிநாட்டில் வசிக்க ஏற்றவர்கள் என மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.3. ஆய்வுத் தலைப்பு விளக்கம்

வெளிநாடு செல்லும் யோகங்களும், கோள் அமைப்புகளும்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது ஔவையாரின் கொன்றைவேந்தனில் வரும் மூதுரையாகும். 'யாதும் ஊரே! யாவரும் கேளீர்!! என்பது கணியன் பூங்குன்றனாரின் கூற்றாகும். இவ்வாறு வெளிநாட்டு வாழ்க்கை ஒரு கனவாக சில காலக்கட்டங்களில் இருந்து வந்தது. அதாவது 1980ஆம் நூற்றாண்டு வரை ஒரு குறிப்பிட்ட மக்கள் மட்டுமே மேல் படிப்பிற்காக வெளிநாடு சென்று வந்தனர். நவீன கால தொழில்நுட்ப வளர்ச்சியால் கணினி, மென்பொருள் ஆகியவற்றால் இந்தியர்களுக்கு மேலை நாடுகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆனால் தற்பொது கணினித் துறையில் இந்தியாவின் முன்னேற்றம் சராசரி இந்தியர்களும் வெளிநாடு சென்று வருவதை மிகச் சாதராணமான விஷயமாக ஆகிவிட்டது. இதனால் வெளிநாடு வாழ் இந்தியர்களின் (NRI) எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருகிறது. இதனால் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான வருமான வரி, அந்நியச் செலாவணி குறித்த கேள்விகளும் அதிக அளவில் ஏற்படுகின்றன. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் அறிவாற்றலாலும், தொழிலாலும் வெளிநாடுகளில் இந்தியாவுக்கு நல்ல மதிப்பு உருவாகியுள்ளது. அவர்கள் இந்தியாவுக்காக வாதாடுகின்றனர். அவர்கள் இந்தியப் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கின்றனர்.

இந்தியாவில் அதிக அளவில் முதலீடுகளும் செய்கின்றனர். அவர்களின் பணிகளை அங்கீகரிப்பதில் மத்திய அரசை ஆண்ட கட்சிகள் போட்டி போட்டன.

கடல்கடந்த இந்தியர்களின் திறமையும், அனுபவ அறிவும் வெளிநாடுகளுக்கே பயன்படுகின்றன என்பதில் ஆதங்கமும், வருத்தமும் இருந்தாலும் தங்களின் மூதாதையர்களின் வேர்களைத் தேடி அவர்கள் நம் நாட்டுக்கு வர முயற்சிக்கும்போது பிரிவும், ஏக்கமும் பரஸ்பரம் மனதை வாட்டினாலும், அவர்களால் நாம் பெறும் அந்நியச் செலாவணி நமது பொருளாதாரத்தை உயர்த்தும் உந்து சக்தியாக விளங்குகிறது என்பதில் ஆறுதலும் ஏற்படுகிறது என்பதை மறுப்பதிற்கில்லை. பல நாடுகளில் இந்திய வம்சாவளியினர் பாராளுமன்ற உறுப்பினர்களாக, செனட்டர்களாக அமைச்சர்களாகப் பணிபுரியும் வாய்பைப் பெற்றிருக்கிறார்கள். பன்னாட்டு நிறுவனங்களின் தலைமைப் பதவியில் திறம்படப் பணிபுரிந்து வருகிறார்கள். பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாக, ஐ.நா. சபையின் பல்வேறு பிரிவுகளில் நிர்வாகிகளாக, எழுத்தாளர்களாக தடம் பதித்துக் கொண்டிருக்கின்றனர்.

சமீபத்தில் சிங்கப்பூரின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட ரவீந்தர்சிங்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரே. பல்லாயிரக்கணக்கான நமது இளைஞர்கள் வெளிநாடுகளில் பல்வேறு துறைகளில் பணியமர்த்தியிருக்கிறார்கள் என்றால் நமது நாட்டினரின் திறமைக்கும், உழைப்புக்கும், நாணயத்துக்குமான ஒரு சர்வதேச அங்கீகாரம் என்பதையே இது உணர்த்துகிறது.

வெளிநாடுவாழ் இந்தியர் நாள், 2003ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 09ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியாவைத் தவிர்த்த பிற நாடுகளில் வாழும் இந்தியர்களின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது. மகாத்மாகாந்தி, தென்னாப்பிரிக்காவிலிருந்து, மும்பை வந்து சேர்ந்த நாளின் (ஜனவரி 09, 1915) நினைவாக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒவ்வொரு

ஆண்டும், ஒவ்வொரு இந்திய நகரத்தில் இவ்விழா கொண்டாடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விழாவின்போது வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

சமீபத்தில் சிகாகோ நகரின் உள்ளூர் செய்திப்பத்திரிக்கை ஒன்றை பார்க்க நேர்ந்தது. அது இந்தியர்களுக்காக, இந்தியர்களால் வெளியிடப்படும் பத்திரிக்கை. இதன் முதல் பக்கத்தில் அமெரிக்காவுக்கு வந்து வெற்றியடைந்த பிரபலமான இந்தியர்களைப்பற்றி செய்தி வெளியிட்டிருந்தார்கள். இதில் ஆண்களுக்கு சமமான எண்ணிக்கையில் பெண் தொழிலதிபர்களும் இடம் பெற்றிருந்தார்கள். அதைப் பார்க்க மிகவும் பெருமிதமாக இருந்தது. ஒவ்வொரு மனிதரின் பின்புலத்தைப் பார்த்தால் பெரும்பாலனவர்கள் இந்தியாவில் நடுத்தரக் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து அமெரிக்காவுக்கு கஷ்டப்பட்டு வாய்ப்பு தேடி வந்து முன்னெறியவர்களாகவே இருந்தார்கள்.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் என உலகெங்கிலும் மூன்று கோடி இந்தியர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என அறியப்படுகிறது. 2010இல் வெளியான UNTP அறிக்கையின்படி சீனாவுக்கு அடுத்தபடியாக இந்திய வம்சாவளியினர் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் ஆகியோரின் எண்ணிக்கையே மிக அதிகமானதாக உள்ளது. இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டில் வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. முசாபர்சிஷ்டி எனும் ஆராய்ச்சியாளர் 2007இல் வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ள கருத்து குறிப்பிடத்தக்கது. ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி 1990-91ஆம் ஆண்டு அயல்நாடுகளில் வசித்த இந்தியர்கள் நமது நாட்டுக்கு அனுப்பிய தொகை 2.1 பில்லியன் டாலர்களாகும். கடந்த 15 ஆண்டுகளில் குறிப்பாக 10 ஆண்டுகளில் பிரமிக்கத்தக்க வகையில் அந்நியச் செலாவணி

உயர்ந்தது. 1996-97இல் 12.3 பில்லியன் டாலர் என்ற அளவில் இருந்த இவர்கள் அனுப்பிய தொகை 2003-04இல் ஏறத்தாழ 22 பில்லியன் டாலராக உயர்ந்தது. இது 2005ஆம் ஆண்டு 23.5 டாலர் என்னும் அளவை எட்டியது. அந்தவகையில் சீனா மற்றும் மெக்சிகோ போன்ற நாடுகளை இந்தியா முந்திவிட்டதாகவும் உலக வங்கியின் மதிப்பீடு தெரிவிப்பதாக முசாபர்சிஷ்டி குறிப்பிடுகிறார்.

வெளிநாடுவாழ் இந்தியர் எனப்படுவோர் இந்தியாவில் இல்லாது வேறொரு நாட்டில் புலம் பெயர்ந்த இந்திய குடியினர் ஆவர். இவர்கள் இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள். இந்திய அரசு வெளிநாட்டிற்கு புலம் பெயர்ந்து அந்நாட்டின் குடியுரிமை பெற்றவர்களையும், அத்தகைய பெற்றோர்களுக்கு பிறந்தவர்களையும் இந்திய வம்சாவளி நபர் என்று வகைப்படுத்துகிறது. இவர்களுக்கு கடவுச்சீட்டை ஒத்த POI அட்டை வழங்கப்படுகிறது. நான்கு தலைமுறைக்கு முன்புவரை இந்தியாவில் குடியுரிமை பெற்றிருந்த முன்னோர்களைக் கொண்டிருந்த நபர்களும் அவர்களது வாழ்க்கைத்துணையும் இந்த அட்டை பெறத் தகுதி பெற்றவராவார். இந்த அட்டை உள்ளவர்களுக்கு நுழைவுவிசைவு (விசா) மற்றும் பணியுரிமம் வழங்குவதில் மற்ற வெளிநாட்டினருக்கு உள்ளது போன்ற கட்டுப்பாடுகள் இருக்காது.

உலகெங்கும் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் வம்சாவளி நபர்கள் மக்கள்தொகை 30 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் 2010ஆம் ஆண்டு அறிக்கைப்படி சீனாவிற்கு அடுத்ததாக உலகின் மிகப்பெரிய விரிந்து பரவிய புலம்பெயர் இனம் இந்தியர்களாகும். மேலும் ஆசியாவிலேயே ‘புலம் பெயர்வதை’ கூடுதலாக 0.8.% கொண்டுள்ள நாடும் இந்தியா எனக் குறிப்பிட்டுள்ளது. மேலும் வெளிநாட்டில் கல்விக்காக செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 1999ஆம் ஆண்டில் 51.000 ஆக இருந்தது 2007ஆம் ஆண்டு 1,53,00

ஆக உயர்ந்துள்ளது. 2003ஆம் ஆண்டு முதல் சனவரி 09 இந்திய அரசின் வெளிநாட்டு இந்தியர் நல அமைச்சகத்தின் சார்பில் இந்தியாவின் வளர்ச்சியில் இவர்களின் பங்கினை போற்றும் விதமாக 'வெளிநாடுவாழ் இந்தியர் நாளாக' 'பிரவாசி பாரதீய திவசு' எனக் கொண்டாடப்படுகிறது. மகாத்மா காந்தி இந்நாளில்தான் தென்னப்பிரிக்காவிலிருந்து இந்தியா வந்திறங்கினார். இந்நாளை ஒட்டி மூன்று நாட்கள் புலம்பெயர் இந்தியர்களின் பிரச்சினைகளை ஆராயும் வண்ணம் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

கல்லூரியில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் உயர்கல்வி கற்கவோ அல்லது பணி செய்யவோ அயல்தேசம் (Foreign) செல்ல வேண்டும் என்பதைக் குறிகோளாகக் கொண்டு இதையே தங்களது கனவாகவும், வாழ்க்கையின் இலட்சியமாகவும் கொண்டு மிகப் பொறுப்புடன் படிக்கின்றனர். இதையே அவர்களது பெற்றோர்களும் விரும்புகின்றனர். வெளிநாடு செல்லுவதை தனது வாழ்வின் நோக்கமாகக் கொண்டு கல்லூரிப் படிப்பை சிறந்த முறையில் படித்து நல்ல மதிப்பெண்களை பெற கடுமையாக உழைக்கின்றனர். அவ்வாறு நல்ல மதிப்பெண்களை பெற்றால் மட்டுமே தனது வெளிநாடு செல்லும் கனவு நனவாகும் என உணர்ந்துள்ளனர். உயர்கல்விக்காக வெளிநாடு செல்லவும் தற்போது அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் கல்விக் கடன் தருகின்றனர். அதனால் மாணவர்களது வெளிநாடு செல்லும் எண்ணம் தடையில்லாது நிறைவேற ஏதுவாகிறது. அவ்வாறு மாணவர்கள் வெளிநாடு செல்லுவதற்கு அவர்களின் சாதக அமைப்பு ஏற்றதாக உள்ளனவா என அறிய மாணவர்களும், அவர்களது பொற்றோரும் சோதிடரை நாடிச் செல்லத் துவங்கியுள்ளனர். சோதிடரும் மாணவர்கள் வெளிநாடு செல்ல முடியுமா என அவரின் சாதகத்தில் பல்வேறு ஆய்வுகளை செய்து அவர்களுக்கு தெரிவிக்கின்றனர். சோதிடரின் சாதகமான பதிலுக்குப் பின்னரே பெற்றோர் மாணவரின் வெளிநாட்டுக் கனவை நிறைவேற்றத் தயாராகின்றனர்.

2. ஆய்வு நோக்கம்

தற்காலப் பெற்றோர்களின் மனநிலை தங்கள் பிள்ளைகள் எப்படியாவது படித்து பட்டம் பெற்று வெளிநாட்டிற்குச் சென்று நன்றாகச் சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். சிலர் தொழில் ரீதியாக வெளிநாடு செல்ல வாய்ப்புகள் ஏற்படும். சிலர் திருமணம் ஆனவுடன் கணவருடன் சேர்ந்து வாழ வெளிநாடு செல்ல நேரிடும். சிலர் வியாபார ரீதியாக வெளிநாடு செல்ல வேண்டிய சூழல் ஏற்படும். வெளிநாடு செல்ல ஒருவர் சாதகத்தில் கோள்களின் தாக்கம் எவ்வாறு ஏற்படுத்துகிறது என்று பார்க்கலாம். வெளிநாடு செல்பவர்களின் சாதகங்களில் அந்த யோகத்தை தரக்கூடிய காரகக்கோள்களான இராகு, சனி, சந்திரன் ஆகிய கோள்களின் தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதையும், நீர் இராசிகளான கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய இராசிகள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும், எந்தெந்த இலக்கினங்களில் பிறந்தவர்கள் அதிகமாக வெளிநாடு செல்கிறார்கள், அவர்களுக்கு வெளிநாடு பயணம் மேற்கொள்ளும் இடமான ஒன்பது மற்றும் பன்னிரெண்டாம் பாவங்கள் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். சோதிட நூல்களில் வெளிநாடு செல்லும் யோகத்தை அளிக்கக்கூடிய கோள்கள் இராகு, சனி, சந்திரன் ஆகியவை காரகக்கோள்களாக குறிப்பிடப்படுகிறது. இவற்றில் இராகு மற்றும் சந்திரன் வெளிநாட்டுக் கோள்களாக குறிக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சாதக அமைப்பைப் பெற்ற சாதகர்கள் மட்டும் வெளிநாடு செல்லக் காரணம் என்ன? அதற்கான அவர்களது சாதக அமைப்பு என்ன என்பதை சோதிடத்தின் மூலம் அறிந்து கொண்டால் பின்வரும் இளைய தலைமுறையினர் எந்தத் துறையில் சிறந்து விளங்குவார்கள் என தெளிவாக அறிந்த கொள்ள முடியும். அவர்களது மனநிலைக்கும், வாழ்வுநிலைக்கும், தொழில் சார்ந்த உணர்வு நிலைக்கும், உரிய வாய்ப்பையும். சூழ்நிலைகளையும்

அறிந்து அதன்படி செயல்பட சோதிடம் ஒரு பெருந்துணையாக அமையும் என்ற மேலான நோக்கத்தில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

3. ஆய்வுக் கருதுகோள்

வெளிநாட்டில் இந்தியர்கள் வசிப்பதற்கான யூக விதிகளை உருவாக்கி அதை உறுதிப்படுத்துவதும், வெளிநாட்டில் வசிப்பதற்கான யோகத்தை தருவதற்கு 9ஆம் பாவமும், அயல் தேசம் செல்வதற்கு இலக்கின, பன்னிரண்டாம் பாவமும், வெளிநாடு செல்லும் யோகத்தைத் தரும் காரகக் கோள்களாகக் கருதப்படும் இராகு, சனி, சந்திரன் ஆகியவற்றின் தாக்கம் வெளிநாட்டில் வசிப்பவர்களின் சாதகங்களில் உள்ளது என்பதை நிருபிப்பதும் ஆய்வின் கருதுகோளாகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

4. ஆய்வுப் பகுப்பு

இந்த ஆய்வுக்காக 300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் சாதகங்களை சேகரம் செய்து அவற்றில் நான் தேர்வு செய்த ஆய்வுத் தலைப்பை ஆய்வு செய்துள்ளேன். ஆய்வுக்கு கீழ்கண்ட உப தலைப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1. வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களில் இராகு, சனி, சந்திரனின் நிலை
2. 1, 9, 12ஆம் பாவகங்களில் இராகு, சனி, சந்திரனின் தாக்கம்
3. இராகு, சனி, சந்திரன் இடையேயான தொடர்பு
4. வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் அமைவதற்கான விதிகள்

5. வெளிநாட்டுக்கு செல்லும் யோகம் ஏற்படுவதற்கான இராகு, சனி, சந்திரன் சம்பந்தம்
6. 12ஆம் பாவத்திற்கும் வெளிநாடு செல்வதற்குமான சம்பந்தம்

5. ஆய்வுச் சிக்கல்

இவ் ஆய்வை சோதிட முறையில் மேற்கொள்ளும் போது பல இடர்பாடுகளைச் சந்திக்க நேரிட்டது. சோதிட முறையில் இவ் ஆய்வை மேற்கொள்ள சோதிடத்தின் அடிப்படை அறிவும், நுட்பங்களும் தெரிந்திருக்க வேண்டியதாயிருந்தது. ஆய்வாளர் சோதிடத்தில் ஏற்கெனவே இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்று சோதிடராகவும் பணியாற்றி வருவதால் சோதிடத்தைப்பற்றிய அறிவும், சிக்கல்களை தீர்த்து வைக்கும் அனுபவமும் பெற்றிருந்த காரணத்தால் ஆய்வில் ஏற்பட்ட ஆய்வுச் சிக்கலகளை எளிதாக தீர்க்க முடிந்தது.

6. ஆய்வின் சான்றாதாரங்கள்

களப்பணி மூலம் வினாநிரல் பட்டியல் கொண்டு வெளிநாட்டில் வசிப்பவர்களைப்பற்றி அவர்களது உறவினர்களை நேர்காணல் செய்து வெளிநாட்டில் வசிப்பவர்கள் பற்றிய 300 சாதகத் தகவல்கள் திரட்டப்பட்டு, அவையே முதன்மையான சான்றாதாரங்களாக கொள்ளப்பட்டன.

7. ஆய்வுப் பயன்

இவ் ஆய்வின் மூலம் ஆய்வின் நோக்கம் நிறைவேறுவது முதன்மையான பயனாகும். மேலும் ஆய்வின் முடிவானது வெளிநாடு செல்லும் யோகம் யாருக்கு அமையும் என்று கண்டறியப்பட்டு கல்வி கற்க வெளிநாடு செல்ல விரும்புகின்ற மாணவர்கள், பணி

நிமித்தமாக வெளிநாடு செல்ல விரும்பும் இருபாலர்கள், திருமணத்தின் மூலம் வெளிநாடு செல்ல விரும்பும் தம்பதியர்கள் ஆகியோரது சாதகத்தை ஆராய்ந்து அவர்களுக்கு வெளிநாட்டில் வசிக்கும் யோகம் கிட்டுமா என்பதை அறிந்து அதுபற்றி விரிவாக அவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களது மனக்குறையை போக்க உதவியதும் துணைமையான பயன் ஆகும்.

8. ஆய்வு அணுகு முறை

இவ் ஆய்வானது கீழ்காணும் அணுகுமுறைகளில் செய்யப்பட்டு அதன் மூலம் முடிவுகள் பெறப்பட்டன.

8.1. ஒப்பீட்டு அணுகு முறை

சேகரம் செய்யப்பட்ட 300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களும் இலக்கினவாரியாக வகைப்படுத்தப்பட்டு ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்யப்பட்டது..

8.2. விளக்க அணுகு முறை

ஒப்பீடு செய்யப்பட்ட 300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகங்களின் செய்திகள் விளக்க அணுகு முறையில் ஆய்வு செய்யப்பட்டது.

8.3 பகுப்பாய்வு அணுகு முறை

300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் 12 இலக்கினங்களில் உள்ள சாதகங்களும் இலக்கினவாரியாக பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

9. ஆய்வு எல்லை

இவ் ஆய்வுக்கு 300 வெளிநாட்டுக்கு சென்றவர்களின் சாதகத் தகவல்கள் திரட்டப்பட்டு அவற்றில் தேர்வு செய்த ஆய்வுத் தலைப்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்காக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா போன்ற வெளிநாடுகளில் வசிக்கும் மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்றுள்ள மாணவர்கள், வேலை நிமித்தமாக வெளிநாடு சென்றுள்ளவர்கள், திருமணத்தின் மூலம் வெளிநாடு சென்றவர்கள் ஆகியயோரது சாதகத் தகவல்கள் திரட்டப்பட்டு அவை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை, துணை நூல் பட்டியல், பின்னிணைப்பு நீங்கலாக கீழ்கண்ட ஐந்து இயல்களாக உப தலைப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1. வெளிநாட்டில் வசிப்பவர்களின் சாதகங்களில் இராகு, சனி, சந்திரன் காரகத்துவம், தொழில்கள்.
2. 1 – 9 – 12ஆம் பாவகச் செயல்பாடுகள்
3. வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் நிலைகள், குணங்கள்
4. சாதக பகுப்பாய்வும், யூக விதிகளும்

10. அடிக்குறிப்புகள்

ஆய்வில் விளக்கம் கருதி தேவையான இடங்களில் அந்தந்தப் பக்கத்தின் கீழேயே எடுத்தாளப்பட்ட விளக்கங்கள் எந்தெந்த நூல்களிலிருந்து பெறப்பட்டது என்ற விளக்கம் அடிக்குறிப்புகளாக தரப்பட்டுள்ளது.

11. துணைநூல் பட்டியல்

இவ் ஆய்வு செய்யத் துணையாக இருந்த மூலநூல்கள், தற்கால நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை பற்றிய விவரங்கள் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன.

12. பின்னேற்புகள்

இவ் ஆய்வேட்டின் இறுதியில் இந்த ஆய்வுக்கு தகவல் கொடுத்து உதவிய சாதகர்கள் பற்றிய விவரங்கள் போன்றவை தொகுத்து தரப்பட்டுள்ளன.

இயல் - 1



வெளிநாடு செல்லும் யோகங்கள், காரகக் கோள்களின் காரகத்துவம், தொழில்கள்

இயல் - 1

வெளிநாடு செல்லும் யோகங்கள், காரகக் கோள்களின் காரகத்துவம், தொழில்கள்

அறிமுகவுரை

வெளிநாட்டுக்கு செல்லும் யோகத்தை சாதகங்களில் உள்ள இராகு, சனி, சந்திரன் நிலையே தீர்மானிக்கின்றன. இராகு வெளிஊர், வெளிநாடு செல்லக்கூடிய யோகத்தைத் தருகின்றது. வெளிநாட்டில் வசிப்பதால் ஏற்படும் கஷ்டங்களையும், தொல்லைகளையும் பொறுத்துக் கொள்ளக்கூடிய மனோபாவத்தையும் சனி தருகின்றது. தாய், தந்தை, மனைவி, மக்கள் போன்ற உறவினர்களைவிட்டுப் பிரிந்த மனவருத்தத்தை தாங்கிக் கொண்டு மனதை சமாதானப்படுத்திக் கொள்ளும் குணத்தைத் தரக்கூடியது சந்திரன். அதே போல வெளிநாடு செல்வதற்கான மனதிடத்தை தரும் பாவகமான இலக்கினமும், வெளிநாட்டில் வசிக்கும் யோகத்தை அனுபவிக்கும் பாக்கியத்தைத் தரக்கூடிய பாவகமான ஒன்பதாம் பாவகமும், வெளிநாடு செல்லும் யோகத்தை தரும் பாவகமான பன்னிரண்டாம் பாவகமும் வெளிநாட்டுக்கு செல்லும் யோகத்தை ஏற்படுத்துகின்றன.

வெளிநாடு செல்லும் யோகங்களும், கோள்களின் தாக்கமும்

வெளிநாடு செல்லும் யோகங்களை கொடுப்பதில் இராகுவே முதன்மையானவர். சனி மற்றும் சந்திரன் கோள்களும் இதில் பங்கு வகிக்கின்றன். இம்மூன்று கோள்களுமே வெளிநாடு செல்லக் கூடிய சாதக அமைப்பைக் கொண்டிருக்கின்றன. பாவங்களைப் பொறுத்தவரை இலக்கினம், ஒன்பது மற்றும் பன்னிரெண்டாம்

பாவங்கள் வெளிநாடு செல்லும் சாதக அமைப்பைத் தருவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

உயர்கல்விக்காகவும், பணி நிமித்தமாகவும் வெளிநாடு சென்றவர்களின் சாதகங்களில் இராகு, சனி மற்றும் சந்திரன் கோள்களின் தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதையும், வெளிநாடு செல்லுவதற்கான முக்கியமான காரகக்கோள் இராகு எந்த அளவுக்கு தாக்கம் ஏற்படுத்துகிறது என்பதையும், எந்த இலக்கினங்களில் பிறந்தவர்கள் வெளிநாடு செல்பவர்களில் அதிகம் உள்ளனர். அவர்களுக்கு உயிர் ஸ்தானமான இலக்கினமும், உயர்கல்வி மற்றும் வெளிநாட்டில் வாசம் செய்யக்கூடிய பாக்கியத்தை கொடுக்கக்கூடிய ஸ்தானமான ஒன்பதாம் பாவமும், தொழில் ஸ்தானமான பத்தாம் பாவம் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதையும் ஆராய்வதே இதன் நோக்கமாகும். சோதிட நூல்களில் வெளிநாடு செல்வதற்கு இராகு, சனி மற்றும் சந்திரன் ஆகிய கோள்கள் காரகக் கோள்களாக குறிப்பிடப்படுகிறது. இவற்றில் இராகுவே குடும்பத்தைவிட்டு பிரித்து வெளியூர், வெளி தேசம், வெளிநாடு அகியவற்றிற்கு அனுப்பபுவதற்கான காரகத்தைக் குறிக்கின்றது. சனி மற்றும் சந்திரன் இதனுடன் இணைந்து வெளிநாட்டிற்கு அனுப்பும் பணியைக் குறிக்கின்றது.

வெளிநாடு செல்வதற்கு இராகு, சனி மற்றும் சந்திரன் ஆகிய மூன்று கோள்களின் வலிமை தேவை. வெளிநாடு செல்பவர்கள் அனைவருக்கும் இவை வலுப்பெற்றிருக்க வாய்ப்புண்டு. ஆனால் இவை வலுப்பெற்றவர்கள் அனைவரும் வெளிநாடு செல்பவர்களே என்று கூற முடியாது. வெளிநாடு செல்வதற்கான பாவங்களின் காரகத்துவங்களும் இடம் பெறலாம். இராகுவின் ஆதிக்கம் அதிகம் இருப்பின் வெளிநாடு செல்லும் யோகம் உண்டு என்று கூற இயலும். வெளிநாடு செல்பவர்களின் சாதகங்களில் இராகு, சனி மற்றும் சந்திரன் ஆகிய கோள்களின் தாக்கங்களை

ஆராய்ந்து எந்த அளவிற்கு அந்தத் தாக்கங்கள் வெளிநாடு செல்வதற்கு துணை புரிந்துள்ளன என்று ஆய்வு செய்யப்பட்டு உள்ளது. இந்த ஆய்வின் உண்மைகள் பழங்கால சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ள கோள்களின் காரகத்துவங்களை உறுதி செய்ய இயலும்.

ஒரு குறிப்பிட்ட சாதக அமைப்பைப் பெற்ற சாதகர்கள் மட்டும் வெளிநாடு செல்லக் காரணம் என்ன, இதற்கான அவர்களது சாதக அமைப்பு என்ன என்பதை சோதிடத்தின் மூலம் அறிந்து கொண்டால் பின்வரும் இளைய தலைமுறையினர் வெளிநாடு செல்ல முடியுமா என்பதை தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். அவர்களது மனநிலைக்கும், வாழ்வுநிலைக்கும், உயர்கல்வி, தொழில் சார்ந்த உணர்வு நிலைக்கும், உரிய வாய்ப்பையும், சூழ்நிலைகளையும் அறிந்து அதன்படி செயல்பட சோதிடம் ஒரு பெருந்துணையாக அமையும் என்னும் மேலான நோக்கத்தில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்லும் யோகத்தை சாதகங்களில் இராகு, சனி, சந்திரனின் ஆகிய கோள்களின் நிலையே தீர்மானிக்கின்றன. இயற்கையில் இராகு ஒரு அசுபர். இராகு தான் அமர்ந்திருக்கும் வீட்டுப்பலனை அதிகப்படுத்துவார். வேதங்களில் இராகு ஒரு அசுரக் கோள் என குறிப்பிடப்பட்டுள்ளது. செழிப்பு, மது மற்றும் போதைப்பொருட்கள். கடுமையான வலி, திருட்டு, ஊழல், வெறுப்பு, ஆவிகளால் தொல்லை, அசுத்தம். மனோதத்துவப் பிரச்சினைகள், கடுமையான பேச்சு, துறவு, நோய்கள் பரவுதல், சூதாட்டம், பயணங்கள், தந்திரம், கபடத்தனம். விதவை, பஞ்சம், அமானுஷ்ய சக்திகள் (மனித சக்திக்கு மேற்பட்ட சக்திகள்), தற்கொலை எண்ணங்கள், பயம், பாம்புகள், பாம்புக்கடி, தீய செயல்களால் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவை இராகுவின் காரகத்துவங்களாகும்.

தவறான வாக்குவாதம், புண்படுத்தும் பேச்சு, தாழ்ந்த இன மனிதன், பாவம் செய்யும் பெண், நாத்திகன், சூது, தீய பெண்ணுடன் சேர்க்கை, அயல்நாட்டுப் பயணம், தூய்மையின்மை, எலும்பு, மண்ணீரல் வீக்கம், கபடம், மரகதம், தெற்கு நோக்கிய முகம், வேற்று இனம் அல்லது மற்ற கீழ்த்தரமானவா், மோசமான வீக்கம், பெரியவனம், கரடுமுரடான இடத்தில் அலைதல், மலை, வெளியிடத்தில் தங்குதல், காற்று, கவலை, கடுமையான செயல், ஊர்வன, பயணம். ஞானம், பிதாமகன் (பிதுர் பாட்டன் வம்சம்), பிரதாபம், செப்பிடு வித்தை, களவு, நானாவித வேடத் தொழில், சேவகத் தொழில், பரதேச வாசம் ஆகியவை இராகுவின் காரகத்துவங்களாகும்.

இயற்கையிலேயே அசுபா். சனியின் ஆதிக்கம் வலிமை உடையது. அதே சமயம் எதிர்மறையானது. நோய், வயோதிகம், மரணம், தத்துவம், வைராக்யம், துன்பம், கஷ்டப்படுதல், இழப்பு. திருட்டு போதல், சூதாட்டம், ஒழுக்கமற்ற செயல்கள், நீண்ட ஆயுள், தடைகள், எல்லைகள், அவமரியாதை, தவறான செயல்கள், வேட்டைக்காரர்கள், யோகாசனப்பயிற்சி முதலியன சனியின் காரகத்துவங்கள் ஆகும்.

சாதகத்தில் சனி மிக நேர்த்தியாக அமையப் பெற்றிருப்பின் உண்மை, நேர்மை, உழைப்பு, சிக்கனம், சாமர்த்தியம், துறவியாதல், ஞானியாதல் போன்ற உயர் குணங்களை கொடுக்கும். தாழ்வு எண்ணம், கோழைத்தனம், எவரையும் நம்புவது இல்லை, மந்த புத்தி, சந்தேகக்குணம், கூடுதல் பொய், சப்தமில்லாத பேச்சு, கருமித்தனம், பிறர் பொருள் மீது பேராசை கொள்ளல், பயந்த தன்மை, மன நோய், தனது கருத்துக்களை வெளியில் கூற அச்சம் கொள்ளுதல், விரைவில்லாத ஈடுபாடு, தாமதம், கருப்பு நிற பொருட்கள், இரும்பு சாமான்கள், தாமதமாகக்கல்வி, தரிசு நிலங்கள், அழுக்கடைந்த இடங்களில் வசித்தல், ஒழுக்கமில்லாத, துக்கமான

காதல் உறவு, இன்பமின்மை, மந்த புத்தி உடைய குழந்தை, கீழத்தரத்தாருடன் காதல் உறவு, தோல் சம்பந்தமான நோய்கள், சிறிய தொகை, சிரமத்தின் பேரில் கடன், கூலி வேலைகள், பணவரவில் தாமதம், நிலையற்ற மனைவி, வயதுக்கு மூத்த பெண்ணின் தொடர்பு, ஒழுக்கமில்லாத குணம், பொய்யான நடிப்பு, விபத்து, தற்கொலை, புத்தியை இழத்தல், ஞாபகசக்தி குறைவு, நல்ல ஆய்வு சம்பந்தமான கல்வி, தாமதமான மாற்றங்கள், தகுதிக்கு குறைந்த அல்லது முதுமைப் பெண்களிடம் முறையற்ற தொடர்பு, நிலையான தொழில், அதிக உழைப்பு, தாமதமான உயர்வுகள், அல்லது உயர்வற்ற தொழில்கள், நண்பர்கள், ஒழுக்கமின்மை, தனது ஆசைகளை வெளியே காட்டிக் கொள்ளாமை, இரகசிய செயல், ஆய்வு, சேமிப்பு, அந்தரங்க வாழ்க்கையில் சிக்கல்கள்

சோம்பல், மரம், கல், மண் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், கருமை நிறப் பொருட்கள், மண்ணெண்ணை, கச்சா எண்ணை, கள்ளத்தனமான மது விற்பனை, கிழிந்த ஆடை, பிறர் பொருளில் ஆசை, அழுக்கான இடம், வெளியிட வாழ்வு, கருமி, இறப்பு, ஆயுள், அதிர்ஷ்டமின்மை, வறுமை, பாவச்செயல், நோய்த்தன்மை, விவசாய செயல், சிறை தண்டனை, பேரழிவு, மாசு, துன்பம், ஒவ்வாத செயல்கள், கல்நெஞ்சன், பொய் பேசுதல், வாக்கு தவறுதல், தீய எண்ணம், கீழான பணியாளர், அடிமைச்செயல், ஒதுக்கப்பட்ட இடங்கள், நாடோடியாக அலைதல், பொறாமை, நேர்மை குறைவு, பிரேத காரியம், ஏழ்மை, விபத்து ஆகியவையும் சனியின் காரகத்துவங்கள்.

பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் சந்திரன் ஆகும். எனவே சாதகத்தில் மிக முக்கியத்துவம் பெறும் கோள். மாதாவையும் குறிக்கும். பெண்தன்மை, வெண்மை நிறம், புகழ், மக்களின் நன்மதிப்பு, உணர்ச்சிகள், மகிழ்ச்சி, சிந்தனை, கடல்

அலைகள், வளர்பிறையில் சுபர். செல்வம், மதிப்பு, மரியாதை, மன அமைதி, ஆரோக்கியம் இவற்றை குறிப்பவர்.

மனம், கற்பனை, மனநிலை, பூக்கள், நறுமணம், கரும்பு, அந்தண ஜாதி, காக்கை வலிப்பு நோய், உப்புச்சுவை, வெண்மைநிறம், கபம், டைபாய்டு ஜுரம், நுரையீரல், மண்ணீரல் தொடர்பான நோய்கள், பெண்மை, தாய்மைக்குணம், தூக்கம், (அமைதி) மகிழ்ச்சி, திரவப் பொருட்கள், வெண்கலம், அயல்நாடு செல்லுதல், கிணறு, குளம். குட்டை, அம்மா, முத்துக்கள், இடுப்பில் அணியும் பெல்ட் மற்றம் ஒட்டியாணம், குள்ளமான உருவம், மழைக்காலம், பார்வதி தேவியை வணங்குதல், கோதுமை, நல்ல பழவகைகள், முகம், தேஜஸ், அழகு, பட்டு ஆடைகள். மென்மையான ஆடைகள், ஊட்டமளித்தல், தயிர் விரும்புதல், இரவில் வலிமை, மத்திய லோகம், மேற்குத்திசை, மத்திமவயது, இரத்தத்தின் தூய்மை மற்றும் வலிமை, மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்கள், பாம்பு, தோள்பட்டை நோய்கள், குடை போன்ற அந்தஸ்த்தைக் காட்டும் ஆடம்பரச் சின்னங்கள், வேகமான சிந்தனை, நகைச்சுவைப் பேச்சு, சந்நியாசி, பரதேசி, திறமை, அறிவுடமை, வேலை கிடைத்தல் அகியவை சந்திரனின் காரகத்துவங்கள் ஆகும்.

அனுகூலம், நகைச்சுவை, ஊட்டச்சத்து, இன்பம், சிறப்பு, தபஸ்வி, புகழ், அழகு, இரவில் வலிமை, கற்றவர், உப்புநீர், வேலை பெறுதல், வெளிநாடு செல்லுதல், தோள்பட்டை நோய், அரசவிருதுகள், தூய்மையான பளிங்கு, வெண்மையான ஆடை. நல்ல சிந்தனை, நிலையற்ற புத்தி, அமைதியற்ற மனோநிலை, அடிக்கடி தொழில் இருப்பிடங்களை மாற்றுதல், சுற்றித்திரிதல், அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ளுதல், கடற்பயணம் மேற்கொள்ளுதல், சிங்கப்பூர், பிரான்ஸ் போன்ற வெளிநாட்டுப்

பயணங்கள் மேற்கொள்ளுதல் ஆகியவையும் சந்திரனின் காரகக் குணங்கள் ஆகும்.

அந்நிய நாட்டுத் தொடர்புடைய தொழில், அந்நிய நாட்டில் வேலை, மருத்துவம், ஸ்பெகுலேசன், சீட்டு, ரேஸ், ஷேர், கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்சி, தரகு, கடத்தல் மற்றும் மறைமுகமான தொழில் அனைத்தும், சினிமாத் தொழில், பாம்புத் தோல் வியாபாரம் மற்றும் மாந்திரீகம் போன்றவை இராகுவின் தொழில்களாகும்.

அந்நிய நாடுகள், அன்னிய மனிதர்கள், அன்னிய மொழி கற்றல், வெளிநாட்டுப் பயணம், விவசாய உற்பத்தி, எண்ணெய், வாயு, இரும்பு தாதுக்கள், வேட்டையாடுபவர், யோகப்பயிற்சி ஆகியவை சனியின் தொழில்களாகும்.

கடற்படையில் சேருதல், கடற்பயணம், மாலுமியாதல், படகோட்டுதல், படகு, கப்பல், நீர் தொடர்பான தொழில்கள், கடல் சம்பந்தப்பட்ட தொழில் ஆகியவை சந்திரனின் தொழில்களாகும்.

இராகு காரகத்துவம்

வானசாத்திரத்தில் இராகு என்ற கோள் முறைப்படி இல்லை. ஆதலால் இதை சாயாக்கோள் என்பர். ஆனால் வானசாத்திரம் இந்த இராகு, கேதுக்களை கிரகணத்தை எற்படுத்தும் புள்ளிகள் என்று கூறிக் கொள்கிறது. [1] அபிதான சிந்தாமணியில் இராகுவைப்பற்றி கூறியதாவது. இராகுவின் தந்தை விப்பசித்தியாவார். தாய் சிம்கிகை ஆவார். காஸ்யப முனிவரின் பேரன் ஆவார். கேது இவரது தம்பியாகும். தவம் செய்து கரும்பாம்பு உருவமுடையவர் ஆனார். சூரியனுக்கு சுமார் 13,000 விஸ்தார யோசனை உள்ள மண்டலத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டு குதிரைகள்

---

[1] அடிப்படை சோதிடவியல் - விமலன்.தி, ப. 49

பூட்டிய இரதத்தை உடையவராவார். இவர் சூரியனை அப்பிரதட்சிணமாக சுற்றிவர பதினெட்டு ஆண்டுகளாகிறது. [2] இயற்கையில் இராகு ஒரு அசுபர். இராகு தான் அமர்ந்திருக்கும் வீட்டுப்பலனை அதிகப்படுத்துவார். வேதங்களில் இராகு ஒரு அசுரக் கோள் என்றும், அது சூரிய, சந்திரர்களை தாக்கும் என்றும் அதுவே கிரகணம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இராகுவின் செயல்கள் சனியைப் போல் இருக்குமென சொல்வதுண்டு. இராகுவின் இரத்தினம் கோமேதகம். எண்.4, தந்தை வழித் தாத்தா. செழிப்பு, மது மற்றும் போதைப்பொருட்கள். கடுமையான வலி, திருட்டு, ஊழல், வெறுப்பு, ஆவிகளால் தொல்லை, அசுத்தம். மனோதத்துவ பிரச்சினைகள், கடுமையான பேச்சு, துறவு, நோய்கள் பரவுதல், சூதாட்டம், பயணங்கள், தந்திரம், கபடத்தனம். விதவை, பஞ்சம், அமானுஷ்ய சக்திகள் (மனித சக்திக்கு மேற்பட்ட சக்திகள்), தற்கொலை எண்ணங்கள், பயம், பாம்புகள், பாம்புக்கடி, தீய செயல்களால் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவை. [3]

இராகு உச்சமானால் புகழையும், செல்வத்தையும் தரும். அதிகார மிக்கவராகவும், மக்களை ஆட்டுவிப்பவராகவும் ஆக்கும். இராகு பலவீனம் அடைந்தால் மனோவியாதிகள், உடல் நோய்கள், வயிற்றுப்போக்கு, காலரா, தற்கொலை உணர்வு போன்றவை தரும். [4] குடை, அரசாங்கம், கூட்டம், தவறான விவாதங்கள், பேச்சால் காயப்படுத்துதல், தீய பெண்மணி, மத நம்பிக்கையற்றவன். அலங்கார வாகனம், சூதாட்டம், வெளிநாடு போதல், தீய பெண்கள் சேர்க்கை, மாலை வேளையில் வலிமை, அசுத்தம். துயரம், அடர்ந்த காடு, பாம்பு, பாம்பு உலகம், கனவுகளின் பலனறிதல், துர்க்கையை

---

[2] அடிப்படை சோதிடவியல் - விமலன்.தி, ப. 49

[3] ஜோதிஷ வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 120

[4] மேலது.

வணங்குதல், உருது மொழி, விலங்குகளுடன் வசித்தல், கீழான மக்கள் வசிப்பிடம், குழப்பம், கலகம், ஊர்வன, உயிரினங்கள், தாத்தா, பாட்டனார், மூக்கு, தொண்டை நோய்கள், மரகதக்கல், அதிகாரம், கபடம், பொய். [5] எறும்புப்புற்று, பாம்புகள்வசிக்கும் இருளான பொந்துகள், தென்மேற்குத்திசை.[6] இராகு கருப்பு நிறமாகவும், உயரமாகவும், இழிந்த குலத்தவராகவும், தோலில் நோய் உடையவராகவும், நாத்திகா் ஆகவும், பொய் கூறுபவராகவும், விக்கல் உடையவராகவும், கபடராகவும், தொழுநோயால் துன்பமடைபவரும், பிறரை அவதூறுகூறுபவராகவும், புத்தியற்றவராகவும் இருப்பார். [7]

குடை, சாமரம், அரசு, கூட்டம், தவறான வாக்குவாதம், புண்படுத்தும் பேச்சு, தாழ்ந்த இன மனிதன், பாவம் செய்யும் பெண், நாத்திகன், சூது, தீய பெண்ணுடன் சேர்க்கை, அயல்நாட்டுப் பயணம், தூய்மையின்மை, எலும்பு, மண்ணீரல் வீக்கம், கபடம், மரகதம், தெற்கு நோக்கிய முகம், வேற்று இனம் அல்லது மற்ற கீழ்த்தரமானவா், மோசமான வீக்கம், பெரியவனம், கரடுமுரடான இடத்தில் அலைதல், மலை, வெளியிடத்தில் தங்குதல், காற்று, கவலை, கடுமையான செயல், ஊர்வன, பயணம், ஒரு முகூர்த்தம், ஒரு வாகனம், நாகயோகம், தாய், தந்தைவழிப் பாட்டனார், தாங்கமுடியாத வலி, சூறைநோய், தீய நடத்தை, உருதுமொழி எழுத்தாற்றல், கொடுமையான பேச்சு. [8] இராகுவுக்கு தென்மேற்குத் திசையும், கறுப்பு நிறமும் பிரீதியானது. கல் - கோமேதகம். இராகு மறைந்து வாழ்தல், சிறைச்சாலைக்குப் போகுதல், சிறைகளில்

---

[5] ஜோதிஷ வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 120

[6] ப.லித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 72

[7] மேலது.

[8] உத்திரகாலாம்ருதம் - டி. விமலன், ப. 15

வேலை பார்த்தல், கரும்பாம்பு, பாம்பால் மரணம், மற்றவரைக் விஷமிட்டுக் கொல்லல், ஜலத்தில் கண்டம், வெட்டுக் காயம், பிளவை, அங்கஹீனம் ஏற்படுதல், வலிப்பு நோய் ஏற்படுதல், தகாத செயல்களில் ஈடுபடல், திருடுதல், திருட்டுக் கொடுத்தல், குடிப்பழக்கம், ஜாதி மாறுதல், ஜாதி மாறிக் கல்யாணம் செய்து கொள்ளுதல், விதவைகள் ஸ்திரீகள் சேர்க்கை, அருவருப்பான பெண்களை புணர்தல், கருப்பு நிறப் பொருள் வியாபாரங்களில் அதாவது கடுகு, உளுந்து, எள், பிண்ணாக்கு, எண்ணெய் போன்ற பொருட்களின் வியாபாரங்களில் நன்மை, வாய்வுத் தொந்தரவுகளுக்கு ஆளாகுதல், குஷ்டநோய் முதலானவைகளைக் குறிக்கும்.[9] உடல் உறுப்புகள் பெரிதாக இருத்தல், மூர்க்கக் குணம், கூடுதல் போக இச்சை, சுயநலம், பேராசைமிக்கவர், பூர்வீக சொத்து, தனம், தற்புகழ்ச்சியான பேச்சாற்றல், பிறநாட்டினர் பணம், அமைதியான மனநிலை, சுவாசக் கோளாறுகள், மனோதைரியம், பூர்வீக உடமைகளை இழத்தல், பூர்வீகச் சொத்து, நல்ல கல்வி, சன்னியாச வாழ்க்கை, கூடுதல் காதல் வேட்கை, முறைதவறிய காதல் உறவு, ஓரினச் சேர்க்கை உறவுகள், சுவாசக் கோளாறு, இடப் புறத்தில் பாதிப்புகள், செயல் திறன் குறைவு, அன்னியரால் இலாபம், புணர்ச்சியில் ஈடுபாடு, அலித்தன்மை, அன்னிய சமயத்தவர் கூட்டு, அன்னிய சமயத்தினரால் தொல்லை, பூர்வீகச் சொத்துக்கள் மூலம் பிரச்சினை, சுவாசத்தில் தடை, பலமொழிக் கல்வி, ஆய்வாளர், உடல் உறுப்புக்களை மாற்றிக் கொள்ளல், கௌரவம், அந்தஸ்து உள்ள பணி, ஒழுக்கமில்லாத நண்பர்கள், மது, மாது, கேளிக்கைகளில் கூடுதல் ஈடுபாடு, சிறைத்தண்டனை, சிறையிலிருந்து தப்பித்தல், பலதாரக் கூட்டு போக இச்சை.[10]

[9] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 22

[10] நவீன கால சோதிட வளர்ச்சி – டி. விமலன் - ப. 48

கடின வார்த்தை, சூதாட்டம், கள்ளக்கடத்தல், ஏமாற்றுதல், வஞ்சித்தல், பாம்பு, கவலை, விஷபயம், சிறைத்தண்டனை, சட்டவிரோதச் செயல்கள், நோயுள்ள பெண்ணிடம் உடல்உறவு, நீரினால் கண்டம், குலத்திற்கு எதிர்மாறான செயல், முதுமை, பிதுர்வழிப் பாட்டனார், தோட்டம், வாயு, திருடர், மல்யுத்தம் செய்தல், எள்ளு, அறிவியல், மலைவாசிகள், பரதேசி, வேடத்தொழில், கவலைப்படுதல், கடவுள் இல்லை என்பவர், தாழ்ந்த இனம், அசுத்தம். [11] குடை, சாமரம், ராஜ்ஜியம், குதர்க்க வாதம், கடின வாக்கு, தாழ்ந்த ஜாதி, பாவச் செய்கையுடைய பெண், நாத்திகன், சூத்திரன், சூதாட்டம், அஸ்தமனத்தில் பலம், தீய பெண்ணோடு சேர்க்கை, தேசாந்திரப் பயணம், அசுத்தம், எலும்பு, வயிற்றுப் புண், கபடம். கலக்கம், மிலேச்சன், ஆபத்தான கட்டி, விஷம சஞ்சாரம், மலைகளில் துன்பம் அனுபவித்தல், வெளியிடங்களில் தங்குதல், தென்மேற்குத் திசை, காற்று, கபம், கவலை, சர்ப்பம், தென்றல், பிரயாணம், ஒரு முகூர்த்தம், முதுமை, வாகனம், நாக லோகம், தாய்வழிப்பாட்டன், வாயு, சூலைநோய், சுவாச காசம், இளைப்பு, மகாப்பிரதாபம், துட்டத்தனம், துட்ட மிருகங்களோடு சேர்க்கை, உருதுமொழி எழுத்தாற்றல், கடின மொழி. [12] ஞானம், பிதாமகன் (பிதுர் பாட்டன் வம்சம்), பிரதாபம், செப்பிடு வித்தை, களவு, நானாவித வேடத் தொழில், சேவகத் தொழில், பரதேச வாசம், சாதிக்கு விரோதமாய் செய்ய தகாத தொழில்கள் செய்தல், விகடவிநோத வித்தைகள், வியாதிஸ்திரீ போகம், குஷ்டம், வீக்கம், நாட்பட்ட ரோகம், விஷபயம், ஜலகண்டம், அங்கஹீனம், வாய்வு வலிப்பு, பித்தம், குன்மம்,

---

[11] வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் – டி. விமலன் - ப. 223

[12] உத்திரகாலாம்ருதம் - மூலமும் உரையும் - எஸ்.எம். சதாசிவம் - ப. 167

வெட்டுக்காயம், பிளவை முதலிய ரோகங்கள். விலங்கு, சிறைப்படல். [13]

சனியின் காரகத்துவம்

சனியும் வானத்தில் நல்ல ஒளியுடனும், அழகுடனும் தோன்றுகின்றது. வெற்றுக் கண்களால் நாம் இதைக் கண்டுகளிக்கலாம். இதன் குறுக்களவு 73,000 மைல்களாகும். சூரியனுக்கும், சனிக்கும் இடைப்பட்ட தூரம், சராசரியாக 88.6 கோடி மைல்களாகும். இது சூரியனை ஒரு முறை சற்றிவருவதற்கு 29 ½ ஆண்டுகள் ஆகின்றது. இதனுடைய தற்சுழற்சியின் காலஅளவு நம் கணக்கில் 10 ¼ மணி நேரமாகும். [14] இயற்கையிலேயே அசுபர். சனியின் ஆதிக்கம் வலிமை உடையது. அதே சமயம் எதிர்மறையானது. நோய், வயோதிகம், மரணம், தத்துவம், வைராக்யம், துன்பம், கஷ்டப்படுதல், இழப்பு. திருட்டு போதல், சூதாட்டம், ஒழுக்கமற்ற செயல்கள், நீண்ட ஆயுள், தடைகள், எல்லைகள், அவமரியாதை, தவறான செயல்கள், வேட்டைக்காரர்கள், யோகாசனப்பயிற்சி முதலியன சனியின் காரகத்துவங்கள்.[15] சூரியனுக்கு வெகு தொலைவில் சனி உள்ளார். எனவே மிக்குறைந்த வெளிச்சமே அங்கு உள்ளது. சனிக்கோள் மிகக் குளிர்ச்சியானது. வறண்டது. கடினமானது. மலட்டுத்தன்மை உடையது. கட்டுப்படுத்துவது. [16] சனியின் ஆதிக்கத்தில் உள்ளவர் சோம்பேறியாகவும், மந்தமானவராகவும், சூதாடுபவராகவும் இருப்பார்.

---

[13] குடும்ப ஜோதிடம் - ஸ்ரீராமய்யங்கார் - ப. 48

[14] அடிப்படை சோதிடவியல் - டி. விமலன் - ப. 47

[15] ஜோதிஷ வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 118

[16] ஜோதிஷ வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 118

வண்ணம் - நீலம். இரத்தினம் - நீலக்கல். உலோகம் - இரும்பு. எண். – 8. [17]

திருடர்கள், வேலையாட்கள். அன்னிய நாடுகள். அன்னிய மனிதர்கள், அன்னிய மொழி கற்றல், வெளிநாட்டுப் பயணம். விவசாய உற்பத்தி, எண்ணெய், வாயு, இரும்பு, தாதுக்கள், வேட்டையாடுபவர், யோகப்பயிற்சி, ஆபத்தான பொருட்கள். வறுமை, ஏழ்மை, கொடூரத்தனம், கால் ஊனம், ஏமாறுதல், ஒற்றுமையின்றி இருத்தல், சச்சரவுகள், மனச்சோர்வு, ஏக்கம், சுவாசக் கோளாறுகள், இல்லற வாழ்வில் குறைபாடுகள் ஆகியன சனியின் செயல்களாகும். [18] ஸ்திரத்தன்மை, பொறுமை, விடாமுயற்சி, எதையும் தாங்கும் தன்மை, விவேகம். முன்ஜாக்கிரதை, சுயக்கட்டுப்பாடு, கடமை உணர்வு, சிக்கனம், பொதுசன தலைமை அமைப்பு, இரக்கம், தயை ஆகியவை சனியின் சுபத்தன்மைகள். உச்சத்தில் சனி இருந்தால் நீண்ட ஆயுள், தர்மவான், தன் துணையிடம் நேசம். [19] ஒரு மனிதனின் ஆயுள், மரணம், அச்சம், துக்கம், அவமானம், கீழிறக்கப்படுதல், நோய், வறுமை, கூலி வேலை செய்தல், அபவாதம், பாபம், அசுத்தத்தன்மை, தண்டிக்கப்படுதல், துரதிர்ஷ்டம், நிலையாக இருத்தல், தாழ்ந்தவருக்கு சேவகம் செய்தல், விவசாயத்துடன் தொடர்பானவை, சிறைச்சாலை, கட்டுப்படுதல் ஆகியன யாவும் சனியால் அறியப்படுபவை.[20]

சனியின் நிறம் அடர்ந்த இருள் வண்ணம், கால்களில் ஊனம் உடையவன், வாயு சுபாவம் உடைய உடல்கூறு பெற்றவன், இவனின் கண்கள் ஆழத்தில் அமைந்திருக்கும், மெலிந்த நெடிய

---

17 மேலது.

18 மேலது.

19 மேலது பக்.119

20 பலித ஜோதிடம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 71

உடல் உடையவன், இரத்தக் குழாய்களும் நாளங்களும் உடைய உடலமைப்பு பெற்றவன், சோம்பேறி, அவதூறு பேசுபவன், உடம்பின் தசைப்பகுதிகளை ஆள்பவன், கொடூரமானவன், இரக்ககுணம் இல்லாதவன், மந்தமான புத்தி உடையவன், நீண்ட பெரிய நகங்கள் உடையவன், அடங்காத கேசம் உடையவன், அழுக்குடையவன், பாப செயல் புரிபவன், மூர்க்க குணமும், கோபமே உருவெடுத்தவனாக இருப்பவன். வயதான தோற்றம் கொண்டு கருப்பு நிற ஆடை அணிந்திருப்பான்.[21] ஒதுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகள், அழுக்கான இடங்கள், மேற்குத்திசை, ஐயனார் என்று நம் தமிழ்நாட்டில் பரவலாக வணங்கி வழிபடும் ஐயப்பன் என்ற சாஸ்தாவின் கோயில்கள்.[22] சோம்பல்தன்மை, முட்டுக்கட்டைகள், துன்பம், நோய், துக்கம், இறப்பு, பெண்ணின் மூலமாக இன்பம், இனத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர், ஒழுங்கற்ற உடல் உறுப்புகள், அலி, பார்வைக்கு அழகானவர், தாழ்ந்த இனத்தில் பிறத்தல், நேர்மையற்ற நடத்தை, ஆண்மையில்லாமை, பொய் பேசுதல், வள வள பேச்சு, கூடுதலான கோபம், கீழ்த்தரமான பெண்ணிற்கு பிறத்தல், தவறான வழியில் பிறத்தல், கைம்பெண்ணின் முறைதவறிய நடத்தை, அழுக்கு ஆடை மற்றும் வீடு, தீயவர்களுடன் பழகுதல், கொடூரம், பெருந்தன்மை, இரத்தினங்கள், சூத்திரர் மற்றும் வைசியர், மற்ற பிரிவினரின் பணிகளை கற்றுக் கொள்ளுதல், நொண்டி, முடம், கொடியவன், விவசாய தொழிலாளர் வாழ்வு, விவசாய தொழிலால் வாழ்க்கை, வீழ்ச்சி, போர், தவறாகப் பயன்படுத்தப்படும் வலிமை, பாம்புலகம், துருக்கி நாட்டார், கிழிந்த ஆடை, சோம்பல் குணமுள்ள அந்தணர், மலைகளிலும் வனங்களிலும் அலைதல், இரக்கமற்றவர், வேட்டைக்காரர், காம

[21] பலித ஜோதிடம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 71

[22] மேலது.

வேட்கை, கவர்ச்சியாக உடையணிதல், களவு, கொடிய செயல்களில் நாட்டம்.[23]

சனி கறுப்பு நிறமும் மேற்கு திசையும் பிரீதியானது. அதிர்ஷ்டக்கல் - நீலம். சனி முழங்கால், கணுக்கால், எலும்பு, பற்கள் ஆகிய உறுப்புகளை குறிக்கும். சுனி கொடுக்கக்கூடிய நோய் பல் நோய், இளைத்த உடல், இருமல், காசம், வாய்வுப்பிடிப்பு, மனோ பீதி முதலியன.[24] சாதகத்தில் சனி மிக நேர்த்தியாக அமையப் பெற்றிருப்பின் உண்மை, நேர்மை, உழைப்பு, சிக்கனம், சாமர்த்தியம், துறவியாதல், ஞானியாதல் போன்ற உயர் குணங்களை கொடுக்கும்.[25] சனி இரகசியவாதியாயிருத்தல், யாரிடமும் அதிகம் பழகாமை, பெண்களை கண்டு நாணுதல், தயக்கம், சந்தேகம், மந்த புத்தி, மனோபயம், நீண்ட காலம் நோயினால் அவதிப்படல், அங்க பின்னம் ஏற்படல், அவமானத்துக்குள்ளாதல், பதவியினின்றும் இறக்கப்படல், பதவியிறக்கம் செய்யப்படல், துன்பம், துயரம், ஏமாற்றம், துரதிர்ஷ்டம், காரியதாமதம், தோல்வி, கடனால் தொல்லைகள், பசி, பட்டினி, சாமியார் ஆகுதல், பிச்சை எடுத்தல், கூலி வேலை செய்தல், சதிவேலைகள், வஞ்சனைப்புத்தி, திருட்டுப்புத்தி, ஜெயில்வாசம், விதவைப் பெண்களை புணர ஆசைப்படுதல், அருவருப்பான பெண்களை புணர ஆசைப்படல் ஆகியவை.[26]

தாழ்வு எண்ணம், கோழைத்தனம், எவரையும் நம்புவது இல்லை, மந்த புத்தி, சந்தேகக்குணம், கூடுதல் பொய், சப்தமில்லாத பேச்சு, கருமித்தனம், பிறர் பொருள் மீது பேராசை கொள்ளல், பயந்த தன்மை, மன நோய், தனது கருத்துக்களை

---

23 உத்திரகாலாம்ருதம் - டி. விமலன் - ப. 13

24 சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 21

25 மேலது.

26 சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 22

வெளியில் கூற அச்சம் கொள்ளுதல், விரைவில்லாத ஈடுபாடு, தாமதம், கருப்பு நிற பொருட்கள், இரும்பு சாமான்கள், தாமதமாக கல்வி, தரிசு நிலங்கள், அழுக்கடைந்த இடங்களில் வசித்தல், ஒழுக்கமில்லாத, துக்கமான காதல் உறவு, இன்பமின்மை, மந்த புத்தி உடைய குழந்தை, கீழத்தரத்தாருடன் காதல் உறவு, தோல் சம்பந்தமான நோய்கள், சிறிய தொகை, சிரமத்தின் பேரில் கடன், கூலி வேலைகள், பணவரவில் தாமதம், நிலையற்ற மனைவி, வயதுக்கு மூத்த பெண், ஒழுக்கமில்லாத குணம், பொய்யான நடிப்பு, விபத்து, தற்கொலை, புத்தியை இழத்தல், ஞாபகசக்தி குறைவு, நல்ல ஆய்வு சம்பந்தமான கல்வி, தாமதமான மாற்றங்கள், தகுதிக்கு குறைந்த அல்லது முதுமைப் பெண்களிடம் முறையற்ற தொடர்பு, நிலையான தொழில், அதிக உழைப்பு, தாமதமான உயர்வுகள், அல்லது உயர்வற்ற தொழில்கள், நண்பர்கள், ஒழுக்கமின்மை, தனது ஆசைகளை வெளியே காட்டிக் கொள்ளாமை, இரகசிய செயல், ஆய்வு, சேமிப்பு, அந்தரங்க வாழ்க்கையில் சிக்கல்கள்.[27] வேலையாட்கள், துன்பத்தை தரும் தொழில்களினாலும், (ஆடு வெட்டுதல், கோழி வெட்டுதல், துன்பம் தரும் தண்டனைகளை நிறைவேற்றுதல் போன்றவை) சுமைதூக்குதல், தன் நிலைக்கு குறைவான பணி செய்வதாலும் பொருள் தேடுவர்.[28]

அனாரோக்கியம், தொல்லைகள், இடையூறு, மனக்கவலை, வியாதி, விரோதம், துக்கம், மரணம், ஸ்திரீ சௌக்கியம், பெண் பணியாள், ஜாதிப்பிரஷ்டம், விசித்திர மனிதன். அங்கஹீனன், தருமம், எஜமான், ஆயுள், கீழ் ஜாதியில் பிறத்தல், திரேதாக்னி, பணியாளின் கடமைகள், ஒவ்வாத செயல்கள், ஆண்மையின்மை, பொய் பேசுதல், நீடித்த விருப்பம், முதுமை, கோபமும் வெறுப்பும்,

---

[27] நவீன கால சோதிட வளர்ச்சி – டி. விமலன் - ப. 45

[28] பிருகத் சாதகம் - டி. விமலன் - ப. 41

முயற்சி, கீழ்த்தரமான பெண்ணுக்கு பிறத்தல், விதவையின் முறை தவறிய நடத்தை, தவறான வழியில் பிறந்த குழந்தை, அழுக்கு ஆடை, துஷ்டனோடு நட்பு, கெட்ட எண்ணம், பாவம், குரூரம், கருநிற தானியங்கள், ரத்தினங்கள், இரும்பு, தயாள குணம், பரோபகாரம், இதர சாதி நடைமுறைகளை அறிந்து கொள்ளுதல், நொண்டி, கொடியவன், ஆயுள் நீடிக்க வேண்டி பரிகாரம், விவசாயம், ஆயுதசாலை நிர்வாகம், வெளியுறவு, கீழே விழுதல், யுத்த பூமியில் சஞ்சாரம், முரட்டுத் துணிச்சல், தாமஸ குணமுள்ள பிராமணன், விஷ பூமியில் அலைதல், மலைகளில் சஞ்சாரம், முரட்டுத் துணிச்சல், வேட்டைக்காரன், அருவருப்பான முடி, முழுமையான இராஜ்யம், வெள்ளாடு, காம இச்சை, கவர்ச்சியான உடை அணிதல், நாய், திருட்டு, கல்நெஞ்சம்.[29] சோம்பல், மரம், கல், மண் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், கருமை நிறப் பொருட்கள், மண்ணெண்ணை, கச்சா எண்ணை, கள்ளத்தனமான மது விற்பனை, கிழிந்த ஆடை, பிறர் பொருளில் ஆசை, அழுக்கான இடம், வெளியிட வாழ்வு, கருமி, இறப்பு, ஆயுள், அதிர்ட்டமின்மை, வறுமை, பாவச்செயல், நோய்த்தன்மை, விவசாய செயல், சிறைத் தண்டனை, பேரழிவு, மாசு, துன்பம், ஒவ்வாத செயல்கள், கல்நெஞ்சன், பொய் பேசுதல், வாக்கு தவறுதல், தீய எண்ணம், கீழான பணியாளர், அடிமை செயல், ஒதுக்கப்பட்ட இடங்கள், நாடோடியாக அலைதல், பொறாமை, நேர்மை குறைவு, பிரேத காரியம், ஏழ்மை, விபத்து.[30] தீர்க்காயுசு, சாத்தான் உபாயம், இரும்பு, ஆள்அடிமை, வயல்களம், மரவேலை, களவு, ஆத்மஹிம்சை, சிறைப்படுதல், இராசதண்டனை, வீண் வார்த்தை, வெட்கமில்லாமை, துன்பம், வாயடித்தல், கடன், மயக்க உணவு, நீச்சப்பெண், விதவைப்பெண், நாடுகடத்தப்படுதல், ஊனமான பெண்

---

[29] உத்திரகாலாம்ருதம் - மூலமும் உரையும் - எஸ்.எம். சதாசிவம் - ப. 166

[30] வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் – டி. விமலன் - ப. 222

சேர்க்கை, அலி, உடல்அவயக் குறைவு, சித்தப்பிரமை, பித்தநோய், கடுகு, உளுந்து, எள்ளு எண்ணெய் இவற்றிற்கெல்லாம் சனியே காரகன். [31]

சந்திரனின் காரகத்துவம்

இக்கோள் சூரிய குடும்பத்தின் ஒரு துணைக்கோளாக உள்ளது. இக்கோள் பூமியின் துணைக்கோளாக பூமியைச் சற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருகிறது. பூமியிலிருந்து சுமார் 2,38,000 மைல்கள் தொலைவில் உள்ளது. இதன் குறுக்களவு 1,160 மைல்கள் ஆகும். பூமியைச் சந்திரன் 29 நாட்கள், 12 மணி, 44 நிமிடம், 2.8 விநாடிகளில் ஒருமுறை சுற்றிவருகின்றது. இது சூரியனுடைய நிலையைக் கொண்டு கணிக்கப்பட்ட ஒரு கால அளவானதால் இதற்குச் சௌரமானம் (Synodic Period) என்று பெயர் வழங்கப்படுகிறது. ஒரு விண்மீனை (நட்சத்திரத்தை) பின்னணியிடப்பட்டுச் சந்திரனுடைய பெயர்ச்சியைக் கணக்கிட்டால் அது பூமியை 27 ¼ நாட்களுக்கு ஒருமுறை சுற்றி வருவதைக் காணலாம். இதற்கு நட்சத்திரமானம் என்று பெயர். பூமியும், சந்திரனும் சேர்ந்து சூரியனைச் சுற்றிவருவதால் சௌரமானத்திற்கும், நட்சத்திரமானத்திற்கும் 2 நாட்கள் வித்தியாசம் ஏற்படுகின்றது. தற்போது கூட சந்திரனின் கவர்ச்சியால் கடல்களில் கொந்தளிப்பும், நிலப்பகுதிகளில் அதிர்ச்சியும் தோன்றுகின்றன. இதனால் பூமியின் சுழற்சி வேகம் குறைந்து வருவதாகவும், சந்திரன் ஒரு நூற்றாண்டில் ஏழு அடி வீதம் அப்பால் ஒதுக்கப்படுவதாகவும் வானசாத்திரத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. இதனாலேயே அக்காலத்தில் அமாவாசை, பௌர்ணமி திதிகளில் பூமியில் ஏற்படும் மாற்றங்களினால் சந்திரனுக்கு அதிக முக்கியத்துவம் சோதிட சாத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் கூறப்படும் பொதுவான இராசி

---

[31] குடும்ப ஜோதிடம் - ஸ்ரீராமய்யங்கார் - ப. 47

பலன்கள் சந்திரனின் நிலையைக் கொண்டே (ஒருவர் பிறந்த இராசியின் அடிப்படையில்) கணக்கிடப்படுகிறது. மேலும் அன்றைய தினத்தில் பார்க்கப்படும் நட்சத்திரம் என்பது சந்திரன் வானமண்டலத்தில் கடந்து கொண்டிருக்கிற நட்சத்திரத்தையே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. விம்சோத்திரி தசா என்பதும் சந்திரனை மையப்படுத்தியே ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே சோதிட சாத்திரத்தில் சந்திரனுக்கு கொடுத்த முக்கியத்துவம் போல் மற்ற கோள்களுக்கு இவ்வளவு சிறப்பான அமைப்பு கொடுக்கவில்லை. பஞ்சாங்கம் என்பது எற்படுவதற்கு, முக்கியமாக திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகியவை கணக்கீடு செய்வதற்கு சந்திரனும், சூரியனும் தேவையாக உள்ளது. [32]

மாதா, பராசக்தி, கணபதி, சுகபோசனம், வஸ்திரம், குதிரை, நித்திரை, சிறிது நாள் பருத்தும், சிறிது நாள் இளைத்தும் இருக்கும் சரீரம், சித்த சுவாதீனமின்மை, ஷயரோகம், சீதள நோய்கள், இடக்கண், புருவம், குடை, உத்தியோகம், கீர்த்தி, முத்து, ஸ்திரமின்மை, முத்தாபரணம், வெண்கலம், வெண்ணை, அரிசி, பனிப் பயறு, உப்பு, மச்சம், உழவன், உப்பளவர், வண்ணார், சத்திரம், கந்தபுஷ்பம், சாமரம், பலம் இவைகட்கெல்லாம் சந்திரனே காரகன். [33] அறிவுத்திறன், மலர், நறுமணப் பொருட்கள், கோட்டைக்குள் செல்லுதல், நோய், அந்தணர், சோம்பல், காக்காய் வலிப்பு, மண்ணீரல் வீக்கம், மெய்மறந்த நிலை, இதயம், பெண், நல்லது அல்லது தீயது, புளிப்பு, மகிழ்ச்சி, நீர்ப்பொருள், வெள்ளி, கட்டிக்கரும்பு, குடற்காய்ச்சல், பயணம், கிணறு, குளம், தாய், நடுநிலமை, முத்துக்கள், சயரோகம், வெண்கலம், உப்பு, குள்ளம்,

---

[32] அடிப்படை சோதிடவியல் - டி. விமலன் - ப. 35

[33] குடும்ப ஜோதிடம் - ஸ்ரீராமய்யங்கார் - ப. 46

திறமை, குளம் குட்டை, வைரம், சரத்ருது, இரண்டு நாழிகைப்பொழுது, வெண்மையானநிறம், அனுகூலம், நகைச்சுவை, ஊட்டச்சத்து, இன்பம், சிறப்பு, தபஸ்வி, புகழ், அழகு, இரவில் வலிமை, கற்றவர், உப்புநீர், வேலை பெறுதல், வெளிநாடு செல்லுதல், தோள்பட்டை நோய், அரசவிருதுகள், தூய்மையான பளிங்கு, வெண்மையான ஆடை. [34] சந்திரன் பெண் கோளாதலால் 5ஆம் வீட்டோடு சம்பந்தப்படின், சாதகருக்கு நிறைய பெண் குழந்தைகள் ஏற்படும். [35] சந்திரன் கண், வயிறு, பெண்களின் மார்பகங்கள், உமிழ்நீர், நிணநீர், சிறுநீர். இந்திரியம் போன்ற சுரப்பிகள் ஆகியவற்றைக் குறிக்கும். [36]

சந்திரன் கண்நோய், பால் குறைவாகச் சுரத்தல், உடல் வளர்ச்சிக் குறைவு, ஜலதோஷம், சளி, இருமல், வாந்திபேதி போன்ற நோய்களைக் குறிக்கும். [37] சந்திரன் நீரைக் குறிப்பதால், சந்திரனை கொண்டு விவசாயம், வீடு அல்லது வயல்களில் நீர் வசதிகள், பம்புசெட்டுப் பாசனம், கிணற்றுப்பாசனம், ஏரிப்பாசனம், ஆற்றுப்பாசனம். சந்திரன் நீரைக் குறிப்பதால் சந்திரனைக் கொண்டு சிந்தனை, கற்பனை, புகழ் பெறுதல், பெருமையடைதல், அறிவாளியெனப் பெயரெடுத்தல், நல்ல சிந்தனை, நிலையற்ற புத்தி, அமைதியற்ற மனோநிலை, அடிக்கடித் தொழில் இருப்பிடங்களை மாற்றுதல், சுற்றித்திரிதல், அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ளுதல், கடற்பயணம் மேற்கொள்ளுதல், சிங்கப்பூர், பிரான்ஸ் போன்ற வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளுதல். [38] வேகமான

---

[34] உத்திரகாலாம்ருதம் - டி. விமலன் - ப. 08

[35] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 16

[36] மேலது ப. 17

[37] மேலது.

[38] மேலது.

சிந்தனைத்திறன், செயல். புத்திக்கூர்மை. நீர்ப்பாங்கான உடல்வாகு. ஞாபகசக்தி, விரைவான தனவரவு, வெள்ளி, அலுமினியம் சம்பந்தமானது. நல்ல தெளிவான பேச்சாற்றல், குழப்ப மனோநிலை, விரைவான தகவல் தொடர்பு, ஒப்பந்தம், நல்லகல்வி, விவசாய நிலம். எண்ணெய்க் கிணறு, நீர்பாங்கான இடத்தில் வசித்தல், விரைவான காதல் உறவுகள், கலைத்துறையில் மிகுந்த ஆற்றல், வேகமாக மற்றவர்களுக்கு இணங்குதல், நீர், இரத்தம் சம்பந்தமான நோய், விரைவான பணவரவு, வேகமான வெற்றி, இளவயதுடைய பெண், வேகமான புணர்ச்சி, அடிக்கடி மனமாற்றம் உடையவர், விரைவில் மற்றவர்களுக்கு இணங்கிவிடுதல், நீரினால் கண்டம், தாய்மூலம் பிரச்சினை, ஞாபசக்தி குறைதல், உடலில் உள்ள நீர் குறைதல், இரத்தம் குறைதல், நல் ஆராய்ச்சித்திறன், வேகமான பயணம், தாய்மூலம் கௌரவம் அடைதல், நல்ல உயர்கல்வி, கேள்வி ஞானம் உடையவர். நீர் சம்பந்தமான திரவம், எண்ணெய், வெள்ளி, அலுமினியம், பால், அரிசி போன்ற துறைகளில் பணி. சுறுசுறுப்பான நண்பர்கள், புத்திக்கூர்மையானவர்கள். வேகமாக தனது விருப்பங்களை நிறைவேற்றுதல், தாய்மூலம் மறைமுகத் தொல்லை, விளைநிலங்களுக்கு மூலதனம் செய்தல், சோம்பல் நிறைந்த தோற்றம். [39]

விவசாயம், நீரினால் ஏற்படும் பொருட்கள். பெண்கள் மூலமாக ஏற்படும் தொழில்கள் (ஆடை தயாரித்தல், தையல் வேலை மற்றும் பல) [40] தாயார், பூக்கள், காய்கறிகள், நீர் தொடர்புடைய பொருட்கள், சளி நோய்கள், கட்டிக்கரும்பு, விவசாய விளைபொருட்கள், ஆறு, குளம், கிணறு, உப்பு, ஆடைகள், நீர்வாழ் உயிரினம், பெண், நெய், எண்ணெய், தூக்கம், வெள்ளி,

[39] நவீன கால சோதிட வளர்ச்சி – டி. விமலன் - ப. 36

[40] பிருகத் ஜாதகம் - டி. விமலன் - ப. 41

தேன், பழங்கள், எச்சில், நிகழ்காலச் சிந்தனை, மதுபானம், பால், அலுமினியம், இன்பம், கப்பல் தொழில், கட்டுமரம், மனம், குள்ளம், அறிவுக்கூர்மை, அன்பு செலுத்துபவர், வலிப்பு நோய்கள். [41] புத்தி, புஷ்பம், சுகந்தம், கோட்டைக்குள் செல்லுதல், வியாதி, சோம்பல், கபம், காக்காய் வலிப்பு, குடல்புண், அறிவின் நிலை, இதயம், பெண், சுப அசுபத்தன்மை, நெஞ்செரிச்சல், தூக்கம். மகிழ்ச்சி, திரவம், வெள்ளி, குளிர்ஜுரம், தீர்த்தயாத்திரை, தாயார், நடுநிலைமை, முத்துக்கள், ஷயரோகம், வெண்மை, வெண்கலம், அரைக்காசு, புத்தி, திறமை, வைரம், முகூர்த்தகாலம், முகவசீகரம், நகைச்சுவை, போஷாக்கு, தேன், அனுகூலம், இன்பம். சுறுசுறுப்பு, புகழ், லாவண்யம், காதலி, பதவி பெறுதல், நவரத்தினங்கள், ஜீவன், போஜனம், தூரதேசங்களுக்குச் செல்லுதல், அரசரால் வழங்கப்படும் பட்டம், நல்ல இரத்தமும் தாது விருத்தியும், ஆடைகள், பிரகாசம், சுத்தமான ஸ்படிகம், சுத்தம் செய்யப்பட்ட துணிகள் [42] பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் சந்திரன் ஆகும். எனவே சாதகத்தில் மிக முக்கியத்துவம் பெறும் கோள். மாதாவையும் குறிக்கும். பெண்தன்மை, வெண்மை நிறம், புகழ், மக்களின் நன்மதிப்பு, உணர்ச்சிகள், மகிழ்ச்சி, சிந்தனை, கடல் அலைகள், வளர்பிறையில் சுபர். செல்வம், மதிப்பு, மரியாதை, மன அமைதி, ஆரோக்கியம் இவற்றை குறிப்பவர். [43]

மனம், கற்பனை, மனநிலை, பூக்கள், நறுமணம், கரும்பு, அந்தண ஜாதி, காக்கை வலிப்பு நோய், உப்புச்சுவை, வெண்மைநிறம், கபம், டைபாய்டு ஜுரம், நுரையீரல், மண்ணீரல் தொடர்பான நோய்கள், பெண்மை, தாய்மைக்குணம், தூக்கம்,

[41] வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் – டி. விமலன் - ப. 221

[42] உத்திரகாலாம்ருதம் - மூலமும் உரையும் - எஸ்.எம். சதாசிவம் - ப. 160

[43] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 112

(அமைதி) மகிழ்ச்சி, திரவப் பொருட்கள், வெண்கலம், அயல்நாடு செல்லுதல், கிணறு, குளம். குட்டை, அம்மா, முத்துக்கள், இடுப்பில் அணியும் பெல்ட் மற்றும் ஒட்டியாணம், குள்ளமான உருவம், மழைக்காலம், பார்வதி தேவியை வணங்குதல், கோதுமை, நல்ல பழவகைகள், முகம், தேஜஸ், அழகு, பட்டு ஆடைகள். மென்மையான ஆடைகள், ஊட்டமளித்தல், தயிர் விரும்புதல், இரவில் வலிமை, மத்திய லோகம், மேற்குத்திசை, மத்திமவயது, இரத்தத்தின் தூய்மை மற்றும் வலிமை, மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்கள், பாம்பு, தோள்பட்டை நோய்கள், குடை போன்ற அந்தஸ்த்தைக் காட்டும் ஆடம்பரச் சின்னங்கள், வேகமான சிந்தனை, நகைச்சுவைப் பேச்சு, சந்நியாசி, பரதேசி, திறமை, அறிவுடமை, வேலை கிடைத்தல். [44] கற்றவர், உருண்டையான உடல்வாகு, இனிமையான தோற்றம் மற்றும் பேச்சு, மாறும் மனம், காமம் உள்ளவர், கவரும் கண்கள், உயரமானவர், மென்மையானவர், வெண்ணிற ஆடை ஆபரணங்களை அணிபவர், இளமையானவர், நல்ல நிறம், சுருண்ட கேசம், நண்பர்க்கு இனிமையானவர், நல்ல இரத்தம் உடையவர், பணிவானவர், வயோதிக பெண்களை ஆதரிப்பவர், அதிர்ஷ்டமானவர், தூய ஆடை அணிபவர். [45] தாயின் நலம், மன அமைதி, (மனத்தெளிவு) கடல் நீராடுதல், வெண் கொற்றக்கொடை, சாமரம், விசிறி, பூக்கள், மிருதுவான பழங்கள், தானியங்கள், விவசாயம், புகழ், முத்து, வெண்கலம், வெள்ளி, இனிப்பான உணவுகள், பால், பசுக்கள், பெண்கள், ஆடைகள், நல்ல உணவு, அழகானதும். ஆரோக்கியம் உள்ளதுமான உடல் ஆகியன சந்திரனால் அறியப்படும். [46] பருமனான உடல், இளமை மற்றும் முதுமை, மெலிந்த தேகம்,

---

[44] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 112

[45] மேலது பக்.112

[46] பலித ஜோதிடம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 67

வெண்மை நிறம், அழகானதும் கவர்ந்திழுப்பதுமான நீலநிறக் கண்கள், கருத்த நீண்ட கேசம், இரத்தத்தை ஆள்பவர் சந்திரன். மென்மையான பேச்சு உடையவர், வெண்ணிற ஆடை தரித்துள்ள சந்திரன் அழகான நிறமும் கொண்டவர். கபம் மற்றம் வாயு உடையவர். மிருதுவான குணமுடையவர். [47]

இராகுவின் தொழில்கள்

பிரசங்கம் செய்பவர், புதிதாகக் கண்டுபிடிப்பவர், மனோதத்துவ நிபுணர், சோதிடர், திருடன், பொற்கொல்லர், விமான ஓட்டிகள், சிற்பிகள். [48] பாம்புப் பிடாரன். [49] சிறைகளில் வேலை பார்த்தல், திருடுதல், கருப்பு நிறப் பொருள் வியாபாரங்கள், கடுகு, எள்ளு, உளுந்து, பிண்ணாக்கு, எண்ணெய் போன்ற பொருட்கள் வியாபாரம். [50] உயிரற்ற, சேதமடைந்த பொருட்களைப் பாதுகாக்கும் துறைகள், முறைகேடாகச் செயல்படும் துறைகள், ஏமாற்றுத் துறைகள், சூது சம்பந்தப்பட்ட துறைகள், ஒற்றர் துறைகள், மின்னணுவியல் துறைகள், திருட்டுத் துறைகள், விஷப்பொருட்கள், பெரும்நோய்கள், மாந்திரீகத் துறைகள் ஆகியவற்றின் உட்பிரிவுகளுக்கு இராகு காரகன். [51] அந்நிய நாட்டுத் தொடர்புடைய தொழில், அந்நிய நாட்டில் வேலை, மருத்துவம், ஸ்பெகுலேசன், சீட்டு, ரேஸ், ஷேர், கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்சி, தரகு, கடத்தல் மற்றும் மறைமுகமான

---

[47] பலித ஜோதிடம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 67

[48] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 121

[49] பலித ஜோதிடம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 72

[50] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 22

[51] தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு – டி. விமலன் - ப. 04

தொழில் அனைத்தும், சினிமாத் தொழில், பாம்புத் தோல் வியாபாரம் மற்றும் மாந்திரீகம் போன்றவை. [52]

சனியின் தொழில்கள்

திருடர்கள், வேலையாட்கள், அந்நிய நாடுகள், அன்னிய மனிதர்கள், அன்னிய மொழி கற்றல், வெளிநாட்டுப் பயணம், விவசாய உற்பத்தி, எண்ணெய், வாயு, இரும்பு தாதுக்கள், வேட்டையாடுபவர், யோகப்பயிற்சி, ஆபத்தான பொருட்கள், வறுமை, ஏழ்மை, கொடூரத்தனம், கால் ஊனம், ஏமாறுதல், ஒற்றுமையின்றி இருத்தல்.[53] எண்ணெய் வியாபாரி, வேலைக்காரன், இழிவானவன், வேடன், இரும்பு வேலை செய்யும் கருமான் என்னும் தொழிலாளி.[54] சனிக்கு கருப்பு நிறமும், மேற்கு திசையும் பிரீதி. அதிர்ஷ்டக்கல் நீலம். சனி முழங்கால், கணுக்கால், எலும்பு, பற்கள் ஆகிய உறுப்புகளை குறிக்கும். சனி பல் நோய், இளைத்த உடல், காசம், வாயுப்பிடிப்பு, மனோ பீதி முதலிய வியாதிகளை கொடுக்கும்.[55] சாதகத்தில் சனி மிக நேர்த்தியாக அமையப் பெற்றால் உண்மை, நேர்மை, உழைப்பு, சிக்கனம், சாமர்த்தியம், துறவியாதல், ஞானியாதல் போன்ற உயர் குணங்களை கொடுக்கும்.[56]

சனி இரும்பு சம்பந்தப்பட்ட தொழில், லாரி, சைக்கிள், நிலக்கரி ஏஜென்சி, எள், எண்ணெய், புண்ணாக்கு, கடுகு, உளுந்து, புளி ஆகிய பொருட்கள் வியாபாரம், சுரங்கத் தொழில், தோல்

---

[52] தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு – டி. விமலன் - ப. 04

[53] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 118

[54] பலித ஜோதிடம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 72

[55] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 21

[56] மேலது.

வியாபாரம், பழைய சாமான்கள் வியாபாரம், டிரைவர் வேலை, தோட்டி வேலை, எருமை, ஆடு, பன்றி வளர்ப்பு, மனித உரோமம், ஆட்டு உரோமம் சம்பந்தப்பட்ட வியாபாரங்கள்.[57] இரும்பு, பணி செய்தல், சுரங்கங்கள், பொருள் போக்குவரத்துத்துறைகள், கூலிக்கு பணி செய்யும் தொழில்கள். பெட்ரோலிலிருந்து வெளிப்படும் மற்ற பொருட்கள். கழிவுப் பொருட்கள், சுகாதார பணிகள், எண்ணெய் வகை, மரங்கள் பிறர் பொருட்களை எடுத்துக் கொள்ளுதல் ஆகிய இவற்றின் உட்பிரிவுகளாக உள்ள பல்வேறு துறைகளுக்கும் சனி காரகனாக அமைவார்.[58] சிமெண்ட் மொசைக்கற்கள் தயாரிப்பு, விற்பனை, ஏற்றுமதி இறக்குமதி, ஸ்பெகுலேசன், கட்டிடத் தொடர்புள்ள தொழில்கள், ஆட்டோமொபைல், தார் ரோடு செப்பனிடுதல், நீல நிறப் பொருட்கள் வியாபாரம். மீன், இறால், கோழிப்பண்னை அமைப்பு, நிர்வாகம். மின்சாரம், கேபிள், எலக்ட்ரிக் வயர், டெலிபோன், தந்தி, தபால்துறை சம்பந்தப்பட்டவை. ரயில்வே பார்சல், ஏர்லைன்ஸ் முதலியன.[59] இரும்பு, எ.ஃ.கு, பிளாஸ்டிக், உலோகம் சம்பந்தப்பட்டவை. விவசாயம், மருத்துவம், கெமிக்கல், உரம், தொழிற்சாலை அமைப்பு, நிர்வாகம். யூனியன், ரெவின்யூ, கோர்ட், பஞ்சாயத்து, சிறைச்சாலை, பிரிண்டிங் துறை, தாசில்தார், மணியம், கர்ணம், லேபர் டிபார்ட்மெண்ட். எண்ணெய் வித்துக்கள், தோல், ரப்பர், பஞ்சு, சனல் கயிறு, பெட்ரோல், மண்ணெண்ணை. ஆயில் தொடர்புள்ள அனைத்தும். உளுந்து, எள்ளு போன்ற தானியவகைகள், கரும்பு, வாழை, மா, பலா, வேம்பு, உயர்ரக

57 சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 21

58 தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு – டி. விமலன் - ப. 04

59 தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு – டி. விமலன் - ப. 04

தேக்கு, குறிப்பாக வெண்தேக்கு, சந்தனம் போன்ற டிம்பர் வகைகள் அனைத்தும். சமையல் எரிவாயு.[60]

சந்திரனின் தொழில்கள்

நீர், நீர் தொடர்பான தொழில்கள் [61] விவசாயி, நீர்வாழ் உயிரினங்களால் வாழ்க்கை நடத்துபவர். [62] டீக்கடை, ஹோட்டல்கடை, சர்பத்கடை, மதுக்கடை, சலவைத்தொழில், கறவைமாடுகள், பால், தயிர், மோர், வெண்ணெய் வியாபாரம், முத்து வியாபாரம், மீன் வியாபாரம், உப்பு வியாபாரம், கடற்படையில் சேருதல், கடற்பயணம், மாலுமியாதல், படகோட்டுதல், எழுத்தாளர், கவிஞர், பொதுஜனத்தொடர்பு அதிகாரியாகப் பணி. வெள்ளி வியாபாரம், ஈயம் பூசுதல், அரிசி வியாபாரம். [63] வேளாண்மை, வெள்ளி, பஞ்சு, நூல், உணவு, துணி. மீன்பிடித்தல், குளிர்பானம், வெற்றிலை பாக்கு, படகு, கப்பல், பால், மதுவகை, பெட்ரோல், நீர் தொடர்பான தொழில்கள், கதை, கவிதைத் துறைகள் ஆகியவற்றின் தொடர்பான பல்வேறு துறைத் தொழில்களும் சந்திரனிற்குரியது. [64] கடல் சம்பந்தப்பட்ட தொழில், மருந்து, உணவுவிடுதி, நிர்வாகம், தங்கும் விடுதி, உணவுப் பொருட்கள், காய்கறி, பழங்கள், சாப்பிடும் பொருட்கள், நீர்ப்பொருள், மூலிகைவகை, சந்தனம் போன்ற வாசனைப் பொருட்கள், நவரத்தினங்களில் முத்து, பட்டுத்துணி, வெண்ணிறப் பொருட்கள், சங்கு, பால், தயிர், தண்ணீரில் இருக்கும் மீன், ஈரல், போன்றவற்றில் வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி

---

[60] தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு – டி. விமலன் - ப. 04

[61] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 112

[62] பலித ஜோதிடம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 67

[63] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி. விமலன் - ப. 17

[64] தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு – டி. விமலன் - ப. 02

போன்றவை. வீடு கட்டுதல், தானிய வியாபாரம், துணி, உணவு வியாபாரம், வட்டித் தொழில், நெய், தேன் வியாபாரம், சங்கு முத்து வியாபாரம், நர்ஸ், மருத்துவச்சி, மீனவர், படகோட்டி, ஆயில் மருந்து, பெட்ரோல், காட்டுப் பொருள் வியாபாரம், பரிகாரம் மற்றும் சாந்தி செய்தல்.[65]

தொகுப்புரை

இந்த இயல் வழியாக பின்வரும் செய்திகள் கண்டறியப் பெற்றுள்ளன.

பல்வேறு சோதிட நூல்களில் தரப்பட்டுள்ள வெளிநாட்டில் வசிக்கும் யோகத்தைத் தரும் இராகுவின் காரகத்துவ குணங்கள் பற்றி விளக்கமாக அறியப்பட்டுள்ளது. அதே போல வெளிநாட்டில் வசிப்பதால் ஏற்படும் கஷ்டங்களை பொறுத்துக் கொள்ளக்கூடிய காரகக் கோளாக கருதப்படும் சனியின் காரகக் குணங்கள் பற்றி விளக்கமாகப் பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளவை தொகுத்து அறியப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வசிக்கும் மனோபாவத்தையும், உறவினர்களைப் பிரிந்து வாழக்கூடிய மனத்திடத்தையும் தரும் சந்திரன் பற்றியும் விரிவாக, விளக்கமாக அறியப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் பணி நிமித்தமாக வாழும் நிலையைத் தரக்கூடிய பாவகங்களான இலக்கின பாவகம், பத்தாம் பாவகம், வெளிநாட்டில் வசிக்கும் யோகத்தை அனுபவிக்கும் பாக்கியத்தைத் தரும் ஒன்பதாம் பாவகம், வெளிநாட்டில் வசிக்கும் யோகத்தைத் தரும் பாவகமான பன்னிரண்டாம் பாவகம் ஆகியவற்றின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக அறியப்பட்டுள்ளது. தொழிலுக்கான முதன்மையாக பாவகமான இலக்கினத்தில் வெளிநாட்டில் வசிக்கும் யோகத்தை யோகத்தைத் தரும் இராகுவும்,

---

[65] தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு – டி. விமலன் - ப. 02

கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய மனதிடத்தைத் தரும் காரகக் கோள்களான சனியும், மனத்துன்பங்களை தாங்கிக் கொண்டு உறவுகளைவிட்டுப் பிரிந்து வாழும் யோகத்தைத் தரும் சந்திரனும் இருப்பதால் ஏற்படும் பலன்கள் பற்றி விரிவாக அறியப்பபட்டது.

இயல் - 2



பாவகச் செயல்பாடுகள், கோள்கள்

நின்ற பலன்கள்

இயல் - 2

பாவகச் செயல்பாடுகள், பாவகங்களில் கோள்கள் நின்ற பலன்கள்

அறிமுகவுரை

இவ் இயலில் வெளிநாட்டுக்கு செல்லும் யோகத்தைப் பற்றிய வகைகள் விரிவாக அலசப்பட உள்ளது. வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் குணங்கள் அறியப்பட உள்ளது. 12 இலக்கினப்படியான வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் பற்றியும் விரிவாக அறியப்பட உள்ளது.

இலக்கின, ஒன்பது, பத்து, பன்னிரெண்டாம் பாவகங்கள்

இலக்கின பாவகச் செயல்பாடுகள்

உடலமைப்பு, உறுப்புகள், சந்தோஷம், வருத்தம், முதுமை, உண்மையறிதல், அறிவு, பிறந்த இடம், பிரபலம், புகழ், கண்ணியம், கனவுகள், பலம், பெருந்தன்மை, அரசியல் வாழ்க்கை, ஆயுள், சாந்தம், வயது, தலைமுடி, தோற்றம், சுயமரியாதை, ஜீவனம், அடுத்தவருக்காக சூதாடுதல், நிந்தை, இழுக்கு, கௌரவிக்கப்படுதல், தோல், தூக்கம், பாண்டித்தியம், செல்வம், அவமதிப்பு, பழிவாங்கும் போக்கு, வியாதியிலிருந்து விடுதலை, கைவிடும் தன்மை, செயலாற்றும் திறமை, கால்நடைகளை காப்பாற்றும் முயற்சி, கண்ணியம் தவறுதல், ஜாதிக் கூட்டத்தில் அவமானம்.[66] இயல்பான உயரம், நிறம், அமைப்பு, வடிவம், உடல் ஆரோக்கியம், கற்பனைத்திறன், வீரம், ஒழுக்கம், குணம், ஆண்மை, கௌரவம், நன்மை, தீமைகள், ஆயுள், கல்வி, நெடுந்தூரப் பயணம், சூதாட்டம்,

[66] உத்திர காலாம்ருதம் - மூலமும் உரையும் - எஸ்.எம்.சதாசிவம் - ப. 151

தலையும் முகத்தில் மேல் பாகமும், எடுத்த செயலில் வெற்றி – தோல்வி, வாழ்க்கையில் போராட்டம், நாட்டு மக்களை கேள்வி கேட்பவர்.[67]

ஒன்பதாம் பாவகச் செயல்பாடுகள்

தருமம், புண்ணிய காரியம், தீர்த்த யாத்திரை, தவம், குரு, பெரியோர்களுக்கு மரியாதை செய்தல், மனத்தெளிவு, தெய்வீக ஆராதனை, கற்பதற்கான அயராத முயற்சி, பிரயாணம், அதிர்ஷ்டம், விவேகம், வீரம், பயணங்கள், புனித ஸ்நானம், புண்ணிய காரியங்களில் தொடர்பு கொள்ளல், நன்மைகள். தந்தைவழிச் சொத்து, மகன்கள் மற்றும் மகள்கள், அஷ்ட ஐஸ்வர்யங்கள், வேதச்சடங்குகள், தியாகம், பணப்புழக்கம் ஆகியவை. [68] நம்பிக்கை, விவேகம், தெய்வவழிபாடு, தத்துவஞானம், சமயச்சார்பு, பக்தி, வைதீக சாத்திர வல்லுநர், தியானம், முன்யோசனை, ஆராய்ச்சி, புதியன கண்டுபிடித்தல், சட்டரீதியான நடுநிலைமை. நீண்ட பயணங்கள், கடற் பிரயாணம். வான்வழி பிரயாணம், ஆன்மீக மதிப்புள்ள நூல்களை வெளியிடல், யாத்திரை, கப்பல் தொழில், வான்வெளியிலும், தரையிலும் பிரயாணம், விஞ்ஞானம். பல்லைக்கழகங்கள், வெளிநாட்டு, உள்நாட்டுப் போக்குவரத்து, வானொலி, தூரச் செய்திப் போக்குவரத்து. கடல் தந்தி, கம்பியில்லாத் தந்தி, பணம்மூலமாகப் பிரச்சினை போன்றவை ஒன்பதாம் பாவக செயல்பாடுகளாகும். [69]

---

[67] நவீன கால ஜோதிட வளர்ச்சி – டி.விமலன் - ப. 52

[68] உத்திர காலாம்ருதம் - மூலமும் உரையும் - எஸ்.எம்.சதாசிவம் - ப. 156

[69] நவீன கால ஜோதிட வளர்ச்சி – டி.விமலன் - ப. 55

பத்தாம் பாவக செயல்பாடுகள்

வியாபாரம், வாணிபம், ராஜசன்மானம், அரசாங்க உத்தியோகம், சேவை, குதிரைச்சவாரி, குத்துச்சண்டை, விவசாயம், வைத்தியம், கீர்த்தி புகழ், செல்வம் சேமிப்பு, மறைத்து வைக்கப்பட்ட புதையல், தியாகம், உயர்ந்த அந்தஸ்து, குரு, ஆசிரியர்கள், புண்ணியத்தின் அளவு, மருந்து, மந்திர சித்தி, சுய மரியாதை, கௌரவித்தல், புகழ், போதனை செய்யும் திறமை, அதிகாரப் பதவி, செல்வாக்கு, சுயக்கட்டுப்பாடு, அதிகார தோரணை.[70] செல்வந்தன், மரியாதை, பெருந்தன்மையும், பொது மதிப்பும், பெயரும் புகழும், அதிகாரமும், கௌரவமும், நம்பிக்கையும், ஒழுக்கமும், சித்தியும், மதிப்பு, குலம், கீர்த்தி, மரியாதை, படிப்பு, பேராசை, அதிகாரம், இல்லற நடவடிக்கை பொறுப்புகள், நிரந்தரம், மேல் உயருதல், ஏவல் கொள்பவர், உலகத்திலிருந்து விடுபடல், முதலாளி, நீதிபதி, அரசாங்கம், புண்ணிய இடங்களுக்கு யாத்திரை. [71] அரசனிடமிருந்து கௌரவம், வேளாண்மை, மருத்துவர், முதல் தொழில், மந்திரக் கவசம், மருந்து. கல்வி பயிலுதல், தேசத்தலைவர், மழை, கொடை அபிவிருத்தி, புதையல் அமைத்தல், நூல்நெறி. [72]

பன்னிரெண்டாம் பாவகச் செயல்பாடுகள்

தூக்கம் கெடுதல், மனவருத்தம், எதிரிகளால் உண்டாகும் பயம், சிறைவாசம், துன்பங்களிலிருந்து விடுதலை, கடன் நிவர்த்தி, மூதாதையரின் சொத்து, எதிரி, சொர்க்கத்தை நோக்கிச் செல்லுதல், அங்கஹீனம், திருமணத்தடை, அதிகார இழப்பு, துர்ப்பாக்கியமான

---

[70] உத்திர காலாம்ருதம் - மூலமும் உரையும் - எஸ்.எம்.சதாசிவம் - ப. 157

[71] நவீன கால ஜோதிட வளர்ச்சி – டி.விமலன் - ப. 56

[72] மேலது.

நிலை, சன்டை சச்சரவு, கோபம், உடல் வியாதி, மரணம், இடமாற்றம், பலவகைச் செலவுகள்.[73] நஷ்டம், தடையும், அடக்குதலும், கட்டுப்படுத்துதலும், கூடுதல் செலவுகள், முதலீடு செய்தல், நன்கொடைகள், தருமம், கூட்டுக்குடும்பத்திலிருந்து பிரிதலும், தூர இடத்திற்குப் போய்விடுதலும், பிரித்து வைத்தலும், தீய அதிர்ஷ்டம், சிறையிலிருத்தல், இரகசிய உழைப்பு, இரகசிய நடவடிக்கை, பயம். மௌனமாகத் துன்பப்படுதல், ஆழ்ந்த தூக்கம் அல்லது தூங்காமை, பகைவரிடம் பயம், உடல் உறுப்பை வெட்டுதல், உடம்பில் காயம், சுய அழிவும், காணமுடியாததும், எதிர்பாராததுமான துன்பங்கள், கீழ்படியாமை, குரோதம், தற்கொலை அல்லது வஞ்சித்துக் கொல்லுதல். ஊரைவிட்டுத் துரத்துதல், தூர தேசத்தில் வாழ்க்கை.[74] இராஜத்துரோகமும், பிறநாட்டுக் குற்றவாளிகளை பிடித்துக் கொடுத்தல், அந்தரங்கம். ஒருவருடைய இரண்டாவது தொழில், மருத்துவ ஆய்வு, துப்பறியும் வேலை, குரூரத் திட்டம், இரகசிய விவகாரங்கள், அறிவியல் முறைகளைக் கண்டுபிடித்தல், தீயவர் திரும்பி வருதல். மறைக்கப்பட்ட வீடு, வேலை. திருமணம் முடித்தல், படுக்கை வசதி, பண நெருக்கடி, மிதமிஞ்சிய செலவுகள், சூறையாடல். கொள்ளையடித்தல், கற்பழித்தல், விஷமிடல், கள்ளக்கடத்தல். அச்சுறுத்திக் களவாடல். ஏமாற்றுச் செய்கை. தேசக்கலகம். அயல்தேசப் பிரயாணம் போன்றவை பன்னிரெண்டாம் பாவகச் செயல்பாடுகள் ஆகும். [75]

---

73 உத்திர காலாம்ருதம் - மூலமும் உரையும் - எஸ்.எம்.சதாசிவம் - ப. 158

74 நவீன கால ஜோதிட வளர்ச்சி – டி.விமலன் - ப. 57

75 நவீன கால ஜோதிட வளர்ச்சி – டி.விமலன் - ப. 57

இலக்கின பாவத்தில் இராகு நின்ற பலன்கள்

மக்கட் பேறில் தீங்கு விளைதல், தீய இராசிகளானால் துன்பமும், நற்கோள் இராசியானால் சுமாரான நன்மையும் ஏற்படும். சிலா் பிடிவாதக்காரராகவும், குருடராகவும், தா்ம சிந்தனை இல்லாதவராகவும், ஒழுக்கமில்லாதவராகவும், நோயுடனும் இருப்பா். நற்கோள் இணைவு பாா்வை பெற்றால் அரச இன்பத்தையும், செல்வத்தையும் உடையவா். [76] எதிரிகளை வெல்லுதல், தன் முயற்சிகளில் பிறா் உதவியுடன் வெற்றி, மேசம், கடகம். சிம்ம இலக்கின இராகு நன்மை தரும். [77] இராகு நிழல் கோளாகும். இவையும் மனித வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே இவையும் கோளாக கருதப்படுகின்றன. கீழ் ஜாதி பிறப்பு, வயது முதிா்ந்த பெண்ணுடன் தொடா்பு, தீய எண்ணங்கள், பேச்சில் கோளாறு. வாயுக்கோளாறுகள். [78] இராகு தந்தை வழி தாத்தாவை குறிப்பது. 3, 4, 6, 12ஆம் வீடுகளில் சுப பலனும், 8, 9, 11இல் அசுப பலனும் செய்வாா். சனி, புதன், கேது நண்பா்கள். சூரியன், செவ்வாய், சுக்கிரன் பகைவா்கள். குரு, சந்திரன் சமமானவா்கள். இராகுவுக்கு சொந்த வீடு இல்லை என்றும், இராகுவுக்கு கன்னி சொந்த வீடு என்றும் இரு வேறு கருத்துக்கள் உள்ளன. [79] நீண்ட ஆயுள், வலிமை, ஸ்ரீலஷ்மியின் அருளால் செல்வம், உடலின் மேற்பகுதி அங்கங்கள் ஆகிய தலை, முகம் போன்ற இடங்களில் நோயுள்ளவா். [80]

---

[76] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 52

[77] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 135

[78] மேலது ப. 238

[79] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 239

[80] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 111

இலக்கின பாவத்தில் சனி நின்ற பலன்கள்

இலக்கினபாவத்தில் வாதம், பித்தம் சம்பந்தப்பட்ட நோய் ஏற்படும். சனியை சந்திரன் பார்த்தால் பிச்சை வாங்கும்தன்மை. பொருளற்றவர், சன்னியாசி. சனியை நற்கோள் பார்த்தால் நற்பலன்கள் ஏற்படும். சனி உச்சமானால் நகரத்தலைவர், பஞ்சாயத்து தலைவர், செல்வ சேர்க்கை ஏற்படும். சனி ஆட்சி பெற்றால், தந்தையின் செல்வத்தை அனுபவிப்பார். 4, 9, 10க்குடையவர் கூடினால் பெருஞ்செல்வமும், சக்கரவர்த்தி யோகமும் ஏற்படும். சிலர் உடல் ஊனராகவும், மூலம் சம்பந்தப்பட்ட நோயும் உள்ளவர். [81] உச்சவீடு அல்லது ஆட்சி வீட்டில் இருந்தால் மட்டுமே தனது இனத்துக்குத் தலைவர், உயர்ந்த பதவி, அந்தஸ்து, தனுசு, மீனத்தில் இருந்தாலும் சாதகமான பலன்கள் ஏற்படும்.[82] துலாம் இலக்கினமாகி அதில் உச்சம் பெற்று அமைய, சாதகர் ஒரு கிராமம் அல்லது நகருக்குத தலைவர் ஆவார். விவசாய சொத்து, தனஇலாபம் உண்டு. கும்ப, மகர இலக்கின சாதகரின் தந்தை செல்வந்தர். இலக்கினச் சனி, 4 அல்லது 10ம் பாவாதிபதியாக இருக்க, புகழ், பெயர், செல்வம் அளிக்கும். மற்றும் மகராஜா யோகம் அமையும். இலக்கினச் சனியை சந்திரன் பார்க்க சாதகர் பிச்சையெடுப்பார். குரு, சுக்கிரன் போன்ற சுபர்கள் பார்த்தால் பரிகாரம் ஏற்படும். இலக்கினச் சனி மூட்டுவலி, பித்தக்கோளாறுகள் தரும். உச்சம், ஆட்சிவீடு மற்றும் 4, 10 பாவாதிபதியாக இருக்கும் சனிக்கு பிரமாதமான பலன்கள் சொல்லப்பட்டுள்ளன. துலாஇலக்கின சாதகருக்கு இலக்கினத்தில் சனி உச்சமாயிருக்க 4, 5 வீடுகளுக்கு அதிபதியாகி பலவித சுபங்களை அளிக்கிறார். ரிசப, மிதுன இலக்கினக்காரருக்கு 9ஆம் அதிபதியாக உள்ளதால். தந்தைக்கு நல்லது செய்யக்கூடும். கும்பத்தைவிட மகரஇலக்கினத்தில் உள்ள

[81] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 49

[82] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 135

சனி அதிக நன்மை செய்வார். ஏனெனில் மகரஇலக்கினத்திற்கு சனி 1, 2க்குரியவர். கும்பத்திற்கு 1, 12க்குரியவர். சனி இலக்கினத்தில் இருந்து 4, 10ஆம் பாவாதிபதியாக இருப்பது மகாராஜா யோகம் ஆகும். விருச்சிக இலக்கினத்தில் சனி இருந்தால் 4க்குடையவராகி மகாராஜா யோகம் பெறுகிறார். [83] ஆட்சியோ, உச்சமோ பெற்று சனி இலக்கினத்தில் அமைய சாதகர் அரசனாவார். அல்லது அரசனுக்கு சமமமானவர். மற்ற இராசிகளில் இருக்கும் சனி இலக்கினமாக அமைபவர் தன் இளம் வயதிலிருந்தே துன்பமும், நோயும் அனுபவிப்பார். ஏழை, சோம்பேறி.[84]

இலக்கின பாவத்தில் சந்திரன் நின்ற பலன்கள்

அழகான உடல் அமைப்பு, முகப்பொலிவு, சபல புத்தியுடைமை, அனைவரும் மயங்கும் தன்மை, கற்பனைத்திறன், சாத்திரம் அறிதல், செல்வந்தர், பகுத்தறிவு, அன்புடைமை, பொது வாழ்வு, புலமை ஏற்படும், நற்கோளால் பார்க்கப்பட்டால் அறிவாளி, ஆரோக்கியமானவர், பேச்சாற்றல், இலக்கினாதிபதி வலுவற்றிருந்தால் நோயுடையவர், தேய்பிறைச் சந்திரன் ஆனால் செவிட்டுத்தன்மை, உடல் ஊனம் போன்றவை ஏற்படும். தீய கோள்களுடன் இணைந்தால் பாலாரிஷ்டம், பலமற்ற தன்மை ஏற்படும். [85] அழகான தோற்றம், மகிழ்ச்சியானவர், நல்ல உடல்கட்டு, சாஸ்திரங்களில் தேர்ச்சி, அறிவாளி, புத்திசாலித்தனமாக உரையாடுபவர், செல்வந்தர். ஆரோக்கியம், வலிமையான உடல், பெரிதான தொப்புள், சிவந்த கைகள், வலிமை, செல்வம், தீர்க்காயுள் உடையவர், அரசால் பெருமை கிடைக்கும், ஊர்சுற்ற விருப்பமுள்ளவர். [86] பிருகு

---

[83] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 232

[84] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 109

[85] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 31

[86] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 133

மகரிஷியின் சூத்திரப்படி சாதகர் அழகான தோற்றமும், நிலையற்ற மனமும் கொண்டவர். உடல் நோய்களால் அவதிப்படுபவர். நீர் சூழ்ந்த இடங்களில் மகிழ்வடைபவர். தனது 15ஆம் வயதில் பலதரப்பட்ட பயணங்களை மேற்கொள்பவர். மேசம், ரிசபம் அல்லது கடகம் இராசிகளில் சந்திரன் இருந்தால் சாஸ்திர அறிவு, செல்வநிலை, மகிழ்ச்சி, இனிமையான பேச்சு, நல்ல உடலமைப்பு இருக்கும். ஆனால் அதிக புத்திசாலி இல்லை. சுபர் பார்த்தால் சுபபலன்கள் ஏற்படும். இலக்கினாதிபதி பலவீனமானால் ஆரோக்கியக்குறைவு ஏற்படும். நற்கோள் பார்த்தால் சுப பலன். [87]

சந்திரன் ஆளுமையில் பல விஷயங்கள் உள்ளன. மனம், தாய், வீடு, வேலை (தொழில்) மாற்றம், கர்ப்பம் அடைதல், பிரசவம், வாலிப வயதுக்கு முந்தைய காலம், அடிக்கடி மாறும் மனோபாவம், வயிறு, அழகு, மார்பகங்கள், பால், முத்து போன்றவை. சந்திரன் அழகைக் குறிப்பதால் இலக்கினத்தில் சந்திரன் இருப்பவர் அழகாக இருப்பார். சந்திரன் தேய்ந்து வளர்ந்து வரும் தன்மை உடையது. அதனால்தான் மனம் நிலையில்லா தன்மை கொண்டதாக விளங்குகிறது. சந்திரன் நீர்க் கோள் என்பதால் நீர்நிலை அருகில் வாழப் பிரியப்படுவார். சந்திரன் மேசத்தில் இருந்தால் 4ஆம் அதிபதியாகிறார். ரிசபத்தில் இருக்கும்போது 3ஆம் அதிபதி இலக்கினத்தில் இருப்பவராகிறார். கடகம் சொந்த இலக்கினம். எனவே இம் மூன்று இடங்களும் சாதகரை செல்வந்தராக, மகிழ்ச்சி அடைபவராக, அரசனாக, இனிமையான பேச்சு உடையவராக, உறுதியான உடல் உள்ளவராகவும், அனால் அதே சமயம் புத்திசாலித்தனம் அற்றவராக உருவாக்கும். வளர்பிறைச் சந்திரன் நன்மை தரும். சந்திரன் விருச்சிகம், துலாம், மீன இலக்கினங்களுக்கு சந்திரன் முறையே 9, 10, 5ஆம் அதிபதி

[87] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 196

ஆவார். சந்திரனை சுபர் பார்ப்பது யோக பலனைத் தரும். சந்திரனை குரு 7ஆம் பார்வை பார்ப்பது கஜகேசரி யோகம் தரும். பெயர், புகழ், செல்வம் தரும் அற்புதமான யோகம். [88] வளர்பிறைச்சந்திரன் இலக்கினத்தில் இருக்கும் சாதகர் நீண்ட ஆயுள், நல்ல உடல், ஸ்ரீலட்சுமி கடாட்சம், அச்சமின்மை, செல்வம். அதிகாரம், ஆற்றல் உடையவர். தேய்பிறைச்சந்திரன் இதற்கு எதிர்மாறான பலன்களே தரும். [89]

ஒன்பதாம் பாவகத்தில் இராகு நின்ற பலன்கள்

மக்கட் செல்வத்திற்கு தீங்கு ஏற்படுதல், பெண்களை விரும்புதல், பணியாளர், தர்மம் செய்யாதவர், சிலர் தந்தையை வெறுப்பர், செல்வந்தர். புகழுடையவர். குழந்தை இல்லை, தாழ்ந்த சாதிப் பெண்கள் தொடர்பு, நாத்திகர், சாப்பாட்டுக்கு மற்றவரை சார்ந்து வாழ்பவர். நாகரீகமற்ற பேச்சுடையவர், தர்மம் செய்யமாட்டார், ஊர் அல்லது நகரத் தலைவர் ஆவார். நற்குணம் உண்டு. இளகிய மனம் உண்டு. புனித யாத்திரை செல்பவர். சாதகமாகவும், இனிமையாகவும் பேசமாட்டார். தனது இனம் அல்லது ஊருக்குத் தலைமை ஏற்பார். பெயர், புகழ் அடைவார்கள். தவறான செயல்கள் புரிவார்.

ஒன்பதாம் பாவகத்தில் சனி நின்ற பலன்கள்

இனத்திலிருந்து ஒதுக்குதல், எத்தொழிலும் செய்தல், சனி தீயோன் இணைவு பெற்றால் செயல்களில் துன்பமுண்டு, நற்கோள் இணைந்தால் செயலில் வெற்றியுண்டு, சிலர் செல்வந்தராகவும்,

---

[88] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 196

[89] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 100

குலத்திற்கு முதல்வராகவும், வீரராகவும் இருப்பர். [90] துறவறம், யோகத்தில் ஈடுபாடு, பற்றற்றவர், சமய நம்பிக்கை கொண்டவர், பழமைவாதி, தத்துவஞானி, கோயில், மடம் போன்ற சமய சம்பந்தமான இடங்களை சீர் செய்பவர், மாட்டுத்தொழுவம். குளிப்பதற்குப் படித்துறைகள் கட்டி வைப்பார். [91] ஆட்சி, உச்சமாக இருந்தால் தந்தைக்கு நீண்ட ஆயுள். அசுபர் தொடர்பிருந்தால் மத்திம ஆயுள், மத சம்பந்தமான பாழடைந்த கட்டடங்களை பழுதுபார்த்தல், பசுக்களுக்கு தொழுவம் கட்டுவார். செல்வம், குழந்தைகள், மகிழ்ச்சி உண்டு. [92] அதிர்ஷ்டம், தந்தை, மத ஆன்மீக அறிவு இவை எல்லாவற்றிலும் பாதிப்பு உள்ளவர். [93]

ஒன்பதாம் பாவகத்தில் சந்திரன் நின்ற பலன்கள்

வெளியூரில் இலாபமடைதல், பலரால் விரும்ப படுதல், புண்ணியவான், கோயில் கட்டுதல், மக்கட்பேறு உடையவர். கௌரவப்பதவி, தந்தையால் நன்மை, செல்வம் ஏற்படுதல். பௌர்ணமியானால் தீர்க்காயுள் உண்டு. தீயோருடன் கூடினால் தந்தை, தாய் நாசம் அடைவர். சிலர் தேவதைகள் மற்றும் இறைவனிடத்தில் பக்தியுடன் இருப்பர். தியாகமும் செய்வர். [94] நன்கு கற்றவர், அறிவாளி, செல்வந்தர், இளமையில் இருந்தே அதிர்ஷ்ட வாழ்வு பெறுபவர், தந்தைக்கு நீண்ட ஆயுள், நிறைவான குழந்தைகள், பெற்றோர், மூத்தோரிடம் மரியாதை, எதிர்பாலரை கவரும் தன்மை, வீரர், கற்றோராலும் பாராட்டப்படுபவர்,

---

[90] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 51

[91] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 154

[92] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 236

[93] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 110

[94] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 33

பொதுமக்கள் சேவை செய்பவர். [95] நற்குணம், செல்வச் சொழிப்பு, குழந்தைகள் உடையவர், வெற்றியடைபவர், இவர் தொடங்கும் செயல்கள் எடுத்த எடுப்பிலே வெற்றி தரும். [96] தர்மவான், நிரம்பப் படித்தவர், மற்றவருக்காக குளம், கிணறுகள், பசுமாடுகளுக்கு இருப்பிடமும் அமைப்பவர். நல்ல குழந்தைகள், வசதி உடையவர், வளர்பிறைச்சந்திரன் 9இல் அமைய சாதகர் அவர் தந்தை இருவருமே வசதி, அதிர்ஷ்டம், நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள். அசுபச் சந்திரன் தீய பலன்கள் தரும். சிறு வயதிலேயே பெற்றோரை இழப்பார். [97] தர்மம், பாக்கியம், குழந்தைகள், வளமான வாழ்வு போன்றவற்றின் இருப்பிடமாகிய 9இல் தீயவரால் பாதிக்கப்படாத சந்திரன் அமர்வது அளவற்ற நன்மை தரும். விருக்சிக இலக்கினத்திற்கு கடகச் சந்திரன் ராஜயோகம் தரும். கன்னி இலக்கினத்திற்கு 11க்கு உடையவராகி 9இல் உச்சம் பெற்றால் மிக மிக அருமையான நற்பலன்கள் தருவார். [98]

பத்தாம் பாவகத்தில் இராகு நின்ற பலன்கள்

சேரிகளிடம் உள்ள விதவைகளிடம் தொடர்பு கொள்வார். சுபர் பார்க்க, நல்ல வீட்டில் வசிப்பார். கவிதை ஆர்வம் உண்டு. [99] பாபச் செயல்களில் செல்வம் வீணாகும். அழகான பெண்களை அனுபவிப்பார். இந்து இல்லாத மற்ற மதத்தினர் நட்பையே விரும்புவார். [100] புகழ் உடையவர். அச்சம் இல்லாதவர். குழந்தைகள்

---

[95] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 153

[96] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 101

[97] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 200

[98] மேலது.

[99] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 242

[100] மேலது.

அதிகமாக இராது. பிறர் செயல்களில் ஈடுபடுபவர். நற்செயல் ஏதும் செய்யாதவர். [101] தீய இடங்களில் வசித்தல், விதவையைக் கூடுபவர், நற்கோளுடன் இணைந்தால் தோசமில்லை. கவிதைகளிலும், காவியத்திலும் விருப்பமுள்ளவர். பல்வேறு அமைப்புகளில் நாட்டம், சிலர் திருடராகவும், தீய நடவடிக்கையுடையவராகவும் இருப்பர். [102]

பத்தாம் பாவகத்தில் சனி நின்ற பலன்கள்

காரிய வெற்றி, மகிழ்ச்சி, அதிகாரம், செல்வம், புகழ், வீரம் உள்ளவர், தலைமைப்பதவி ஆலோசகர், அமைச்சர், நீதிபதி போன்ற பதவிகள்.[103] அரசர் அல்லது அமைச்சர் ஆவார். விவசாயத்தில் ஈடுபாடு கொண்டவர். தைரியமானவர். செல்வம், புகழ் உடையவர்.[104] கருமி, பித்த உடல், புனித நீராடல், எத்தொழிலும் செய்தல், சனி தீயோன் இணைவு பெற்றால் செயல்களில் துன்பமுண்டு. நற்கோள் இணைவு பெற்றால் செயலில் வெற்றியுண்டு. சிலர் செல்வந்தராகவும், குலத்திற்கு முதல்வராகவும், வீரராகவும் இருப்பர்.[105]

பன்னிரெண்டாம் பாவகத்தில் இராகு நின்ற பலன்கள்

குறைந்த மக்கட் செல்வம், கண்களில் நோய் எற்படும், தீயவர். சிலர் உடற்குறைவும், செல்வமும் உடையவர். ஒழுக்கமில்லாதவர். [106] ஏமாற்றுதல், ஒழுக்கமற்ற, நியாயமற்ற

---

101 பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 112

102 சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 54

103 ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 156

104 பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 110

105 சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 51

106 மேலது ப. 54

செயல்கள், வெளி தேசங்களில் வசிப்பவர், போதைப் பொருள் கடத்துபவர், விஷப் பொருள்களை கடத்துபவர் மற்றும் கடும் வார்த்தைகள், குதர்க்கவாதம், சாதிப்பிரஷ்டம், நாத்திகம், அசுத்தம், எலும்பு, வயிற்றுப்புண், பொய் போன்றவை இராகு சம்பந்தமுடையவை. எதிரியை இராகுவால் நண்பனாக்க முடியும். [107] குழந்தை குறைவு, கண் நோய் உண்டு. நரகம் சேர்வார். [108] இரகசியமாக தீய செயல்கள் செய்பவர். அதிகமாக செலவழிப்பார். நீரால் ஏற்படும் DROPSY எனும் உடல் வீக்கம் நோய் உள்ளவர்.[109]

பன்னிரெண்டாம் பாவகத்தில் சனி நின்ற பலன்கள்

இனத்திலிருந்து ஒதுக்கப்படுதல், உடைந்த உடலமைப்பு. தீயோருடன் இணைந்தால் கண் கெட்டுவிடும். நல்லவர் இணைந்தால் இன்பவான். நல்ல கண்களுடையவர். புண்ணியலோகம். தீயவருடன் இணைந்தால் நரகலோகத்திற்குச் செல்வர். தீய வழியில் விரயம் செய்தல், செல்வமில்லை, சோம்பல், ஏழ்மை. தரித்திரக்காரர். [110] வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகளை வெல்லுதல், தீர்க்கமான பார்வை. [111] பாபி, உடல் ஊனம் உண்டு. அசுபர் சேர பார்வைக்குறைவு உண்டு. சுபர் சேர மகிழ்ச்சி. நல்ல கண் பார்வை உள்ளவர். சுவர்க்கம் போவார். அசுபர் சேர ஏழை. விரய செலவு செய்வார். நரகம் போவார். 6, 8, 12க்கு அதிபதியாகி, 12இல் இருந்தால் விபரீத ராஜயோகம் பெற்று நன்மை தருவார். 12ஆம் இட

---

[107] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 160

[108] மேலது ப. 243

[109] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 112

[110] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 52

[111] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 160

சனி தீய பலனே தருவார். [112] குழந்தைகள் அற்றவர், உடலில் ஏதேனும் ஒரு வகையில் ஊனம் உடையவர், அறிவற்றவர், எதிரிகளால் துரத்தியடிக்கப்படுபவர், தரித்திரம் உள்ளவர், முரட்டுத்தனமிக்கவர். [113]

பன்னிரெண்டாம் பாவகத்தில் சந்திரன் நின்ற பலன்கள்

தீய பொருள்களை உண்ணுதல், பயணத்தினால் கூடுதல் செலவு ஏற்படும். தாயார் மற்றும் நோயினால் செலவுகள் இருந்து கொண்டே இருக்கும். தீயநடவடிக்கையில் செலவிடுதல், கோபத்தினால் தீங்கு ஏற்படுதல், வருத்தம் உடைமை, பெண் நோய் உள்ளவர். உணவுப் பற்றாக்குறை. சந்திரன் நற்கோளுடன் இணைவு பெற்றால் அறிவாளி. அன்புடமை போன்றவையும், தீயகோளுடன் இணைந்தால் நன்மையில்லை. நற்கோளுடன் இணைந்தால் கூடுதல் நன்மை ஏற்படும். [114] கற்றவர், இளகிய மனம், நல்ல நண்பர்கள், சுப வழிகளில் செலவு, பெருந்தன்மையானவர், தான தர்மம் செய்பவர், தாயால் மகிழ்ச்சி. [115] நல்ல உணவு கிடைக்காது. பணம் விரயமாகும், கோபம் உள்ளவன், தீய வழிகளில் பணம் ஈட்டுபவர். பெண்கள் தொடர்பால் பால்வினை நோய்கள் ஏற்படும், தானியம் இல்லாதவன். சுபர் பார்த்தால் படிப்பு, இளகிய மனம், நல்ல நண்பர்கள் உண்டு. இறந்தபின் சொர்க்கம் சேருவார். அசுபர் பார்தால் நரகமே கிடைக்கும். [116] பிறரிடம் பகை பாராட்டுபவர்,

---

[112] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 237

[113] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 110

[114] சாதகப் பலன்களை வரையறுத்தல் - டி.விமலன் - ப. 34

[115] ஜோதிட வித்யா வாரிதி – ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 159

[116] ஜோதிட வித்யா வாரிதி - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 202

துயரம் அனுபவிப்பவர், அவமானம் அடைபவர், கடல் கடந்த பயணங்கள், மிகுந்த சோம்பேறி. [117]

வெளிநாட்டில் வசிப்பவர்கள் வகைகள்

1. பொறியியல்கல்வி கற்க வெளிநாடு செல்பவர்கள்
2. மருத்துவக்கல்வி கற்க வெளிநாடு செல்பவர்கள்
3. உயர்கல்வி கற்க வெளிநாடு செல்பவர்கள்
4. பணிநிமித்தமாக வெளிநாடு செல்பவர்கள்
5. இந்திய நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் நிறுவனத்தின் சார்பாக மேல்பயிற்சிகளுக்காக வெளிநாடு செல்பவர்கள்
6. திருமணத்திற்குப் பிறகு கணவனால் வெளிநாடு செல்பவர்கள்
7. இந்தியாவில் பிறந்து பெற்றோர் வெளிநாட்டில் வசிப்பதால் அங்கு செல்பவர்கள்
8. ஆராய்ச்சிப்பணிகளுக்காக வெளிநாடு செல்பவர்கள்
9. வெளிநாட்டில் பிறந்த இந்திய வம்சாவளியினர்
10. சுற்றுலா, கடல் சார்ந்த விளையாட்டு, விண்வெளித்துறை, வான்வழி மார்க்கமாக பயணம் செய்பவர்கள்.
11. ஆகாய விமானம், கப்பலில் பணி புரிபவர்கள்.

கோள் வாரியாக வெளிநாட்டில் வசிப்பவர்களின் குணங்கள்

[117] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 101

சூரியன் சம்பந்தப்பட்டவர்

அரசுத்துறை-தனியார்துறை. கண்டிப்பானவர், புத்திக் கூர்மை உள்ளவர், ஞானம், செல்வம், எல்லோரையும் வழிநடத்தி செல்பவர்.

புதன் சம்பந்தப்பட்டவர்

மிகவும் புத்திக் கூர்மை உள்ளவர், மாறுபட்ட தன்மை உள்ளவர், திறமையானவர், உயர்ந்த தன்மை உள்ளவர், ஆராய்ச்சி மனப்பான்மை உள்ளவர், புத்திசாலித்தனம் உடையவர், விதவிதமான விஷயங்களில் நிபுணர்.

செவ்வாய் சம்பந்தப்பட்டவர்

முரட்டுத்தனம் வாய்ந்தவர், பிடிவாத குணம் உடையவர், கடினமான வேலைகளையும் அநாயாசமாக செய்பவர். செய்யும் வேலையில் கண்ணும், கருத்துமாய் இருப்பவர். கடின உழைப்பாளி.

சனி சம்பந்தப்பட்டவர்

சோம்பல் நிறைந்தவர், எவ்வித கீழ்தரமான வேலைக்கும் அஞ்சமாட்டார். எலக்ட்ரிகல் வயரிங், பிளம்பிங் போன்ற அனைத்து வேலைகளையும் மன நிறைவோடு செய்வார். வேலைகளை மெதுவாகவே செய்து முடிப்பார்.

பன்னிரு இலக்கினப்படியான வெளிநாட்டில் வசிப்பவர்களின் குணங்கள்

மேட இலக்கின சாதகர்

செவ்வாய் சம்பந்தமுள்ளவர் ஆதலால் முரட்டுத் தன்மை, மற்றவரை மிரட்டும் குணம், வெளிப்படையான தன்மை, பொறியியல்

துறை, வேதியியல் துறை, அரசு, அரசு உதவி பெறும் துறைகளில் பணி.

இடப இலக்கின சாதகர்

சுக்கிரன் சம்பந்தப்பட்டவராதலால் இனிமையான பேச்சு, அழகான உடை, பிறரை எளிதில் கவர்பவர், புகழ், எளிமை, நல்ல ஞாபக சக்தி, சகிப்புத் தன்மை, பிடிவாத குணம், தொழிலில் முன்னேற்றம்.

மிதுன இலக்கின சாதகர்

புதன் சம்பந்தப்பட்டவராதாலால் புத்திகூர்மை, அறிவுத்திறன், ஆராய்ச்சி மனப்பான்மை, அதிகம் உணர்ச்சி வசப்படுபவர், பதட்ட குணம், பணி புரியும் இடத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை, கணிதத்துறை, கணிப்பொறித்துறை, விளையாட்டுத்துறையில் பணி.

கடக இலக்கின சாதகர்

சந்திரன் சம்பந்தப்பட்டவர் கற்பனை வளம் உள்ளவர், கவிஞர், எழுத்துத்திறன், அடிக்கடி வெளிநாட்டுப் பயணம் செய்பவர், பல விருது பெற்றவர், அடிக்கடி தொழிலை மாற்றிக் கொள்ள நினைப்பவர், வேளாண்துறை, மீன்வளர்ச்சித்துறைப் பணி.

சிம்ம இலக்கின சாதகர்

சூரியன் சம்பந்தப்பட்டவர் ஆளுமைத் தன்மை உடையவர், கணிப்பொறி, ஜோதிடக் கலையில் வல்லவர், உயர்கல்வியில் ஆர்வம் உள்ளவர், விளையாட்டுத்துறை, கணிதத்துறை, கட்டிடக்கலை, உள்கட்டமைப்புப் பணி.

கன்னி இலக்கின சாதகர்

புதன் சம்பந்தப்பட்டவர் மிகுந்த சகிப்புத்தன்மை, முன்கோபி, இலக்கிய அறிவு, கம்பீரம், தற்பெருமை, பழமை விரும்பி, அரசு, அரசு உதவி பெறும் துறைகளில் பணி, புகழ், மதிப்பு, மரியாதை உள்ளவர்.

துலா இலக்கின சாதகர்

சுக்கிரன் சம்பந்தப்பட்டவர் உயர்ந்த குறிக்கோள் உடையவர், அனைவராலும் விரும்பப்படுபவர், அமைதி, அறிவு. ஒழுக்கம், சுறுசுறுப்பு, இரக்க சிந்தனை உடையவர்.

விருச்சிக இலக்கின சாதகர்

செவ்வாய் சம்பந்தப்பட்டவர் பிடிவாத குணம், முரட்டுக் குணம் உள்ளவர், ஊக்கமான செயல்பாடு உள்ளவர், பெரும்பாலும் மருத்துவ சம்பந்தமான துறை, பொறியியல் துறை, உணவுத்துறையில் பணி.

தனுசு இலக்கின சாதகர்

குரு சம்பந்தமானவர் கடவுள் பக்தி, நீதி, நேர்மை, பணிவு, அறிவாளி, பேசுவதில் நாட்டம், எளிய பழக்கம், காரியங்களை சரியான நேரத்தில் செய்யும் தன்மை, பேச்சு வன்மை, உண்மைத்தன்மை, திட்டமான செயல்திறன், தவறுகளை சுட்டிக்காட்டும் தன்மை உடையவர்.

மகர இலக்கின சாதகர்

சனி சம்பந்தப்பட்ட ஓட்டுநர் சோம்பல் குணம், தயக்கம், தீவிர சிந்தனை, சூழ்நிலைகளுக்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்பவர், தன்னம்பிக்கை உடையவர், பொறியியல் துறை, விவசாயத்துறையில் ஓட்டுநர் பணி.

கும்ப இலக்கின சாதகர்

சனி சம்பந்தமானவர் கடின உழைப்பு, பிறரை கவரக் கூடியவர், கல்வியாளர், நண்பர்கள் உடையவர், சோதிடத்தில் ஆர்வம், தாராள குணம், இரக்க சிந்தனை, தூய்மையான எண்ணம், ஆராய்ச்சி மனப்பான்மை, சோதிட துறை, கட்டிட துறை, வேளாண்துறையில் ஓட்டுநர் பணி.


மீன இலக்கின சாதகர்

குரு சம்பந்தப்பட்டவர் நேர்மை, உண்மை சிந்தனை உள்ளவர், சுய சிந்தனை, தன்னம்பிக்கையின்மை, பிறர் மேல் ஆதிக்க மனப்பான்மை, கற்பனை வளம்.

தொகுப்புரை

இவ் இயலில் வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் பற்றிய வகைகளும், கோள்கள் வாரியாக வெளி நாட்டில் வசிப்பவர்கள் குணங்களும், 12 இலக்கினப்படியாக வெளி நாட்டில் வசிப்பவர்கள் குணங்கள் பற்றியும் விரிவாக அறியப்பட்டுள்ளது.

இயல் - 3



பன்னிரு இலக்கின வாரியான சாதகப் பகுப்பாய்வு

இயல் - 3

பன்னிரு இலக்கின வாரியான சாதகப் பகுப்பாய்வு

அறிமுகவுரை

இவ் இயலில் வெளி நாட்டிற்கு சென்றவர்கள் சாதகத் தகவல்கள் 12 இலக்கினப்படியாகவும் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட உள்ளது. வெளி நாட்டிற்குச் சென்ற இந்தியர்கள் அதற்கான யோகம் பெறுவதற்கான யூக விதிகள் உருவாக்கப்பட்டு தரப்பட்டுள்ளது. அவ்விதிகளைக் கொண்டு சேகரம் செய்யப்பட்ட 300 வெளி நாட்டிற்கு சென்ற இந்தியர்கள் சாதகங்களும் ஆய்வு செய்யப்பட உள்ளது.

பனிரெண்டு இலக்கினவாரியாக சாதகப் பகுப்பாய்வு

மேட இலக்கினம்	:	27
இடப இலக்கினம்	:	27
மிதுன இலக்கினம்	:	32
கடக இலக்கினம்	:	27
சிம்ம இலக்கினம்	:	19
கன்னி இலக்கினம்	:	24
துலா இலக்கினம்	:	23
விருச்சிக இலக்கினம்	:	20
தனுசு இலக்கினம்	:	27
மகர இலக்கினம்	:	32
கும்ப இலக்கினம்	:	26
மீன இலக்கினம்	:	16
மொத்தம்		300

வெளிநாடு செல்லும் யோகம் பெறும் கோள் அமைப்புக்கான விதிகள்

விதி எண். 1

1 - 9 – 12ஆம் பாவங்களில் இராகு, சனி, சந்திரன் அமையப் பெறுவதால் வெளிநாடு செல்லும் யோகம் பெறுவது.

விதி எண்.2

1 - 9 – 12ஆம் பாவாதிபதிகள் தங்களுக்குள் மாறி அமைவதால் வெளிநாடு செல்லும் யோகம் பெறுவது.

விதி எண்.3

9 - 12ஆம் பாவாதிபதிகள் தசா, புத்திக் காலங்களில் வெளிநாடு செல்லும் யோகம் பெறுவது.

விதி எண்.4

இராகு, சனி, சந்திரன் தசா, புத்திக் காலங்களில் வெளிநாடு செல்லும் யோகம் பெறுவது.

விதி எண்.5

இலக்கினத்திற்கு ஒன்பது மற்றும் பன்னிரெண்டாமிடம் சரஇராசியாகவோ, நீர்ராசியாகவோ, காற்றுராசியாகவோ அமைவதால் வெளிநாடு செல்லும் யோகம் பெறுவது.

மேச இலக்கின சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 01 - ஆய்வுச் சாதகம் : 02

சாதகர் பெயர் : கிருஷ்ணகுமார்

பிறந்த தேதி : 13.02.1985 பிறந்த நேரம் : 11.40 காலை

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : மேடம்

இராசி : விருச்சிகம் நட்சத்திரம் : அனுசம் - 3

தசா புத்தி : **சனிதசா** 05 ஆண்டு - 09 மாதம் - 04 நா

வெளிநாடு சென்றது: மார்ச் 2016 – கனடா – சுக்கிரதசா – சுக்கிரபுத்தி -

ராகு அந்தரம் - 15.01.2016 – 16.07.2016 -

போன் / செல் : 001 – 6476732203 - பணி – நிரந்தரத் தங்கல்

சுக் செவ்	**ல/ ரா**	மா	
சூ	**ராசி**		
பு கு			
	சந் சனி	**கே**	

கு			**கே**
மா	**நவாம்சம்**		
			பு சனி
ல/ ரா	**சுக் செவ்**	**சந் சூ**	

ஆய்வு விதி எண்: **1 – 2, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி இலக்கினத்தில் இராகு இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி செவ்வாய், பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகு அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

இலக்கினாதிபதி – இராகு சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 02 - ஆய்வுச் சாதகம் : 03

சாதகர் பெயர் : விநாயகம்

பிறந்த தேதி : 27.05.1976 பிறந்த நேரம் : 04.10 காலை

பிறந்த ஊர் : கும்பகோணம் இலக்கினம் : மேடம்

இராசி : மேடம் நட்சத்திரம் : பரணி - 2

தசா புத்தி : **சுக்கிரதசா** 02 ஆண்டு **-** 01 மாதம் **-** 09 நாட்கள்

வெளிநாடு சென்றது: டிசம்பர் 1994 – லண்டன் – சந்திரதசா – சந்திரபுத்தி-

சனி அந்தரத்தில் - 09.11.94 – 27.12.94

போன் / செல் : 97422 74635 - பணி – நிரந்தரத் தங்கல்

	ல/சந் **கு** **கே** மா	**சூ** **பு** **சுக்**	
	ராசி		**செவ்** **சனி**
		ரா	

ரா	**சூ**		
சுக்	**நவாம்சம்**		
பு			**ல/** **சனி**
		செவ் **கு**	**சந்** **கே** மா

ஆய்வு விதி எண்: **2 – 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி குரு, இலக்கினத்தில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திரதசா - சந்திர புத்தி – சனி அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

இலக்கினாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 03 - ஆய்வுச் சாதகம் : 14

சாதகர் பெயர் : G. அன்பழகன்,

பிறந்த தேதி : 14.05.1963 பிறந்த நேரம் : 05.00 காலை

பிறந்த ஊர் : நன்னிலம் இலக்கினம் : மேடம்

இராசி : தனுசு நட்சத்திரம் : உத்திராடம் - 1

தசா புத்தி : **சூரியதசா** 05 ஆண்டு - 04 மாதம் - 22 நாட்கள்

வெளிநாடு சென்றது: 10.08.1986 – மலேசியா – ராகுதசா –

ராகுபுத்தி – சனி அந்தரம் - 12.07.1986 – 15.12.1986 – சுற்றுலாப்

பயணம் - போன் / செல் :

கு	**ல/ சூ சுக்**	**பு** வ			**செவ்**	**சுக்**		மா
	ராசி		**செவ் ரா**		**பு**	**நவாம்சம்**		**ரா**
சனி கே					**கே**			**ல/**
சந் மா					**சூ சந்**	**கு**		**சனி**

ஆய்வு விதி எண்: **2 – 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி குரு, பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகுதசா - இராகுபுத்தி – சனிஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் சுற்றுலா நிமித்தமாக வெளிநாடு பயணம் செய்தார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 04 - ஆய்வுச் சாதகம் : 17

சாதகர் பெயர் : B. நாகேந்திரராஜு

பிறந்த தேதி : 05.01.1971 பிறந்த நேரம் : 12.30 பகல்

பிறந்த ஊர் : வைசாக் இலக்கினம் : மேடம்

இராசி : மேடம் நட்சத்திரம் : அசுவனி - 2

தசா புத்தி : **கேதுதசா** 04 ஆண்டு - 05 மாதம் - 19 நாட்கள்

வெளிநாடு சென்றது: நவம்பர் 2008 – சிங்கப்பூர் – சந்திரதசா – சந்திரஅந்தரத்தில் - 22.11.2008 – 10.12.2008 - சுற்றுலாப் பயணம்

போன் / செல் : 72878 80555

	ல/ **சந்** மா **சனி**வ					**கே**	**ல/** **சந்** **செவ்** **புத**	
ரா	**ராசி**				மா	**நவாம்சம்**		
			கே					**குரு** **சுக்**
சூரி **புத**வ	**குரு** **சுக்**	**சேவ்**					**சூரி** **சனி** **ரா**	

ஆய்வு விதி எண்: **1 – 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி இலக்கினத்தில் சனி, சந்திரன் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திரதசா – சந்திரஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் சுற்றுலா நிமித்தமாக வெளிநாடு பயணம் செய்தார்.

இலக்கினாதிபதி – சனி சம்பந்தம்

இடப இலக்கின சாதகங்கள்



k3429748 www.fotosearch.com

எடுத்துக்காட்டுச் சாதகம் - 05 - ஆய்வுச் சாதகம் : 30

சாதகர் பெயர் : M. ஸ்ரீரம்யா, B.E.,

பிறந்த தேதி : 09.09.1985 பிறந்த நேரம் : 23.45 இரவு

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : இடபம்

இராசி : மிதுனம் நட்சத்திரம் : திருவாதிரை - 4

தசா புத்தி : **ராகுதசா** 01 ஆண்டு – 05 மாதம் – 22 நாட்கள்

வெளிநாடு சென்றது: 28.11.2009 – 21.01.2011 – அமெரிக்கா – சுற்றுலா சென்றது - போன் / செல் :

சனிதசா – செவ்வாய்அந்தரம் - 24.11.2009 – 29.11.2009 - சனிதசா - செவ்வாய்அந்தரம் - 05.12.2010 – 11.02.2011 - சனிசூட்சுமம் - 28.12.2010 – 08.01.2011

	ரா மா	**ல/**	**சந்**		**சந் கே**	மா	**செவ் கு**	**சனி**
	ராசி		**சுக்**			**நவாம்சம்**		**பு**
கு வ			**சூ செவ் பு**		**சுக்**			**ல/**
		சனி கே				**சூ**		**ரா**

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி பனிரெண்டில் இராகு இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி செவ்வாய் அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனிதசாவிலும் - சனிசூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாக இருப்பதாலும் சுற்றுலா நிமித்தமாக வெளிநாடு பயணம் செய்தார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – இராகு சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 06 - ஆய்வுச் சாதகம் : 34

சாதகர் பெயர் : Ch. நிர்மலா,

பிறந்த தேதி : 20.10.1963 பிறந்த நேரம் : 21.15 இரவு

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : இடபம்

இராசி : விருச்சிகம் நட்சத்திரம் : அனுசம் - 2

தசா புத்தி : **சனிதசா** 03 ஆண்டு – 05 மாதம் – 01 நாட்கள்

வெளிநாடு சென்றது: 28 அக்டோபர் 2011 – சிங்கப்பூர் – Tourist Visit - போன் / செல் : சுற்றுலா சென்றது – சுக்கிரதசா – சனி புத்தியில் (29.09.11 – 20.03.12)

கு வ		ல/	ரா மா		சுக்	ரா		
	ராசி					நவாம்சம்		செவ் பு சனி
சனி வ								
கே	சந் செவ்	சூ சுக்	பு		கு மா		சூ கே	ல/ சந்

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி ஒன்பதில் சனி இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி சனி அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி தசாவிலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாக இருப்பதாலும் சுற்றுலாவாக வெளிநாடு பயணம் செய்தார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 07 - ஆய்வுச் சாதகம் : 35

சாதகர் பெயர் : R. கருணாகரன்

பிறந்த தேதி : 01.07.1978 பிறந்த நேரம் : 03.00 காலை

பிறந்த ஊர் : பாண்டி இலக்கினம் : இடபம்

இராசி : மேடம் நட்சத்திரம் : பரணி - 4

தசா புத்தி : **சுக்கிரதசா** 02 ஆண்டு – 02 மாதம் – 19 நா

வெளிநாடு சென்றது: 22.08.2004 – அமெரிக்கா – Job - Settled

போன் / செல் : இராகுதசா - இராகு புத்தியில் - சனிஅந்தரம் - 25.06.2004 – 28.11.2004

கே	**சந்** மா	**ல/**	**சூ** **கு**
	ராசி		**பு** **சுக்**
			செவ் **சனி**
			ரா

ரா	**கு**	**சனி**	
ல/ **சூ** **சுக்**	**நவாம்சம்**		**பு** மா
			செவ்
	சந்		**கே**

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி 12இல் சந்திரன் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி 9ஆமாதி சனிஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகுதசா, இராகுபுத்தி, சனிஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாக இருப்பதாலும் பணி நிமித்தமாக வெளிநாடு பயணம் செய்தார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 08 - ஆய்வுச் சாதகம் : 51

சாதகர் பெயர் : ராம்மோகன்

பிறந்த தேதி : 13.12.1996 பிறந்த நேரம் : 16.56 மாலை

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : இடபம்

இராசி : மகரம் நட்சத்திரம் : உத்திராடம் - 3

தசா புத்தி : **சூரியதசா** 01 ஆண்டு – 11 மாதம் – 09 நாட்கள்

வெளிநாடு சென்றது: நவம்பர் 2015 – அபுதாபி - Job – Settled – UAE - போன் / செல் :0971 529530517 – செவ்வாய்தசா – சந்திரபுத்தி –24.04.2015 – 23.11.2015 –

சனி கே		**ல/**			**சூ**	**ரா**		**ல/**
	ராசி				**சந்**	**நவாம்சம்**		**சுக்**
சந்			**செவ்**					
பு கு மா	**சூ சுக்**		**ரா**		**செவ் கு** மா		**கே**	**பு சனி**

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி ஒன்பதில் சந்திரன் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி செவ்வாய் தசாவிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திர புத்தியிலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாக இருப்பதாலும் பணி நிமித்தமாக வெளிநாடு பயணம் செய்தார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

மிதுனஇலக்கின

சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 09 - ஆய்வுச் சாதகம் : 56

சாதகர் பெயர் : V. வைத்தியநாதன், M.Sc.,M.S.,

பிறந்த தேதி : 19.07.1979 பிறந்த நேரம் : 04.30 காலை

பிறந்த ஊர் : நெல்லை இலக்கினம் : மிதுனம்
இராசி : இடபம் நட்சத்திரம் : கார்த்திகை - 2

தசா புத்தி : **சூரியதசா** 03 ஆண்டு – 00 மாதம் – 24 நாட்கள்

வெளிநாடு சென்றது: 15.07.2000 – அமெரிக்கா – Job & Settled

போன் / செல் : பணி செய்வதற்காக – ராகுதசா – ராகுபுத்தி – சனிஅந்தரம் 18.05.2000 – 21.10.2000 - சுக்கிரசூட்சுமம் - 13.07.2000 – 08.08.2000

		சந் செவ்	**ல/ சுக்** மா		**கே**	**சுக்**		
கே	**ராசி**		**சூ பு** வ **கு**			**நவாம்சம்**		**சூ செவ்**
			சனி ரா		**சந் பு கு** மா			
					ல/			**சனி ரா**

ஆய்வு விதி எண்: **1 – 2, 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டில், சந்திரன் அமைவதாலும்,

ஆய்வு விதி எண்.2ன்படி பனிரெண்டாமாதி சுக்கிரன் இலக்கினத்திலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி சனி அந்தரம், பனிரெண்டாமாதி சுக்கிர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி ராகுதசா, ராகுபுத்தி, சனிஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் பணி நிமித்தமாக வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 10 - ஆய்வுச் சாதகம் : 60

சாதகர் பெயர் : சூரிபாலா, B.E.,M.S.,

பிறந்த தேதி : 07.01.1972 பிறந்த நேரம் : 17.45 மாலை

பிறந்த ஊர் : பெங்களுரு இலக்கினம் : மிதுனம்

இராசி : கன்னி நட்சத்திரம் : அஸ்தம் - 1

தசா புத்தி : **சந்திரதசா** 08 ஆண்டு – 11 மாதம் – 20 நா

வெளிநாடு சென்றது: 25.06.1993 – அமெரிக்கா – Job - Settled in USA - போன் / செல் : ராகுதசா - சனிபுத்தி – ராகுசூட்சுமம் - 01.06.1993 – 25.06.1993 சனிஅந்தரம் - 03.02.1993 – 17.07.1993

செவ்		**சனி**வ	**ல/**		**ல/**	**சந் பு கு ரா**		
	ராசி		**கே**		**சனி**	**நவாம்சம்**		
சுக் ரா மா								**சுக்**
சூ பு கு			**சந்**			**செவ்**	**சூ கே**	மா

ஆய்வு விதி எண்: **1 – 2, 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டில் சனி அமைவதாலும்,

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி சனி பனிரெண்டில் அமைவதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி சனி புத்தியிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகுதசா, சனிபுத்தி, இராகு சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 11 - ஆய்வுச் சாதகம் : 66

சாதகர் பெயர் : சித்தார்த்

பிறந்த தேதி : 03.08.1985 பிறந்த நேரம் : 03.54 காலை

பிறந்த ஊர் : கட்டாக் இலக்கினம் : மிதுனம்

இராசி : கும்பம் நட்சத்திரம் : சதயம் - 2

தசா புத்தி : **ராகுதசா** 11 ஆண்டு – 03 மாதம் – 21 நாட்கள்

வெளிநாடு சென்றது: 22.09.2012 – லண்டன் – Job - Settled in London - போன் / செல் : குருதசா – ராகுபுத்தி – சந்திரஅந்தரம் - 23.07.2012 – 04.10.2012 – சுக்கிரசூட்சுமம் - 18.09.2012 – 30.09.2012

	ரா	மா	**ல/ சுக்**
சந்	**ராசி**		**சூ செவ்**
கு வ			**பு** வ
		சனி கே	

ல/	**பு கே** மா		**கு சனி**
	நவாம்சம்		
சந்			
சூ சுக்		**செவ் ரா**	

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி பனிரெண்டாமாதி சுக்கிரன், இலக்கினத்திலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சுக்கிர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகு புத்தியிலும், சந்திர அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சந்திர சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 12 - ஆய்வுச் சாதகம் : 78

சாதகர் பெயர் : சுதர்சன்

பிறந்த தேதி : 28.05.1988 பிறந்த நேரம் : 08.25 காலை

பிறந்த ஊர் : சேலம் இலக்கினம் : மிதுனம்

இராசி : துலாம் நட்சத்திரம் : சித்திரை - 3

தசா புத்தி : **செவ்வாய்தசா** 02 ஆண்டு – 02 மாதம் – 08 நா

வெளிநாடு சென்றது: நவம்பர் 2011 – **நியுயார்க் – பிறப்பு** – Settle in USA - போன் / செல் : 94458 60156 - குருதசா – சனிபுத்தி – சனிசூட்சுமம் - 28.11.2011 – 23.12.2011 – சுக்கிரஅந்தரம் - 21.08.2011 – 23.01.2012

	கு	**சூ** மா	**ல/** **பு** **சுக்**		**ல/**	**சூ**	**ரா**	**சனி**
செவ் **ரா**	**ராசி**					**நவாம்சம்**		
			கே					மா
சனி		**சந்**			**செவ்**	**சுக்** **கு** **கே**	**சந்** **பு**	

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி பனிரெண்டாமாதி சுக்கிரன், இலக்கினத்திலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சுக்கிர அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி புத்தியிலும், சனி சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாட்டில் பிறந்து இந்தியா போன்ற வெளிநாடுகளுக்கு பயணம் செய்து வருகிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – இராகு சம்பந்தம்

கடக இலக்கின சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 13 - ஆய்வுச் சாதகம் : 92

சாதகர் பெயர் : வெங்கட்

பிறந்த தேதி : 02.09.1972 பிறந்த நேரம் : 03.45 காலை

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : கடகம்

இராசி : மிதுனம் நட்சத்திரம் : மிருகசீரிசம் - 4

தசா புத்தி : **செவ்வாய்தசா** 01 ஆண்டு – 03 மாதம் - 08 நா

வெளிநாடு சென்றது: மார்ச் 1999 – லண்டன் – Job - Settled

போன் / செல் : 44 – 7784930963 - குருதசா – சந்திரஅந்தரம் - சனி சூட்சுமம் - 02.03.1999 – 07.03.1999 – குருதசா – 11.12.1991 – 11.12.2007

		சனி	**சந்** மா			**பு**	**கு**	
	ராசி		**ல/ சுக் கே**			**நவாம்சம்**		**சுக் கே**
ரா			**சூ பு செவ்**		**ரா** மா			**சூ சனி**
கு						**ல/ சந்**		**செவ்**

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி சந்திரன் பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி குரு தசாவிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திரஅந்தரம், சனிசூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், இலக்கினத்துக்கு, பனிரெண்டாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 14 - ஆய்வுச் சாதகம் : 94

சாதகர் பெயர் : J. கார்த்திக், B.E.,

பிறந்த தேதி : 28.04.1984 பிறந்த நேரம் : 10.30 காலை

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : கடகம்

இராசி : மீனம் நட்சத்திரம் : உத்ரட்டாதி - 3

தசா புத்தி : **சனிதசா** 06 ஆண்டு – 03 மாதம் - 16 நாட்கள்

வெளிநாடு சென்றது: 15.06.2007 – அமெரிக்கா – Job - Settled in USA – புதன்தசா – சனிபுத்தி – 05.12.2004 – 15.08.2007 - குருஅந்தரம் - 06.04.2007 – 15.08.2007 - போன் / செல்

சந்	**சூ** **பு** வ **சுக்** மா	**ரா**			**சனி**	**சுக்**	**பு** **ரா**	
	ராசி		**ல/**			**நவாம்சம்**		**செவ்**
								சூ
கு	**செவ்**வ **கே**	**சனி**வ				**ல/** **கே** மா	**சந்**	**கு**

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி சந்திரன் ஒன்பதில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி குருஅந்தரம், பனிரெண்டாமாதி புதன் தசாவிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி புதன்தசா, சனிபுத்தியிலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 15 - ஆய்வுச் சாதகம் : 95

சாதகர் பெயர் : கிருஷ்ணன் தியாகராஜன், B.E., M.S.,

பிறந்த தேதி : 30.03.1976 பிறந்த நேரம் : 14.00 பகல்

பிறந்த ஊர் : சிவகங்கை இலக்கினம் : கடகம்

இராசி : மீனம் நட்சத்திரம் : உத்ரட்டாதி - 3

தசா புத்தி : **சனிதசா** 06 ஆண்டு – 02 மாதம் - 03 நாட்கள்

வெளிநாடு சென்றது: 03.12.2003 – 07.05.2010 - அமெரிக்கா – Tourist visa - போன் / செல் : கேதுதசா – குருபுத்தி - 02.05.2003 – 27.04.2004 – ராகுசூட்சுமம் - 26.11.1003 – 05.12.20

சூ சந் பு	**கு கே**		**செவ்**
சுக்	**ராசி**		**ல/ சனி** மா
		ரா	

	ரா	**சுக்**	**கு**
	நவாம்சம்		**சனி**
செவ்			மா
	சூ பு	**ல/ சந் கே**	

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி சந்திரன் ஒன்பதில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி குருபுத்தியிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகு சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

இலக்கினாதிபதி – சனி சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 16 - ஆய்வுச் சாதகம் : 111

சாதகர் பெயர் : நாகராஜ்

பிறந்த தேதி : 21.12.2013 பிறந்த நேரம் : 19.43 மாலை

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : கடகம்

இராசி : கடகம் நட்சத்திரம் : ஆயில்யம் - 2

தசா புத்தி : **புதன்தசா** 10 ஆண்டு – 10 மாதம் - 15 நாட்கள்

வெளிநாடு சென்றது: ஏப்ரல் 2014 – அபுதாபி – Job - Settled –

புதன்தசா – சுக்க ராகுஅந்தரம் - 31.03.14 – 16.05.14 –

புதன்சூட்சுமம் – 20.04.14 – 27.04.2014 போன் / செல் : 96894 67044

	கே		கு வ			**பு செவ் கு**	**சூ சனி**	
	ராசி		**ல/ சந்**		**சுக்**	**நவாம்சம்**		**ல/ கே**
சுக்			மா		**சந் ரா**			
சூ பு		**சனி ரா**	**செவ்**		மா			

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி குரு பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி புதன்சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகுஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், இலக்கினத்துக்கு, பனிரெண்டாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

இலக்கினாதிபதி – சந்திரன் சம்பந்தம்

சிம்ம இலக்கின சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 17 - ஆய்வுச் சாதகம் : 114

சாதகர் பெயர் : ஜேம்ஸ்

பிறந்த தேதி : 04.10.1969 பிறந்த நேரம் : 04.50 காலை

பிறந்த ஊர் : சேலம் இலக்கினம் : சிம்மம்

இராசி : மிதுனம் நட்சத்திரம் : புனர்பூசம் - 1

தசா புத்தி : **குருதசா** 12 ஆண்டு – 09 மாதம் - 10 நாட்கள்

வெளிநாடு சென்றது: ஜுன் 1993 – துபாய் – Job - Settled in Dubai

போன் / செல் : 0971 – 523490971 - சனிதசா – சந்திரபுத்தி – சந்திர அந்தரம் - சந்திர சூட்சுமம் - 18.06.1993 – 22.06.1993

	சனி		**சந்**		**பு**	**சந்**	**ரா**	**சூ**
ரா	**ராசி**		மா			**நவாம்சம்**		**கு**
			ல/ சுக் கே					**செவ் சனி**
செவ்			**சூ பு கு**			**ல/ கே**		**சுக்** மா

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி ஒன்பதில் சனி இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சந்திர புத்தியிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி தசா – சந்திர புத்தி – சந்திர அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 18 - ஆய்வுச் சாதகம் : 124

சாதகர் பெயர் : R. சந்திர சேகர்

பிறந்த தேதி : 18.01.1973 பிறந்த நேரம் : 21.20 இரவு

பிறந்த ஊர் : தூத்துக்குடி இலக்கினம் : சிம்மம்

இராசி : கடகம் நட்சத்திரம் : புனர்பூசம் - 4

தசா புத்தி : **குருதசா** 01 ஆண்டு – 10 மாதம் - 25 நாட்கள்

வெளிநாடு சென்றது: 01.10.1998 – சிங்கப்பூர் – Job - Settled -

புதன்தசா – ராகுஅந்தரம் – 15.05.1998 – 18.10.1998 –

சந்திரசூட்சுமம் - 26.09.1998 – 09.10.1998 - போன் / செல்

		சனி வ	**கே**			**கே**		
	ராசி		**சந்**		**சூ**	**நவாம்சம்**		**சந் சனி**
சூ			**ல/**		மா			**சுக்**
பு கு சுக் ரா	**செவ்** மா				**செவ் பு கு**		**ரா**	**ல/**

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி பனிரெண்டில் சந்திரன் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சந்திரசூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி ராகுஅந்தரம் - சந்திர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 19 - ஆய்வுச் சாதகம் : 125

சாதகர் பெயர் : R. கார்த்திகா

பிறந்த தேதி : 30.04.1980 பிறந்த நேரம் : 14.41 மாலை

பிறந்த ஊர் : ராஜபாளையம் இலக்கினம் : சிம்மம்

இராசி : துலாம் நட்சத்திரம் : சுவாதி - 4

தசா புத்தி : **இராகுதசா** 03 ஆண்டு – 07 மாதம் - 08 நாட்கள்

வெளிநாடு சென்றது: 23.09.2004 – சிங்கப்பூர் – Job - Settled in Singapore - போன் / செல் : சனிதசா – இராகுபுத்தி - (12.06.2004 – 07.11.2004)

	சூ பு	**சுக்**			**சந்**	**பு ரா**	**செவ்**	**கு**
கே	**ராசி**		மா			**நவாம்சம்**		
			ல/செவ் கு ரா சனிவ					**சூ** மா
		சந்			**சனி**		**ல/ கே**	**சுக்**

ஆய்வு விதி எண்: **2 – 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினத்தில் ஒன்பதாமாதி செவ்வாய் இருப்பதாலும்

ஆய்வு விதி எண்.4ன்படி சனி தசா – இராகு அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், பனிரெண்டாமிடம் நீர்ராசியாகவும் இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

இலக்கினாதிபதி – இராகு சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 20 - ஆய்வுச் சாதகம் : 131

சாதகர் பெயர் : பாத்திமா நிஷா

பிறந்த தேதி : 27.04.1976 பிறந்த நேரம் : 14.30 மாலை

பிறந்த ஊர் : பாண்டி இலக்கினம் : சிம்மம்

இராசி : மீனம் நட்சத்திரம் : ரேவதி - 2

தசா புத்தி : **புதன்தசா** 10 ஆண்டு – 11 மாதம் - 10 நாட்கள்

வெளிநாடு சென்றது: 23.09.2004 – பாரிஸ் – Job - Settled in Parrys

போன் / செல் : சந்திரதசா – குருபுத்தி – சனி அந்தரம் - 08.06.2004 – 07.02.2007 – சந்திரசூட்சுமம் - 12.01.2005 – 25.01.2005

சந் சுக்	**சூ கு கே**	**பு**	**செவ்**		**சுக் ரா**	மா	**செவ்**	
	ராசி		**சனி**		**பு**	**நவாம்சம்**		
			ல/ மா		**சந்**			**சூ கு சனி**
		ரா						**ல/ கே**

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாபதி சூரியன், ஒன்பதில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சந்திர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனிஅந்தரம் – சந்திர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், பனிரெண்டாமிடம் நீர்ராசியாகவும் இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

கன்னிஇலக்கின சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 21 - ஆய்வுச் சாதகம் : 133

சாதகர் பெயர் : K. பிரபு, B.PT., (Physiotherapist)

பிறந்த தேதி : 17.07.1978 பிறந்த நேரம் : 12.00 பகல்

பிறந்த ஊர் : வேலூர் இலக்கினம் : கன்னி

இராசி : விருச்சிகம் நட்சத்திரம் : கேட்டை - 2

தசா புத்தி : **புதன்தசா** 12 ஆண்டு – 05 மாதம் - 11 நாட்கள்

வெளிநாடு சென்றது: 02.02.2015 – கனடா – Job - Settled in Canada - சுக்கிரதசா – புதன்புத்தி – 28.12.2013 – 27.10.2016

போன் / செல் :

கே			**கு**		**பு**		**கு சனி**	
	ராசி		**சூ பு**		**ரா**	**நவாம்சம்**		**சூ சுக்**
			செவ் சுக் சனி		**சந்**			**கே**
	சந் மா		**ல/ ரா**			**செவ்**	மா	**ல/**

ஆய்வு விதி எண்: **2 – 3**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி சுக்கிரன், பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி சுக்கிரதசாவிலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 22 - ஆய்வுச் சாதகம் : 137

சாதகர் பெயர் : சிரவாணி ஸ்ரீநிவாஸ்

பிறந்த தேதி : 16.08.1996 பிறந்த நேரம் : 08.46 காலை

பிறந்த ஊர் : காக்கிநாடா இலக்கினம் : கன்னி

இராசி : சிம்மம் நட்சத்திரம் : பூரம் - 2

தசா புத்தி : **சுக்கிரதசா** 10 ஆண்டு – 04 மாதம் - 28 நாட்கள்

வெளிநாடு சென்றது: அக்டோபர் 2013 – சைனா – Studies to China - போன் / செல் : சந்திரதசா – சந்திரபுத்தி – சனி சூட்சுமத்தில் - 11.10.2013 – 19.10.2013

சனிவ **கே**			**செவ் சுக்**		**சூ**	**ல/ செவ்**	**ரா**	
	ராசி		**சூ**		**சுக்** மா	**நவாம்சம்**		
			சந் பு					**கு**
கு வ			**ல/ ரா** மா			**பு கே**	**சனி**	**சந்**

ஆய்வு விதி எண்: **2 – 3, 4**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி புதன், பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி சுக்கிர அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திர தசா – சந்திர புத்தி - சனி சூட்சுமத்திலும், வெளிநாடு பயணம் செய்து அங்கே கல்வி கற்று, அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 23 - ஆய்வுச் சாதகம் : 141

சாதகர் பெயர் : பில்மா

பிறந்த தேதி : 23.09.1984 பிறந்த நேரம் : 07.11 காலை

பிறந்த ஊர் : புனா இலக்கினம் : கன்னி

இராசி : சிம்மம் நட்சத்திரம் : மகம் - 3

தசா புத்தி : **கேதுதசா** 03 ஆண்டு – 02 மாதம் - 20 நாட்கள்

வெளிநாடு சென்றது: 06.07.2008 – லண்டன் – Job – Settled in London - போன் / செல் : சூரியதசா – சந்திரஅந்தரம் - சனிஅந்தரம் - 18.06.2008 – 17.07.2008 – சந்திரசூட்சுமம் - 05.07.2008 – 07.07.2008

		ரா	
மா	**ராசி**		
			சந் பு
கு	**செவ் கே**	**சுக் சனி**	**ல/ சூ**

செவ் சனி ரா			**ல/ சந்**
சூ	**நவாம்சம்**		**கு**
மா			
		பு சுக்	**கே**

ஆய்வு விதி எண்: **2 – 3, 4**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி புதன், பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சூரிய தசாவிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திரபுத்தி – சனி அந்தரம் - சந்திர சூட்சுமத்திலும், வெளிநாடு பயணம் செய்து அங்கே கல்வி கற்று, அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 24 - ஆய்வுச் சாதகம் : 147

சாதகர் பெயர் : சுஷ்மிதா

பிறந்த தேதி : 28.07.1989 பிறந்த நேரம் : 09.40 காலை

பிறந்த ஊர் : புனா இலக்கினம் : கன்னி

இராசி : இடபம் நட்சத்திரம் : ரோகிணி - 2

தசா புத்தி : **சந்திரதசா** 05 ஆண்டு – 10 மாதம் - 21 நாட்கள்

வெளிநாடு சென்றது: ஜுலை 2014 – லண்டன் – Job – Settled in London - ராகுதசா – 09.06.2002 09.06.2020 – சூரியஅந்தரம் - 28.06.2014 – 21.08.2016 - போன் / செல் : 99995 09079

		சந்	**கு**
ரா	**ராசி**		**சூ** **பு**
			சுக் **செவ்** **கே** மா
சனி			**ல/**

	செவ் **கே**	**சந்**	
	நவாம்சம்		**சுக்**
ல/ **பு**			**சனி** மா
	கு	**சூ** **ரா**	

ஆய்வு விதி எண்: **2 – 3, 4**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி சுக்கிரன், பனிரெண்டில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சூரியஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகுதசாவிலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

துலா இலக்கின சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 25 - ஆய்வுச் சாதகம் : 164

சாதகர் பெயர் : ரூபா மேத்தா

பிறந்த தேதி : 20.10.1979 பிறந்த நேரம் : 07.45 காலை

பிறந்த ஊர் : ஜோத்பூர் இலக்கினம் : துலாம்

இராசி : கன்னி நட்சத்திரம் : அஸ்தம் - 4

தசா புத்தி : **சந்திரதசா** 01 ஆண்டு – 07 மாதம் – 00 நா

வெளிநாடு சென்றது: 01.042004 – துபாய் – Job Software Engr. – Settled in UAE - போன் / செல் : ராகுதசா – சந்திரபுத்தி – ராகுஅந்தரம் - சந்திரசூட்சுமம் -28.03.2004 – 04.04.2004

					சுக்		**பு**	**ல/**
கே	**ராசி**		**செவ்**		மா	**நவாம்சம்**		**சந் கு ரா**
			கு சனி ரா		**செவ் கே**			
		ல/ சூ பு சுக்மா	**சந்**		**சனி**		**சூ**	

ஆய்வு விதி எண்: **2 – 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி பனிரெண்டாமாதி புதன் இலக்கினத்தில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகுதசா, சந்திரபுத்தியிலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் பணி நிமித்தமாக வெளிநாடு பயணம் அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 26 - ஆய்வுச் சாதகம் : 170

சாதகர் பெயர் : சுந்தரேசன்

பிறந்த தேதி : 22.07.1979 பிறந்த நேரம் : 13.32 மாலை

பிறந்த ஊர் : வேலூர் இலக்கினம் : துலாம்

இராசி : மிதுனம் நட்சத்திரம் : திருவாதிரை - 3

தசா புத்தி : **இராகுதசா** 05 ஆண்டு – 06 மாதம் – 09 நா

வெளிநாடு சென்றது: டிசம்பர் 2005 – அமெரிக்கா – Job on Project

போன் / செல் : 96000 42375 - சனிதசா – புதன்புத்தி -

ராகுஅந்தரம் - 08.08.2005 – 03.01.2006

		செவ்	**சந் சுக்**		**கே**		**ல/ சுக்**	
கே	**ராசி**		**சூ பு கு**		**சந்**	**நவாம்சம்**		மா
			சனி ரா		**பு கு**			**சூ செவ்**
மா		**ல/**						**சனி ரா**

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கனாதிபதி சுக்கிரன், ஒன்பதில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி 9-12ஆமாதி புதன் புத்தியிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி தசா – இராகுஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் பணி நிமித்தமாக வெளிநாடு பயணம் அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 27 - ஆய்வுச் சாதகம் : 175

சாதகர் பெயர் : ஆனந்த்

பிறந்த தேதி : 19.03.1983 பிறந்த நேரம் : 20.25 இரவு

பிறந்த ஊர் : வைசாக் இலக்கினம் : துலாம்

இராசி : இடபம் நட்சத்திரம் : கார்த்திகை - 3

தசா புத்தி : **சூரியதசா** 02 ஆண்டு – 11 மாதம் – 29 நாட்கள்

வெளிநாடு சென்றது: ஆகஸ்ட் 2012 – அமெரிக்கா – Job – Settled in USA - போன் / செல் : 001 – 732 – 9978888 - ராகுதசா – புதன் புத்தி – 27.02.2011 – 16.09.2013 - ராகுஅந்தரம் - 31.07.2012 – 18.12.2012

சூ செவ்	**சுக்**	**சந்**	**ரா**				**சுக் கே**	**பு**
பு	**ராசி**				**சந் செவ்**	**நவாம்சம்**		
					மா			**சூ**
கே	**கு** மா	**ல/ சனி**			**ல/ கு சனி**	**ரா**		

ஆய்வு விதி எண்: **1 – 2, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி ஒன்பதில் இராகு, இலக்கினத்தில் சனி இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி 9-12ஆமாதி புதன் புத்தியிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகு தசா – இராகுஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் பணி நிமித்தமாக வெளிநாடு பயணம் அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – இராகு சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 28 - ஆய்வுச் சாதகம் : 179

சாதகர் பெயர் : வாசு குட்டன்

பிறந்த தேதி : 28.04.1953 பிறந்த நேரம் : 18.00 மாலை

பிறந்த ஊர் : திருச்சூர் இலக்கினம் : துலாம்

இராசி : துலாம் நட்சத்திரம் : சுவாதி - 1

தசா புத்தி : **ராகுதசா** 17 ஆண்டு – 04 மாதம் – 21 நாட்கள்

வெளிநாடு சென்றது: 05.02.1989 – மஸ்கட் – Job – Lived in Muscat - போன் / செல் : சனிதசா – சனிபுத்தி – ராகுஅந்தரம் - 14.11.88 – 28.04.89 – புதன்சூட்சுமம் - 26.01.89 – 18.02.89

பு சுக்வ	**சூ**	**செவ் கு**				மா	**ரா**	
	ராசி		**கே**		**செவ் கு**	**நவாம்சம்**		
ரா			மா		**பு சுக்**			**சூ**
		ல/ சந்	**சனி**வ		**சந்**	**ல/ கே**		**சனி**

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி பனிரெண்டில் சனி, இலக்கினத்தில் சந்திரன் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி 9-12ஆமாதி புதன்சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி தசா – சனி புத்தி - இராகுஅந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் பணி நிமித்தமாக வெளிநாடு பயணம் செய்து பணி செய்து வந்தார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

விருச்சிக இலக்கின சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 29 - ஆய்வுச் சாதகம் : 185

சாதகர் பெயர் : R. அசோக், B.E.,

பிறந்த தேதி : 13.09.1981 பிறந்த நேரம் : 03.15 காலை

பிறந்த ஊர் : மன்னார்குடி இலக்கினம் : விருச்சிகம்

இராசி : கும்பம் நட்சத்திரம் : சதயம் - 3

தசா புத்தி : **ராகுதசா** 06 ஆண்டு – 10 மாதம் - 17 நாட்கள்

வெளிநாடு சென்றது: 14.10.2008 – அமெரிக்கா – Job - Settled in USA - போன் / செல்: சனிதசா – புதன்புத்தி – 04.08.2007 – 14.04.2010 - சந்திரஅந்தரம் - 17.09.2008 – 08.12.2008

							சனி	
சந் மா	**ராசி**		**செவ்** **ரா**		**சந்** **கே**	**நவாம்சம்**		**பு** **கு**
கே			**சூ**					**ரா**
	ல/	**சுக்**	**புத** **குரு** **சனி**		**சூ** **சுக்**	**செவ்**	மா	**ல/**

ஆய்வு விதி எண்: **2 – 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி செவ்வாய், ஒன்பதில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி தசா - சந்திர அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், பனிரெண்டாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – இராகு சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 30 - ஆய்வுச் சாதகம் : 187

சாதகர் பெயர் : P. அனுஷா, M.Sc., M.B.A

பிறந்த தேதி : 12.11.1988 பிறந்த நேரம் : 07.00 காலை

பிறந்த ஊர் : காக்கிநாடா இலக்கினம் : விருச்சிகம்

இராசி : விருச்சிகம் நட்சத்திரம் : கேட்டை - 3

தசா புத்தி : **புதன்தசா** 05 ஆண்டு – 09 மாதம் - 22 நாட்கள்

வெளிநாடு சென்றது: செப்டம்பர் 2012 – லண்டன் – Job - Settled in London - போன் / செல் : சுக்கிரதசா - குருபுத்தி – 05.11.2011 – 06.07.2014 - புதன்அந்தரம் - 15.08.2012 – 31.12.2012

செவ்		குருவ			**கு ரா**		**சூ சனி**	
ரா	**ராசி**				**சந் பு**	**நவாம்சம்**		**சுக்**
			கே					
சனி	**ல/ சந்** மா	**சூ புத**	**சுக்**					**ல/ செவ் கே** மா

ஆய்வு விதி எண்: **2 – 3, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி சந்திரன், இலக்கினத்தில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சுக்கிர தசாவிலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், பனிரெண்டாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

இலக்கினாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 31 - ஆய்வுச் சாதகம் : 189

சாதகர் பெயர் : R. பிரேமாவதி

பிறந்த தேதி : 13.12.1954 பிறந்த நேரம் : 06.06 காலை

பிறந்த ஊர் : கடையநல்லூர் இலக்கினம் : விருச்சிகம்

இராசி : கடகம் நட்சத்திரம் : பூசம் - 2

தசா புத்தி : **சனிதசா** 12 ஆண்டு – 07 மாதம் - 17 நாட்கள்

வெளிநாடு சென்றது: 04.01.1998 – நைஜீரியா – Tourist Trip

போன் / செல் : சுக்கிர தசா – செவ்வாய் புத்தி – 31.07.97 – 30.09.98 - சனிஅந்தரம் - 23.12.97 – 01.03.98

			கே
செவ்	**ராசி**		**சந்** குருவ
			மா
ரா	**ல/** **சூ** **புத**	**சுக்** **சனி**	

சூ	**சுக்** **சனி** மா		
	நவாம்சம்		**ரா**
ல/ **செவ்** **பு கே**			**கு**
			சந்

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி பனிரெண்டில் சனி, ஒன்பதில் சந்திரன் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி சுக்கிர தசாவிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், பனிரென்டாமிடம் காற்றுராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 32 - ஆய்வுச் சாதகம் : 197

சாதகர் பெயர் : ஆத்மநாதன்

பிறந்த தேதி : 10.10.2010 பிறந்த நேரம் : 10.10 காலை

பிறந்த ஊர் : சென்னை இலக்கினம் : விருச்சிகம்

இராசி : துலாம் நட்சத்திரம் : விசாகம் - 2

தசா புத்தி : **குருதசா** 09 ஆண்டு – 01 மாதம் - 03 நாட்கள்

வெளிநாடு சென்றது: ஆகஸ்ட் 2011 – UAE – Job - Settled in Oman - போன் / செல் : 96894670441 – சந்திர சூட்சுமம் - 23.08.2011 – 27.08.2011

குரு			**கே**		**சுக்**	**செவ்**	**சந்** **சனி** மா	**பு**
மா	**ராசி**					**நவாம்சம்**		**சூ** **கு** **ரா**
					ல/ **கே**			
ரா	**ல/**	**சந்** **செவ்** **சுக்**	**சூ** **புத** **சனி**					

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி சந்திரன், பனிரெண்டாம் பாவத்தில் அமைவதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி சந்திர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் சரராசியாகவும், இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம் நீர்ராசியாகவும், இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் காற்றுராசியாகவும் இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

தனுசுஇலக்கின சாதகங்கள்



k3402146 www.fotosearch.com

எடுத்துக்காட்டுச் சாதகம் - 33 - ஆய்வுச் சாதகம் : 210

சாதகர் பெயர் : A. சரோஜா,

பிறந்த தேதி : 05.04.1982 பிறந்த நேரம் : 01.10 காலை

பிறந்த ஊர் : டெல்லி இலக்கினம் : தனுசு

இராசி : சிம்மம் நட்சத்திரம் : மகம் - 3

தசா புத்தி : **கேதுதசா** 03 ஆண்டு – 02 மாதம் - 27 நாட்கள்

வெளிநாடு சென்றது: 13.06.2012 – நியுயார்க் – Job - Settled in USA - போன் / செல் : சந்திர தசா – செவ்வாய் புத்தி – 02.05.2012 – 01.12.2012 - ராகுஅந்தரம் - சந்திரசூட்சுமம் - 11.06.2012 – 14.06.2012

சூரி புத			**ரா**				**செவ் ரா**	**சந்**
சுக்	**ராசி**				**கு** மா	**நவாம்சம்**		
			சந்		**சூ**			**சனி**
ல/ கே	மா	**கு** வ	**செவ்**வ **சனி**வ			**பு சுக் கே**		**ல/**

ஆய்வு விதி எண்: **1 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.1ன்படி ஒன்பதில் சந்திரன் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி செவ்வாய் புத்தியிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சந்திர தசா, இராகுஅந்தரம், சந்திர சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு 9-12ஆமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

ஒன்பதாம் பாவாதிபதி – சந்திரன் சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 34 - ஆய்வுச் சாதகம் : 215

சாதகர் பெயர் : சுமதி

பிறந்த தேதி : 11.06.1956 பிறந்த நேரம் : 20.05 இரவு

பிறந்த ஊர் : திருச்சி இலக்கினம் : தனுசு

இராசி : கடகம் நட்சத்திரம் : பூசம் - 1

தசா புத்தி : **சனிதசா** 16 ஆண்டு – 01 மாதம் - 16 நாட்கள்

வெளிநாடு சென்றது: பிப்ரவரி 1977 – லண்டன் – H.W. - Settled after marriage - போன் / செல் : 44 – 7784930963 – சனிசூட்சுமம் - 08.02.77 – 04.03.77

		சூரி புத கே	**சுக்**வ		**பு**	**கு**	**கே**	
செவ்	**ராசி**		**சந்**		**சுக்**	**நவாம்சம்**		
மா			**கு**		**செவ்**			**சந் சனி**
ல/	**சனி**வ **ரா**				மா	**ரா**		**ல/ சூ**

ஆய்வு விதி எண்: **2 – 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாதிபதி குரு, ஒன்பதில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி இராகு அந்தரம் - சனி சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – இராகு சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 35 - ஆய்வுச் சாதகம் : 218

சாதகர் பெயர் : சாந்தகுமாரி

பிறந்த தேதி : 22.12.1987 பிறந்த நேரம் : 06.20 காலை

பிறந்த ஊர் : வேலூர் இலக்கினம் : தனுசு

இராசி : தனுசு நட்சத்திரம் : பூராடம் - 4

தசா புத்தி : **சுக்கிரதசா** 04 ஆண்டு – 08 மாதம் - 28 நாட்கள்

வெளிநாடு சென்றது: ஜனவரி 1995 – அமெரிக்கா – H.W. - Settled after marriage போன் / செல் : 98410 33863 –

செவ்வாய் தசா – சனி புத்தி - 31.01.2011 – 11.03.2012 -

செவ்வாய் தசா - 09.09.2008 – 10.09.2015

கு ரா						**சனி**	**ல/ சூ பு செவ்**	
	ராசி		மா		**சுக் கு கே**	**நவாம்சம்**		
சுக்								**ரா**
ல/ சந் சூ புத சனி		**செவ்**	**கே**			**சந்**	மா	

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி ஒன்பதாமாதி சூரியன், இலக்கினத்தில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி செவ்வாய் தசாவிலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி புத்தியிலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து அங்கேயே பணி செய்து வாழ்கிறார்.

இலக்கினாதிபதி – சனி சம்பந்தம்

எடுத்துக்காட்டுச் சாதகம் - 36 - ஆய்வுச் சாதகம் : 226

சாதகர் பெயர் : நித்யா தமிழ்வாணன்

பிறந்த தேதி : 16.08.1986 பிறந்த நேரம் : 15.00 பகல்

பிறந்த ஊர் : சிதம்பரம் இலக்கினம் : தனுசு

இராசி : தனுசு நட்சத்திரம் : பூராடம் - 1

தசா புத்தி : **சுக்கிரதசா** 19 ஆண்டு – 05 மாதம் - 18 நாட்கள்

வெளிநாடு சென்றது: அக்டோபர் 2011 – துபாய் – Job for 2 years

போன் / செல் : சூரிய தசா – சூரிய சூட்சுமம் - 26.10.2011 – 29.10.2011 - சனிஅந்தரம் - 26.09.2011 – 22.11.2011

	ரா				**சூ**	**ரா**	**சுக்**	**ல/ கு**
கு வ	**ராசி**		**சூரி புத**			**நவாம்சம்**		மா
			மா					**சந்**
ல/ சந் செவ்	**சனி**	**கே**	**சுக்**				**பு கே**	**செவ் சனி**

ஆய்வு விதி எண்: **2 – 3, 4, 5**

ஆய்வு விதி எண்.2ன்படி பனிரெண்டாமாதி செவ்வாய், இலக்கினத்தில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி ஒன்பதாமாதி சூரிய தசா, சூரிய சூட்சுமத்திலும்,

ஆய்வு விதி எண்.4ன்படி சனி அந்தரத்திலும்,

ஆய்வு விதி எண்.5ன்படி இலக்கினத்துக்கு பனிரெண்டாமிடம் நீர்ராசியாக இருப்பதாலும் வெளிநாடு பயணம் செய்து பணி செய்து விட்டு திரும்ப வந்துள்ளார்.

பனிரெண்டாம் பாவாதிபதி – சனி சம்பந்தம்

மகர இலக்கின சாதகங்கள்



எடுத்துக்காட்டுச் சாதகம் - 37 - ஆய்வுச் சாதகம் : 233

சாதகர் பெயர் : முகேஷ்

பிறந்த தேதி : 27.06.1981 பிறந்த நேரம் : 20.45 இரவு

பிறந்த ஊர் : சித்தூர் இலக்கினம் : மகரம்

இராசி : மேடம் நட்சத்திரம் : பரணி - 1

தசா புத்தி : **சுக்கிரதசா** 17 ஆண்டு – 08 மாதம் - 16 நாட்கள்

வெளிநாடு சென்றது: டிசம்பர் 2002 – ஜெர்மனி – Studies -

போன் / செல் : 96000 07573 – சூரியதசா – சனி புத்தியில் -

22.01.2002 – 04.01.2003 – குரு அந்தரம் - 19.11.2002 – 04.01.2003

மா	**சந்**	**செவ்**	**சூ பு**		**கு சனி கே**	**ல/**		
	ராசி		**சுக் ரா**			**நவாம்சம்**		**செவ்**
ல/ கே					**சூ**			**சந் சுக்**
			கு சனி			**பு**		**ரா** மா

ஆய்வு விதி எண்: **2 – 3, 4**

ஆய்வு விதி எண்.2ன்படி இலக்கினாபதி சனி ஒன்பதில் இருப்பதாலும்,

ஆய்வு விதி எண்.3ன்படி பனிரெண்டாமாதி குரு அந்தரத்திலும்,

